பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 05 வெள்ளிக்கிழமை (22.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 330

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இறுதியில் ஐ.நாவிடம்

## விசாரணைகள் முடிந்ததும் ஒப்படைப்பு என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஒக்.22

**ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையிடமும் சர்வதேச சமூகத்திடமும் கையளிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அமைச்சர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சர்வதேச மன்னிப்புச்சபை, சர்வதேச நெருக்கடிகள் குழு, மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகிய மூன்று அமைப்புகள் ஒரே நேரத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு முன்னால் சாட்சியமளிக்க மறுப்புத் தெரிவித்து கடிதம் எழுதியுள்ளன. இதற்குப் பின்னால் ஓர் இனந் தெரியாத சக்தி செயற்பட்டுள்ளது.

இந்த அமைப்புகள் வெவ்வேறு நாடுகளில் தலைமையகங்களைக் கொண்டுள்ளன. இவை ஒரே மாதிரியான கடிதத்தை நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு ஒரே நேரத்தில் அனுப்பி வைத்துள்ளன. இது சந்தேகத்தை வலுப்படுத்துகின்றது. இதற்குப் பின்னாலுள்ள சக்தியை விரைவில் நாம் கண்டறிவோம் - என்றார்.

ஷெல் குண்டுகள், பொஸ்பரஸ் (24 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகளுடன் மீண்டும் ஒரு படகு: இந்தோனேசியாவில் 87 பேர் கைது!



இந்தோனேசியாவின் - பெனைடன் தீவில் இலங்கையர்கள் 87 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இலங்கையிலிருந்து படகு மூலம் பெனைடன் தீவை அண்மித்த வேளையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என 'கல்ப் ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட குறித்த இலங்கையர்களிடமிருந்து எரிபொருள், உணவு மற்றும் தண்ணீர் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை நோக்கியே குறித்த இலங்கையர்கள் படகு மூலம் சென்றனர் எனவும், இவர்கள் கடந்த ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி தமது பயணத்தை ஆரம்பித்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட இலங்கையர்களிடம் இந்தோனேசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

### உள்ளே

**வடக்கில் 2000 சதுர கிலோ மீற்றரில் கண்ணிவெடிகள்**
வடக்கில் இன்னும் 2000 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவிலான பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டும் பக்கம் 2

**சுற்றுலாவுக்கு ஏற்ற நாடு இலங்கை**
சுற்றுலாவுக்கு ஏற்ற நாடுகளாகத் தெரிவாகியுள்ள 31 நாடுகளில் இலங்கை முதலிடத்தைப் பிடித்துக்கொண்டது. பக்கம் 03

**போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரே புலிகள் சிதறடிக்கப்பட்டனர்.**
2002 ஆம் ஆண்டு அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரே புலிகள் சிதறடிக்கப்பட்டனர். பக்கம் 04

## எழுத்து மூலமான சாட்சியங்களை கோருகிறது ஐ.நா. நிபுணர் குழு

### மின்னஞ்சல் மூலமும் அனுப்ப முடியும்

கொழும்பு, ஒக்.22

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசா ரணை செய்து ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ - மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு சர் வதேச ரீதியில் எழுத்து மூலம் சாட்சி யங்களைக் கோரியுள்ளது. சாட்சியங்களை panelofexpertsregistry@un.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். சாட்சியங்களைஎழுத்து மூலம் சமர்ப்பிப்போர் பத்துப் பக்கங்களுக்கு (24 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் சம்பளம் விரைவில் அதிகரிக்கும்

கொழும்பு,ஒக்.22

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கான சம்பளத்தை இன்னும் சில நாள்களில் அதிகரிக்கத்திட்டமிடப்படுடுள்ளதாக ஜனாதிபதிசெயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை நீதிச் சேவையைச் சேர்ந்த பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதியரசர்கள், மேன் (24 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு அவசியம்

### பீரிஸிடம் பிரிட்டிஷ் அமைச்சர் வலியுறுத்து

லண்டன், ஒக்.22

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என பிரிட்டிஷ் அரசு இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹக்கை இலங்கை வெளிவிவகார அமைச் சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நேற்று முன்தினம் சந்தித் தார்.

அப்போதே அரசியல் தீர்வு குறித்து வலியுறுத்தப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு பற்றியும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. இந்த ஆணைக்குழு ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், அனைத்துலக சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை இலங்கை அரசு நியாயபூர்வமாகவும், சுயாதீனமாகவும் விசாரணை செய்ய வேண்டும் எனவும் பிரிட்டிஷ் அமைச்சர் வலியுறுத்தினார்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் மணவாழ்வின் இனிய தொடக்கம் இங்கேயே ஆரம்பிக்கட்டும்!
திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்
போஸ்கோ
பரகத் றேடிங் கம்பனி
இல.388,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். பஸ் நிலையம் முன்பாக)

## நீர்ப்பாசனத் திட்டங்களை விஸ்தரிக்கும்போது சிறுபான்மையினரையும் கவனத்தில் கொள்க!

### சபையில் சம்பந்தன் கோரிக்கை



கொழும்பு, ஒக். 22

தேசிய ரீதியிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் விஸ்தரிக்கப்படும் போது அப்பிரதேசங்களில் வாழும் சிறுபான்மை மக்களும் பயனடையக் கூடியதாக அமையவேண்டும்.

வடக்கே மகாவலி அபிவிருத்தித் திட்டங்கள் (24 ஆம் பக்கம் பார்க்க)

விசேட விலையில் சர்வதேச நாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
Metro Travels & Tours (PVT) Ltd
தொடர்புகளுக்கு: 0215673555/666
Fax: 021 222 0404
E-Mail: info@metrotravels.lk

1 சதவீதம் வரையில் ஆகக்குறைந்த வட்டி!
உங்கள் அவசரப் பணத்தேவைகளின் போது, 1 சதவீதம்* வரையில் ஆகக்குறைந்த வட்டி வீதத்தில், பவுனுக்கு அதிகூடிய பெறுமதியை வழங்கும் லிஸ்வின் அடகுச்சேவை மூலம், உங்கள் குறுங்கால பணத்தேவையை இன்றே நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.
LISVIN INVESTMENTS LIMITED
லிஸ்வின் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடட், இல. 56/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0777 997998 Web: www.lisvin.com | E-mail: lisvin@lisvin.com
குத்தகை | வாடகைக் கொள்வனவு | கடன் | விலைப் பட்டியலிடுதல் | அடகு
அங்கீகாரம் பெற்ற விசேடமான நிதிக் குத்தகை நிறுவனம். 2000 ஆம் ஆண்டு 56 ம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
*நிபந்தனைகள் உள்ளடங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அமைச்சர்களான மில்றோய், டியூ நாளை பளைப் பிரதேசத்துக்கு விஜயம்

## மீளக்குடியமராத மக்கள் மகஜர்கள் கையளிப்பர்

தென்மராட்சி, ஒக்.22
பளைப் பிரதேசத்துக்கு மீள் குடியமர்வு அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ, சிறைச்சாலைகள் மறு வாழ்வு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ. குணசேகரா ஆகியோர் அமைச்சுக்களின் உயர் அதிகாரிகளுடன் நாளை சனிக்கிழமை விஜயம் செய்யவுள்ளனர்.

பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் தேவைகளைப் பார்வையிட வரும் அமைச்சர்கள் குழுவினரிடம் இதுவரை இப்பிரதேசத்தில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மகஜர் கையளிக்க உள்ளனர்.

பிரதேசத்தில் இதுவரை மக்களை மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பச்சிலைப் பள்ளி மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த முகமாலை, கிளாலி, இத்தாவில், வேம்பொடுகேணி, அல்லிப்பளை, கச்சார்வெளி, அரசர்கேணி ஆகிய கிராம அலுவர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் அப்பகுதியில் காணப்படும் வெடிப்பொருள்களை விரைவில் அகற்றி மக்களை மீளக் குடியமர அனுமதிக்கக் கோரி மகஜர்கள் அமைச்சர்களிடம் கையளிக்கவுள்ளனர்.

தற்போது மீளக்குடியமரும் மக்களுக்கு வழங்கப்படும் அனைத்து உதவிகளையும் மீளக்குடியமர்வுக்கு காத்திருக்கும் மக்களுக்கும் வழங்க வேண்டும் எனவும்-

பளைப் பிரதேசத்தில் யுத்த அனர்த்தங்களின் போது அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் குடியிருப்புகள் அழிவடைந்துள்ளதால் பங்கீட்டு அட்டை வேறுபாடின்றி அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் உதவி கிடைக்க வேண்டும்என வும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேச மக்கள் ஒன்றியமும், வடமாகாண தென்னை செய்கையாளர் சங்கமும் இணைந்து அமைச்சர்களுடனான சந்திப்பினை ஏற்பாடு செய்துள்ளன.

நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பளை நகர் பகுதியில் உள்ள தேவாலய முன்றிலில் நடத்தப்பட உள்ள இக் கூட்டத்துக்கு அனைவரையும் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 50 குடும்பங்களுக்கு சிறுதொழில் முயற்சிக்கான உதவிகள் வழங்கப்பட உள்ளதாகவும், இக் கூட்டத்தில் இதுவரை மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்கள் உட்பட அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த- 207)

## கலந்துரையாடல்

வட்டு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் ' சமூக, பொருளாதார மூலவளத் திரட்டு' என்னும் தலைப்பில் விழிப்புணர்வூட்டலும் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஸ்ரீ கணேச வாசிகசாலை கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற உள்ளது. (த - 10)

# சண்டிலிப்பாய் பாலம் புனரமைப்பு; நாளை முதல் வீதி மூடப்படுகிறது

## மாற்றுப் பாதைகளூடாகப் போக்குவரத்து

யாழ்ப்பாணம், ஒக். 22
சண்டிலிப்பாய் பாலத்தைப் புனரமைக்கும் பணிகளுக்காக யாழ்ப்பாணம் - மானிப்பாய்- காரைநகர் வீதியில் மானிப்பாய் சந்தியில் இருந்து சண்டிலிப்பாய் சந்திவரையான பகுதியை நாளை சனிக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடவுள்ளதாக யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் எந்திரி வி.சுதாகர் அறிவித்துள்ளார்.

எனவே பாவனையாளர்கள் மறு அறிவித்தல் வரும் வரை இந்தப் பாதைக்குப் பதிலாக மாற்றுப் பாதைகளை உபயோகிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார்.

இதன்படி மானிப்பாய் - கைதடி வீதி ஊடாக உடுவில் சந்தியை அடைந்து அங்கிருந்து டச்சு வீதி யூடாக சண்டிலிப்பாய் சந்தியை சென்றடைய முடியும் எனவும் இருமார்க்கப் பாதையாக இவற்றைப் பாவிக்கும் படியும் பிரதம பொறியியலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

மூடப்படவுள்ள இந்த வீதி வலி.மேற்கு மற்றும் வலி.தென்மேற்குப் பகுதிகளுக்கான பிரதான மார்க்கமாக உள்ளது.

காரைநகர், சங்கானை, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சுழிபுரம், பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, இளவாலை, பிரான்பற்று, தொட்டிலடி, கீரிமலை பகுதிகளுக்கான பஸ் சேவைகளும் இந்த மார்க்கம் ஊடாகவே சேவையில் ஈடுபடுகின்றன. நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான அரச ஊழியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த - 10)



அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட இலங்கை அகதிகள் 87 பேரை இந்தோனேஷியக் கடற் படையினர் நேற்று முன்தினம் கைது செய்து கொண்டு செல்லும் போது...

# யாழ்ப்பாணத்தில் 5 இடங்களில் மீண்டும் சுங்க அலுவலகங்கள்

## பணிப்பாளர் நாயகம் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.22
யாழ்.குடாநாட்டில் முன்னர் இயங்கிய ஐந்து சுங்க அலுவலகங்களையும் மீண்டும் செயற்படவைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக சுங்கத்துறை பணிப்பாளர் நாயகம் திருமதி சுதர்மா கருனாரத்ன அறிவித்துள்ளார்.

இதன்படி யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களில் 30 வருடங்களுக்கு முன்னர் இயங்கிய சுங்க அலுவலகங்களே மீள நிறுவப்பட உள்ளன.

இதில் யாழ்ப்பாணத்துக்கான சுங்க அலுவலகத்தை எதிர் வரும் ஜனவரி மாதத்தில் யாழ். பிரதம தபாலகத்தில் திறந்து வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்.சுங்க அலுவலகம் திறக்கப்பட்டதன் பின்னர் காங்கேசன்துறை சுங்க அலுவலகம் நிறுவப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

30 ஆண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணத்தில் சுங்க அலுவலகம் ஒன்று நிறுவப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவெனவும் இந்தச் சுங்க அலுவலகத்திற்கான இடவசதியை யாழ்.பிரதம தபால் கட்டடத்தில் ஒதுக்கித் தருவதற்கு தபாலதிபர் எம்.கே.பி.திசாநாயக்க இணங்கியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

யாழ்.குடாநாட்டில் தற்போது மக்களின் வாழ்க்கை சுமூக நிலைக்குத் திரும்பியுள்ளதையடுத்து மக்களுக்குத் தேவையான வசதிவாய்ப்புக்களை குறைவின்றி வழங்கும் குறிக்கோளுடனேயே சுங்க அலுவலகங்களை மீண்டும் நிறுவுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-22-26)

# 2000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் வடக்கில் இன்னும் கண்ணிவெடிகள்

கொழும்பு, ஒக்.22
புலிகளுடன் யுத்தம் இடம் பெற்ற பிரதேசத்தில் 1800 சதுர கிலோ மீற்றர் பரப்பளவிலான பிரதேசத்தில் தற்போது கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதுடன். இன்னும் 2000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவிலான பிரதேசத்தில் கண்ணி வெடிகளை அகற்ற இருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் உபய மெதவல தெரிவித்துள்ளார். வடக்கில் தற்போது 3,14,850 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டிருப்பதாகவும், அதனை விட அதிகமான அளவு கண்ணி வெடிகள் எதிர்காலத்தில் அகற்றப்பட வேண்டியிருப்பதாவும் அவர் தெரிவித்தார்.

தற்போது கண்ணி வெடி கள் அகற்றப்பட்டுள்ள பிரதேசம் முன்பு பொதுமக்களின் குடியிருப்புப் பகுதிகளாக இருந்த பிரதேசம் என்று குறிப்படும் அவர், விளை நிலங்கள் மற்றும் வன்னியின் காட்டுப் பிரதேசங்கள் என்பனவே தற்போது கண்ணி வெடியகற்றப்பட வேண்டிய பிரதேசமாக இருப்பதாகவும் மேலும் குறிப்பிட்டார். (த)

# உயர் பாதுகாப்பு வலயம் எதுவும் இல்லை; கண்ணி அபாயப் பிரதேசங்களே உள்ளன

## ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு அரச அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற ஒன்று இல்லையெனவும் கண்ணி வெடி அபாயமுள்ள பிரதேசங்களே இருக்கின்றன என்றும் அவை விரைவாக அகற்றப்பட்டு வருவதாகவும் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த பொது நலவாய நாடாளுமன்றச் சம்மேளனம் மற்றும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகளுடன் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அரச வீடமைப்புத் திட்டம், 'நேர்ப்' வீடமைப்புத் திட்டம், இனி மேற்கொள்ளப்பட இருக்கும் இந்திய வீடமைப்புத் திட்டம் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

5ஆண்டு காலத் திட்டமாக (2010ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை) 2 ஆயிரத்து 603 திட்டங்கள் செயற்படுத்தப்பட உள்ளன என்றும் இவற்றுக்காக 49 லட்சத்து 88 ஆயிரத்து 816 மில்லியன் தேவைப்படுகிறது என்றும் அரச அதிபர் விவரித்தார்.

இவ்வாறான பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் மக்கள் சமுதாயத்துடன் இணைக்கப்பட்டா செயற்படுத்தப்பட்டு வருகின்றன என்றும்-

புனர்வாழ்வு முகாம்களில் உளநலத் திட்டங்கள் எதுவுமில்லாமல் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்களா? என்றும் சம்மேளனப் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர்.

இது தொடர்பாக சமூகப் பிரதிநிதிகள் பதிலளிக்கையில், போர் முடிவடைந்த பின்னர் இன்று அபிவிருத்தி பற்றி மட்டும் தான் பேசுகின்றனர். அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து அத்திட்டங்கள் [illegible]ருந்து கீழ்நோக்கி செல்வனவாகவே இருக்கின்றனவே ஒழிய கீழிருந்து மேல் செல்லவில்லை. அரசு தரப்பினர் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து போன்றனவற்றை மட்டுமே முதன்மையாக மேற்கொண்டு வருகின்றனர்.

மக்களுக்குத் தேவையான உளநலம் சார்ந்த திட்டங்கள் எதனையும் செயற்படுத்தவில்லை. வடமாகாணத்தில் 29 ஆயிரம் விதவைகள் இருக்கின்றனர். இவர்களுக்குச் சரியான பாதுகாப்பு இல்லை என்றும் தெரிவித்தார்கள்.

### அரசியல் தீர்வு இல்லை

மேலும் கருத்துத் தெரிவித்த யாழ்.சிவில் சமூகப் பிரதிநிதிகள்:

அரசியல் தீர்வு நடவடிக்கைகள் எமது கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் தென்படவில்லை. அபிவிருத்தி என்ற கோஷமே ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஐ.நாவின் 29ஆம், 30ஆம் [illegible] முறைகள் இருக்கின்றன. அவற்றின் பிரகாரம் முழுமையான நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கப் படவேண்டும்-என்றனர்.

இராணுவத்தினர் ஏன் வீடமைப்புத் திட்டங்களை மேற் கொண்டு வருகின்றனர் என சம்மேளனப் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர்.

இது தொடர்பாகப் பதிலளித்த அரச அதிபர், இராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையே நல்லுறவு இருக்கின்றது. இராணுவத்தினர் பல மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். மக்களுக்கும் இராணுவத்தினருக்கு இடையே நல்லுறவு இருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இறுதியாக எப்போது உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது. யாழ்.மாவட்டத்தை எத்தனை நாடாளுமன்ற உறுப்பி னர்கள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். அவர்கள் அனைவரும் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் பங்குபற்றுகின்றனரா என சம்மேளனப் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அரச அதிபர் 2009ஆம் ஆண்டு மாநகரசபைத் தேர்தல் இடம்பெற்றதாகவும் வடமாகாண சபை பிரிக்கப்பட்ட பின்னர் வடமாகாண சபைத் தேர்தல் இடம் பெறவுள்ளதாகவும் தெரி வித்தார். அத்துடன் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களுக்கு தம்மால் அழைப்பு விடுக்கப் பட்ட சகல தரப்பினரும் பங்கு பற்றுவதாகத் தெரிவித்தார். இறுதியாக இடம்பெற்ற அபிவிருத்திக் கூட்டத்தில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை என யாழ். சிவில் சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். (ஐ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலுக்கு அப்பால் பொருளாதார ரீதியான செயற்பாடும் நல்லிணக்கத்துக்கு அவசியம்

## மத்திய வங்கி ஆளுநர் யாழில் தெரிவிப்பு



எல்.ஓ.எல்.சி. நிறுவனத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நிவாட் கப்ரால் அடிக்கல்லை நடுவதைப் படத்தில் காணலாம். *(படம்-டிலீப்)*

யாழ்ப்பாணம், ஒக்.22

இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்படவேண்டும் எனில் அரசியலுக்கு அப்பால் பொருளாதார ரீதியாகவும் நாங்கள் செயற்படவேண்டும் எனத் தெரிவித்தார் மத்திய வங்கி ஆளுநர் நிவாட் கப்ரால்.

நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த அவர், எல்.ஓ.எல்.சி. நிறுவனத்தின் கட்டடத்திற்கான அடிக்கல்லை நட்டார். அதன் பின்னர் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:-

வடக்கில் மிக முக்கியமான திட்டம் ஒன்றுக்கு அடிக்கல் இன்று நடப்பட்டுள்ளது. 5 மாடிகள் கொண்டதாக அமைய உள்ள இந்த நிதி நிறுவனத்தை இங்கு ஆரம்பிப்பதன் மூலம் வடக்கின் அபிவிருத்தியில் முக்கிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக இந்த நாட்டில் என்ன நடந்தது என்பது பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால் அந்த விடயங்கள் பற்றி ஆராய வேண்டிய நேரம் இதுவல்ல. அவற்றையெல் லாம் மறந்து முன்னோக்கிச் செல்வதற்காக என்ன செய்ய வேண்டும் என நாம் சிந்திக்க வேண்டும். அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படுவதன் மூலம் இதனைச் சாதிக்க முடியும். ஆனால் இது இலகுவான விடயமல்ல.

கடந்த காலங்களில் ஏனைய மாகாணங்களில் நடைபெற்ற அளவு அபிவிருத்தி வடமாகாணத்தில் இடம்பெறவில்லை. மற்றைய மாவட்டங்களைப் போன்ற நிலை இங்கும் ஏற்படுவதற்குச் சகல தரப்பினரும் கடுமையாக உழைக்க வேண் டும்.

மக்களின் அபிவிருத்திப் பணிக்காகப் பணத்தைக் கொண்டு வருவதே முக்கியமாக உள்ளது. இதற்காகப் பல நிறுவனங்கள் தயாராக உள்ளன. பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்தால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பெரும்பாலானவர்கள் தொழிலை ஆரம்பிப்பார்கள்.

இலங்கை மத்திய வங்கியின் 12ஆவது ஆளுநர் நான். அப்படி இருந்த போதும் இங்கு பல தடவைகள் வந்துள்ளேன். இதற்கு முன்னர் பதவி வகித்த 11 ஆளுநர்களுக்கும் அவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இந்த மாவட்டம் விரைவில் பொருளாதாரத்தில் முன்னேறிய மாவட்டமாக வரும் என நான் நம்புகின்றேன் - என்றார். (உ-15)

## சுற்றுலாவுக்கு ஏற்ற நாடு இலங்கை

கொழும்பு, ஒக்.22

சுற்றுலாவுக்கு ஏற்ற நாடுகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள 31 நாடுகளில் இலங்கை முதலிடத்தைப் பிடித்துள்ளது. அமெரிக்காவின் 'நியூயோர்க் ரைம்ஸ்' என்ற சஞ்சிகை நடத்திய கருத்துக் கணிப்பு மூலமே இத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெற்று வந்த உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து தற்போது நாட்டில் சுமுகமான சூழ்நிலையும், அரசியல் நிரந்தரத் தன்மையும் நிலவுவதே இலங்கை முதலிடத்தைப் பிடிப்பதற்கான காரணம் என்று 'நியூயோர்க் ரைம்ஸ்' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் இலங்கை அரசு இவ்வருடத்துக்குள் எதிர்பார்த்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை ஓகஸ்ட் மாதத்திலேயே எதிர்பார்த்த தொகையை விடவும் அதிகமாகிவிட்டது என்று ஆசிய பசுபிக் சுற்றுலாச் சங்கம் தெரிவித்துள்ளது. (சி)

## மின்வெட்டுக் குறித்து விளக்குகையில் செயலகத்தில் தடைப்பட்டது மின்சாரம்

யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ்ப்பாணத்தின் மின்தடை தொடர்பில் கதைத்துக் கொண்டிருந்தபோது மின்சாரம் தடைப்பட்ட சம்பவம் ஒன்று யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

பொதுநலவாய நாடாளுமன்றச் சம்மேளனம் மற்றும் பிரிட் டிஷ் நாடாளுமன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கும் யாழ். சிவில் சமூக பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

இந்தக் கலந்துரையாடல் இங்கு தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தகத்துறை எவ்வாறான நிலையில் உள்ளன என்று கேட்டபோது அதற்கு பதிலளித்த யாழ். வர்த்தக சம்மேளனத் தலைவர் கே.பூரணச்சந்திரன் ''யாழ்ப்பா ணத்தில் தொடர்ந்து மின்வெட்டு அமுல் படுத்தப்பட்டு வருகின் றது. இதனால் இங்கு பாரிய தொழில் முயற்சிகள் இல்லை. அவ்வாறு தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்கள் சொந்தமாக மின் பிறப்பாக்கி வைத்தே தொழில் செய்யும் நிலைமை இருப்பதாகத் தெரிவித்தார்''.

அவர் அவ்வாறு தெரிவித்து முடிந்தவுடன் மின் சாரம் தடைப்பட்டது. செயலகத் தில் இருந்த அனைவருமே சிரித்து விட்டார் கள். அத்துடன் ஐரோப்பிய பிரதிநிதிகள் குழுவினர் அவர் சொன்னதை தாம் நேரடியாகவே கண்டுகொண்டு விட்டதாக தெரிவித்தார்கள்.

இதற்குப் பதிலளித்த அரச அதிபர் மின்வெட்டு தொடர்பில் வவுனியாவில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் இது தொடர்பில் விரைவில் தீர்வு காணப்படும் என்றும் தெரிவித்தார். (204-15)

## காணாமற்போனோர் உட்பட யுத்தத்தில் உயிரிழந்தோருக்கும் விரைவில் இறப்புச் சான்றிதழ்

### நாடாளுமன்றில் சட்ட வரைவு

கொழும்பு, ஒக். 22

பயங்கரவாதம், நாசகாரச் சம்பவங்கள் ஆகியவற்றின்போது உயிரிழந்தோருக்கும், இயற்கை அனர்த்தங்கள், இடம்பெயர்வுகளின் போதும், தேசிய மட்டத்தில் இடம்பெற்ற பாரதூரமான விளைவுகளின் போதும் காணாமல் போனவர்கள் ஆகியோருக்கு இறப்பு (மரண)ச் சான்றிதழ்களை வழங்குவதற்கான சட்டவரைவு ஒன்று நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கான முன் அறிவித்தலை சபை முதல்வர் சமர்ப்பித்தார். இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படும்போது, காணாமல் போன பல்லாயிரக்கணக்கானோரின் உறவுகள் நன்மை அடைய முடியும். நாட்டில் இடம்பெற்ற ஆட்கடத்தல், வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள், தேசிய மட்டத்தில் இடம்பெற்ற பேரனர்த்தங்கள் ஆகிய சம்பவங்களால் தமது உறவுகளை இழந்தவர்கள் சம்பந்தப்பட்டவர்களின் இறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியாமலிருக்கின்றனர்.

இதனால் காணாமல் போனவர்களின் சொத்துகள், அடகு வைத்த நகைகள், வங்கிகளில் வைப்பிலிடப்பட்டிருக்கும் பணம், ஆயுள் காப்புறுதிப் பெறுபேறுகள் என்பனவற்றை மீளப் பெற முடியாதுள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்மை அளிக்கும் வகையிலேயே இந்தச் சட்டவரைவு முன்வைக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கீழ்கண்ட வகையில் விண்ணப்பிக்க முடியும்.

* காணாமல் போனவர்கள் அல்லது இறந்துவிட்டதாகக் கருதப்படுவோர் ஆகியோரின் நெருங்கிய அடுத்த வாரிசுகள் இறப்புச் சான்றிதழ்களுக்காக விண்ணப்பிக்க முடியும்.
* காணாமல் போனவர் அல்லது இறந்துவிட்டதாகக் கருதப்படுபவர் கடைசியாக வாழ்ந்த இடத்தில் நிரந்தரமாக வாழ்ந்தவர் என்பதை உறுதிப்படுத்தும் கிராமசேவகரின் சான்றிதழ்.
* மேற்குறிப்பிட்டவர்கள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பின் அதன் பிரதிகள்.
* இடம்பெயர்வுகளின்போது - இயற்கை அனர்த்தங்களின்போது காணாமல் போனவர்கள் தொடர்பான சான்றுகள்.
* தேசிய அளவிலான பாரதூரமான (யுத்தம்) சம்பவங்களின்போது காணாமல் போனவர்கள்.

மேற்குறிப்பிட்ட சம்பவங்களின்போது காணாமல் போயுள்ளனர் என்ற விவரங்களைக் குறிப்பிட்டு சத்தியக்கடதாசி ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். இந்தச் சத்தியக்கடதாசியுடன் பிரதேச பிறப்பு, இறப்புப் பதிவாளர், மாவட்ட பிறப்பு, இறப்புப் பதிவாளர் அல்லது பதிவாளர் நாயகத்துக்கு விண்ணப்பிக்கலாம். இவ்வாறான பதிவாளர் அலுவலகத்தில் குறிப்பிட்ட விண்ணப்பங்களின் நகல்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

சம்பந்தப்பட்டவர் காணாமல் போயுள்ளார் என்பது தவறு. பிழையான தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர் உயிருடன்தான் இருக்கின்றார் எனக் கருதினால், அப்பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் சான்றுபடுத்தப்பட்ட சத்தியக்கடதாசியின் மூலம் தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கவும் இடமுண்டு.

இவ்வாறான ஆட்சேபனைகளை மாவட்ட/பிரதேச பதிவாளர்களோ அல்லது பதிவாளர் நாயகமோ பரிசீலனை செய்து, அவை உறுதிப்படுத்தப்பட்டால் இறப்புச் சான்றிதழ் வழங்குவதை தடை செய்யலாம். இத்தகைய ஆட்சேபனைகள் ஒரு மாதகாலத்துக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆட்சேபனை ஏதும் எழுப்பப்படாத விண்ணப்பங்களுக்கு உரிய இறப்பு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அதேவேளை, இறப்புச் சான்றிதழ்களை வழங்க மறுப்புத் தெரிவித்ததை ஆட்சேபித்து பதிவாளர் நாயகத்துக்கு மேன்முறையீடு ஒன்று செய்து நியாயத்தைப் பெறவும் இந்த திருத்தச் சட்டத்தின் மூலம் வழிவகுக்கப்பட்டுள்ளது. (சி)

## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் தவிர்க்கமுடியாததாம்

பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டத்தின்போது ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக அறிக்கை ஒன்றைனக் கோரி உள்ளோம். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை தவிர்க்க முடியாது.

தகவல், ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பல்கலைக்கழக மாணவர்களை சில குழுக்கள் பிழையாக வழிநடத்துகின்றன. அங்கு நடக்கும் சம்பவங்கள் கவலை அளிப்பதாக உள்ளன.

பல்கலைக்கழக மாணவர்கள் அமைச்சரின் அலுவலகத்தை உடைக்க முயன்றபோதே தடியடிப் பிரயோகம் இடம்பெற்றது. இச் சந்தர்ப்பத்தில்தான் ஊடகவியலாளர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டது - என்றார். (சி)

# உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச்சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக். 22

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் சபை முதல்வரும், அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வாவால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது மீதான விவாதம் வேறொரு தினத்தில் நடத்தப்படும்.

இச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சரால் தேசிய எல்லை நிர்ணயக் குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழு 5 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். அவர்களில் ஒருவர் குழுவின் தவிசாளராக அமைச்சரால் நியமிக்கப்படுவார்.

இந்த உறுப்பினர்களின் பதவிக் காலத்தில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டால் அந்த வெற்றிடத்துக்கு அமைச்சர் வேறொருவரை நியமிப்பார்.

கூட்டம் நடத்துவதற்குக் குறைந்தது மூவர் சமூகமளிக்க வேண்டும். குழுவின் தவிசாளர் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை வகிப்பார். தவிசாளர் சமூகம் கொடுக்காத பட்சத்தில் சமூகம் கொடுத்திருக்கும் உறுப்பினர்களுள் ஒருவர் கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

உள்ளூராட்சி அதிகாரசபையின் இடப்பரப்பை வட்டாரங்களாகப் பிரிப்பதற்காக அமைச்சருக்கு சிபார்சு செய்தல், ஒவ்வொரு வட்டாரத்தினதும் எல்லைகளைத் தீர்மானித்தல் [illegible] அந்த வட்டாரத்துக்குப் பெயர் ஒன்றையும், இலக்கம் ஒன்றையும் வழங்குதல் போன்றவையே இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்ட முக்கிய பொறுப்பாகும்.

வட்டாரங்களாகப் பிரிப்பதற்காக சிபாரிசு செய்யும்போது சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபையின் இடப்பரப்பின் இன விகிதாசாரம்,

புவியியல் இடப்பரப்பு, இயல்பியல் அம்சம், சனத்தொகை, சனத்தொகை செறிவு மற்றும் பொருளாதார அபிவிருத்தி மட்டம் போன்றவை இக்குழுவால் கருத்தில்கொள்ளப்படும்.

இக்குழுவின் சிபார்சு அறிக்கை அமைச்சருக்கு வழங்கப்பட்ட[illegible]தும், அமைச்சர் அந்த சிபார்சின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை, அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட எல்லைகள், வழங்கப்பட்ட பெயர்கள் மற்றும் இலக்கங்கள் போன்றவற்றின் விவரங்களை வர்த்தமானியின் ஊடாக அறிவிப்பார்.

அத்தோடு, குழுவின் சிபார்சின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பல உறுப்பினர் வட்டாரங்களின் எண்ணிக்கை அவற்றின் பெயர், இலக்கம், அவ்வட்டாரங்களின் தெரிவு செய்யப்படவுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை போன்றவையும் அமைச்சரால் வெளிப்படுத்தப்படும்.

அமைச்சரால் ஏதேனும் ஒரு வட்டாரத்தின் எல்லைகளை மாற்ற முடியும். அவ்வாறு செய்தால் அது வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

அமைச்சர் விரும்பினால் மேற்படி குழுவுக்குத் துணை புரியும் நோக்கில் மாவட்ட ரீதியில் எல்லை நிர்ணயக் குழுக்களை நியமிக்கலாம்.

இந்த மாவட்டக் குழுவில் தேர்தல் திணைக்களத்தின் பிரதிநிதி சம்பந்தப்பட்ட மாகாண, உள்ளூராட்சி அமைச்சின் பிரதிநிதி, நில அளவையாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதிநிதி, அமைச்சரால் பகிரங்கமாகப் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதி ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள். மாவட்ட செயலாளர் இக்குழுவின் தவிசாளராக இருப்பார்.

- என அந்தச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரே விடுதலைப்புலிகள் சிதறடிக்கப்பட்டனர்

## நல்லிணக்க ஆணைக்குழுமுன் சந்திரகாந்தன் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 22

2002ஆம் ஆண்டு புலிகளுக்கும், ரணில் விக்கிரம சிங்கவிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அடுத்தே விடுதலைப் புலிகள் இயக்கம் சிதறடிக்கப்பட்டது. அந்த உடன்படிக்கையின் பின்னரே தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களிடையே பிளவுகள் ஏற்பட்டன.

- இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகள் நேற்றுமுன்தினம் கொழும்பு - லக்ஷ்மன் கதிர் காமர் கற்கை நிலையத்தில் இடம்பெற்றன. இதன்போது ஆணைக் குழு முன்னிலையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சாட்சிய மளித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்தவை வருமாறு:-

சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட பிரதமர் ஆட்சியின்போது, இனங்களுக்கிடையே புரிந்துணர்வு இன்மை காணப்பட்டது. அதன் பின்னர்சமஷ்டி முறையிலான தந்தை செல்வாவினால் பண்டா - செல்வா ஒப்பந்தம் முன்வைக்கப் பட்ட போது அப்போதிருந்த ஆட்சியாளர்கள் அதனைப் புறம் தள்ளினர்.

அதற்குக் காரணம் ஐக்கிய தேசியக் கட்சியே. அந்தக் கட்சியின் முக்கிய பிரமுகரான ஜே.ஆர். ஜயவர்த்தன, உரிமை பெற்றுக் கொடுப்போம் என்று காலித் துறை முகத்திலிருந்து ஸ்ரீதலதா மாளிகைவரை ஊர்வலத்தை நடத்தி நாட்டில் குழப்பத்தைத் தோற்றுவித்தார்.

அதன் பின்னர் டட்லி சேன நாயக்கவினால் மாவட்ட மட்ட அபிவிருத்திக் குழு கொண்டுவரப் பட்டது. அதுவும் அக்கட்சிக்குள் காணப்பட்ட முரண்பாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதேவேளை, தமிழர்கள் தனி நாடு ஒன்றைக் கோரவில்லை. சில கட்சிகள் பெரும்பான்மையினர் இடையே பொய்ப் பிரசாரம் செய்து குழப்பத்தை ஏற்படுத்தினர். தமிழர்களை ஒன்றிணைப்பதற்கான முயற்சி என்ற தொனிப் பொருளில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை தமிழ்க் கட்சிகள் அன்று கொண்டுவந்தன. அதனைக் கட்டியெழுப்பக்கூடிய ஆளுமை அவர்களிடம் அன்று காணப்படாமையால் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர்.

அதேவேளையில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சியிலிருந்தபோது ஆயுதக் குழுக்களின் வன்முறையைக் கட்டுப்படுத்த மாகாணசபை முறைமை கொண்டு வரப்பட்டது. அதன்பின்னர் அவரது கட்சியில் முரண்பாடுகள் ஏற்பட்டன. அதன் பின்னர் ஆர்.பிரேமதாஸ ஆட்சிக்கு வந்தார். அதன் போது 1958, 1959ஆம் ஆண்டுகளில் தந்தை செல்வா, பிராந்திய முறையிலான அதிகாரத்தைக் கேட்டார். அதனை ஆர்.பிரேமதாஸ எதிர்த்தார்.

### ஜே.ஆரும், பிரேமதாஸாவும் துரோகச் செயல்களைச் செய்தனர்

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ தீவிரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடும் வகையில் சில விடயங்களை மேற்கொண்டு தீவிரவாதத்திற்கு எதிராக படை நடவடிக்கையை மேற்கொண்டார். அதனால் மிகப்பெரிய அழிவு ஏற்பட்டது. அதன்போதே நானும் போராட்டத்தில் இணைந்தேன். எனது பார்வையில் அந்த தலைவர்கள் இருவரும் (ஆர்.பிரேமதாஸ, ஜே.ஆர்.ஜயவர்த்தன) துரோகச் செயல்களையே செய்தனர்.

### கிழக்கில் வகைதொகையின்றி தமிழர்கள் படுகொலை

அன்று எனக்கும் தனிநாடு என்ற உணர்வு ஏற்பட்டது. 1990ஆம் ஆண்டு ஆறாம் மாதம் பதினோராம் திகதியன்று அந்த ஆண்டு முடிவு வரை அப்பாவிப் பொதுமக்கள் ஏராளமாகக் கொல்லப்பட்டனர், கடத்திச் செல்லப் பட்டனர். உதாரணமாக எனது பிரதேசத்தில் 174 பேரை புலிச் சந்தேக நபர்கள் என்ற பேரில் கைதுசெய்து அழைத்துச் செல்லப் பட்டனர். மிகத் தந்திரமான முறையில் இஸ்லாமியர்களது பெயர்களைச் சொல்லிக்கொண்டு படையினர் இவ்வாறு நடந்துகொண்டனர்.

நான்போராட்டத்தில் இணையும் போது எனக்கு 16 வயது. அன்று சுமார் நான்காயிரம் பேர் வரை இணைந்தனர். அதனால் மிக விரைவில் விடுதலைப் புலி இயக்கம் பலம்பெற்றது.

இதேவேளை 90 களில் படையினர் மேற்கொண்ட விடயங்களே என்னை புலிகள் அமைப்பில் இணைய வைத்தது. எரிக்கப்பட்ட சடலங்களை பார்த்துள்ளேன்.

1990 களில் வெட்டுப்பாட்டி என்று ஒன்று இருந்தது. எனது வகுப்பு மாணவர்களையும் அவர்கள் பிடித்துச் சென்றனர். பலர் காலில் விழுந்து கதறியபோதும் அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

எனவே அப்போதைய கால கட்டத்தில் அவ்வாறான சம்பவங்களை இயக்குவித்த அன்றைய அரசியல் வாதிகள் மன்னிப்பு கேட்கவேண்டும் என்று கருதுகின்றேன் - என்றார்.

2004ஆம் ஆண்டு வடக்கு - கிழக்குப் பிரச்சினை ஏற்பட்டது. அதன்போது கொடூரமான முறையில் பலர் கொல்லப்பட்டனர். அதன்பின்னர், ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளை பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். ஆனால் அவர்கள் இணங்கவில்லை. அதன்போதே நான் அரசுடன் இணைந்து, புலிகளை எதிர்த்தேன். இது நான் கிழக்கு மாகாண முதலமைச்சராகப் பதவிக்கு வரும் முன்னர் இடம்பெற்றவை.

நான் எதிர்பார்ப்பது என்னவென்றால் நல்லிணக்க ஆணைக் குழுவின் விசாரணைகள் மேலும் திறம்படவேண்டும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு உறுப்பினர் எச்.எம்.ஜி.எஸ்.பலிஹக்கார:-

நாம் கிழக்கு மாகாணத்திற்கு அண்மையில் விஜயம் செய்திருந்த போது தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லை. ஆனால் கடத்தல், வெடிப்புச் சம்பவங்கள், துஷ்பிரயோகங்கள், கொலைகள் என்பன இடம்பெறுவதாக அங்குள்ள மக்கள் முறைப்பாடு செய்தனர். இதற்கு நீங்கள் என்ன தீர்வு எடுப்பீர் எனக் கேட்டார்.

அதற்கு அவர், தனக்கு இது வரை முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. என்னிடம் என்னென்ன சம்பவங்கள் இடம்பெறுகின்றன தெளிவாகக் கூறுங்கள் என்று கூறினார்

**கேள்வி:-** அவர்கள் சிலர் அரசியல் கட்சிகளின் பெயர்களையும் கூறினார்கள்.

**பதில்:-** கணிசமான சில சம்பவங்கள் இடம்பெறுகின்றன. என்னவென்றால், ஒரே குடும்பத்தில் முன்னர் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களும், தமிழ் மக்கள் விடுதலைப் புலி உறுப்பினர்களும் இருந்தனர். எனினும் சில சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றார் முதலமைச்சர்.

ஆணைக்குழு உறுப்பினர் எம்.பி. பரணகம -

கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீண்டும் மீள்குடியேற வரும்போது அவர்களது சொந்த இடங்கள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஏன்?

**பதில்:-** முன்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் காடுகளை அழித்து விவசாயம் செய்ய நில ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. அன்று வழங்கப்பட்ட காணிகளில் இருந்த மக்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களுக்கு வேறு காணிகள் வழங்கப் பட்டன. இந்த நிலை யில் அன்று வழங்கப்பட்ட ஆவ ணங்களைக் காண்பித்து தற்போதுள்ள காணிகளைக் கேட்கிறார்கள். அதனை நாம் மறுக்கின்றோம். (ஐ)

# கிழக்கில் 600 பொலிஸார் கொல்லப்பட்டமைக்கு கருணா தான் மன்னிப்புக் கோர வேண்டும்

கொழும்பு,ஒக்.22

1999 ஆம் ஆண்டு 600 பொலிஸ் அலுவலர்கள் கிழக்கு இலங்கையில் படுகொலை செய்யப்பட்டமைக்கு அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தான் மன்னிப்புக் கோரவேண்டும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேச துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

600 பொலிஸ் அலுவலர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு காரணமாய் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அக் காலத்தில் உறுப்பினராய் இருந்துள்ள நீங்கள் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினரிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று நினைக்க வில்லையா என்று ஆணைக்குழுவினால் முதலமைச்சரிடம் கேட்கப்பட்டது. அதற்கு முதலமைச்சர் சந்திரகாந்தன் பின்வருமாறு விடையளித்தார்.

'விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் சேர்ந்தபோது எனக்கு 16 வயது. அந்தக் காலத்துக்குரிய சம்பவம் எதற்கும் யாராகிலும் மன்னிப்புக் கோர வேண்டுமானால் அதற்குரியவர் முரளிதரனே ஆவார். ஏனென்றால் அந்தக் காலகட்டத்தில் கிழக்கு இலங்கைக்கான எமது தலைவராக அவரே பதவி வகித்தார்' என்றார்.

அவர் மேலும் கூறுகையில் சாம்பூரில் இன்னமும் 6,000 மக்கள் குடியமர்த்தப்பட வேண்டியிருக்கிறார்கள். ஆனால் அப்பகுதியில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக அம்மக்களைக் குடியமர்த்த முடியாமல் இருக்கிறது என்று கூறினார்.

முதலமைச்சர் என்ற முறையில் அவருக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி அம்மக்களை குடியமர்த்த முடியாதா என்று ஆணைக்குழுவினர் கேட்டபோது, இந்த விடயம் முழுமையாக தமது கையில் இல்லையென்றும் அவர்கள் வேறு இடத்தில் குடியமர்த்தப்படுவார்கள் என்றும் கூறினார். இதில் அவர்கள் திருப்தியடையாவிடில் ஜனாதிபதியிடம்தான் அவர்கள் முறையிட வேண்டும் என்றும் சொன்னார்(ப)

# வடக்கு- கிழக்கு அபிவிருத்தித் திட்டத்தின் பெயரை சிங்களத்தில் மாற்றுவதற்கு அரசாங்கம் ஏற்பாடா?

யாழ்ப்பாணம், ஒக்.22

வடக்கு-கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தல் திட்டத்தின் பெயரைச் சிங்களப் பெயருக்கு மாற்றுவதற்கு அரசு உத்தேசித்துள்ளதாக அறியப்படுகிறது.

வடக்கு- கிழக்கு மாகாணத் தில் 71 உள்ளூராட்சிச் சபைகளில் போருக்கு பின்னரான அபிவிருத்தியின் கீழ் வடக்கு-கிழக்கு உள்ளூராட்சிச் சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் (நெல்சிப்) எனும் பெயரில் பங்குபற்றும் அபிவி ருத்தித்திட்டத்தின் கீழ் (Participatory Development Plan) திட்டங்கள் முன்மொழியப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்த வேளையில்-

வடக்கு- கிழக்கு தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்களிடையே நடைமுறைப் படுத்தும் நெல்சிப் திட்டத்தை ''கமநெகும'' (Gamaneguma) பிரதேச கிராம-சிறுநகர அபிவிருத்தி திட்டம்'' என பெயர்மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பெயர்மாற்றும் திட் டத்திற்கு வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைச் செய லாளர்கள் தமது கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளனர் என்று அறியப் படுகின்றது.

ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைக்கும் 200 மில்லியன் வழங்கித் திட்டம் நடைமுறையி லிருக்கும் நேரத்தில் திட்டப் பெயர் களை சிங்களப் பெயருக்கு மாற்றுவது பொருத்தமல்ல என்று சுட்டிக் காட்டப் படுகிறது.

(அ-302)

## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ பிட்சாடனக்குருக்கள் சோமசுந்தரக்குருக்கள்



நீர்வேலி வாய்க்காற்றரவைப்பிள்ளையார் கோயில் ஆதீனகர்த்தாவும் பிரதம குருக்களுமான பிரம்மஸ்ரீ பிட்சாடனக் குருக்கள் சோமசுந்தரக்குருக்கள் (சுப்பண்ணா குருக்கள் நேற்று (21.10.2010) வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ரஞ்சனாவின் அன்புக்கணவரும், திருமதி சதாலக்சுமி சுந்தரேசக்குருக்கள் (லண்டன்), திருமதி சௌந்தரி குகதாசசர்மா, திருமதி மதுராம்பிகை ரமேஸ்குருக்கள்(கொழும்பு-பம்பலப்பிட்டி), திருமதி சுகன்யா சங்கர் (லண்டன்) சாய்ராம் சர்மா அகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்றையதினம் வியாழக்கிழமை மாலை அவரது இல்லத்தில் நடைபெற்று நீர்வேலி இந்துக் குடும்ப மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இத் தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
சாய்ராம் சர்மா (மகன்)

(சி/572098)

# பேராசிரியர் வேல்நம்பிக்கு இன்று பாராட்டு

கோப்பாய், ஒக்.22

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் தி.வேல்நம்பி பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றமையைக் கௌரவிக்கும் பாராட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கல்லூரி முதல்வர் இ.குணநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் சி.திரிகரன், ஆசியுரைகளை நீர்வேலி செல்லக்கதிர்காம கோயில் பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள், தென்னிந்தியத் திருச்சபை முன்னாள் பேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன், வாழ்த் துரைகளை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி க.தேவராஜா, யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர் க.சிவானந்தமூர்த்தி,சட்டத்தரணி சி.சிவநேசன், புத்தூர் ஸ்ரீசோமஸ் கந்தக் கல்லூரி முன்னாள் அதிபர் வ. ஆறுமுகம், அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் வே.பாலசுப்பிரமணியம், புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தக் கல்லூரி அதிபர் இ.ராஜமகேந்திரன், அதிபர் ந.விஜயசுந்தரம், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ச.லலீசன், நன்றி உரையை சமாதான நீதிவான் த.பரராஜசிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர்.

(த- 72)


**யாழ்.உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி-2010**

ஆரம்பம்:-22.10.2010
நேரம்:-3.30 பி.ப
இடம்:-எவறெஸ்ட் வி.க.மைதானம்

22.10.2010 இன்று போட்டியிடும் அணிகள்

1. சிவானந்தா எதிர் வளர்மதி (அச்செழு) .3.30.பி.ப.
2. நெடியகாடு எதிர் இளைஞர் ஆதிசக்தி.4.15.பி.ப

மேலதிக தொடர்புகளுக்கு:-077 6124900 [104981]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பொதுநலவாயப் பிரதிநிதிகளின் 'பொல்லாத' கேள்விகள் தெரியுமா?

✱ போர் முடிவடைந்த பின்னரும் யாழ்ப்பாணத்தில் ஏன் இத்தனை இராணுவ முகாம்கள்?

✱ போர் முடிவுற்று விட்டாலும் மக்கள் இன்னும் மகிழ்ச்சியாக இல்லை. அது மிகத் தெளிவாகப் புலனாகிறது - தெரிகிறது!

✱ தமிழ் இளைஞர், யுவதிகள் ஏன் இன்னமும் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்?

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பொதுநலவாய நாடாளுமன்ற சம்மேளனத்தின் பிரதிநிதிகளும், பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இப்படிப் பென்னம் பெரிய கேள்விகளை எழுப்பிச் சென்றுள்ளனர்.

அத்தோடு, தமது அவதானிப்பையும் ஆச்சரியத்தையும் வெளியிட்டுச் சென்றிருக்கிறார்கள். நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஒரு நாள் மட்டும் குடாநாட்டில் தங்கியிருந்த பின்னர் அவர்கள் மனங்களில் எழுந்த கேள்விகள் இவை. இன்னும் இரண்டு நாள்கள் தங்கி இருப்பின், வடக்கு நிலைமை குறித்து அக்குவேறு ஆணிவேறாகப் பல கேள்விகளை எழுப்பி, கவலை கலந்த ஆச்சரியங்களையும் வெளியிட்டிருப்பர்.

இதனை உணர்ந்துதான் - தெரிந்துதான் - அரச உயர் பீடத்தினர் வெளிநாட்டு ராஜதந்திரிகளையும், வெளிநாட்டு புத்திஜீவிகள் மற்றும் பிரமுகர்களையும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களையும் அவர்கள் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு செல்லாத வகையில் கட்டுப்படுத்தி வருகின்றனர்.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், 'ஏனடா' யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதித்தோம் என்று அரச தரப்பினர் இன்று தலையில் கை வைத்திருப்பார்கள் என்பது நிச்சயம்.

தமிழ்ப் பகுதிகள் உட்பட இலங்கை முழுவதும் பூரண அமைதி நிலவுகின்றது; 30 வருட காலப் போரின் பின்னர், சமாதானம் நாடெங்கும் எழுச்சி கொண்டுள்ளது என்று சர்வதேசத்திடம் - பூமிப்பந்தின் சகல நாடுகளுக்கும் - அரசாங்கம் அடிக்கும் தம்பட்டம் கிழிந்து கந்தலாகப் போகிறதே என்று அரச உயர்பீடம் 'கரித்துக் கொட்டும்' என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

போரில் வெற்றியீட்டி, அரசாங்கத்தின் வார்த்தைகளில், வர்ணிப்பில் - பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு - ஒன்றரை வருடம் கழிந்து கொண்டிருக்கும் வேளையில் -

இலங்கைத் தமிழர்களின் இதய பூமி என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணத்தின் உண்மையான நிலை சர்வதேசத்துக்கு பொதுநலவாய நாடாளுமன்றப் பிரதிநிதிகள் மூலம் தெரிய வரப்போகின்றது. அவர்கள் நேரில் வந்து பார்வையிட்டு இங்குள்ள மக்களுடன் கலந்துரையாடிக் கண்டறிந்தவற்றை வெளிப்படுத்தும் போது, அவர்களின் அவதானிப்புக்கள் பொய் அல்லது இட்டுக்கட்டப்பட்டது என்று மறுப்பு அறிக்கை வெளியிட முடியாது என்று தலையை பிசையப் போகிறது அரசு.

ஐரோப்பிய யூனியனைப் பகைத்துக் கொண்டதால் நாட்டின் பொருளாதாரத்துக்கு விழுந்துள்ள பேரடியைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் -

அது தொடர்பில் கீழே விழுந்தும் மீசையில் மண் படவில்லை என்று குரலை உயர்த்திப் பேசி வரும் இலங்கை அரச உயர் பீடத்துக்கு -

பொதுநலவாய சம்மேளனப் பிர திநிதிகள் சர்வதேசங்களுக்கும் வெளியிடப்போகும் தமிழர் பிரதேசத்தின் இன்றைய நிலை, மக்களின் மனநிலை ஆகியன குறித்த உண்மைகள் பெரும் கசப்பானவையே. தமிழர் பிரதேசங்களில், அங்கு வாழும் மக்களின் ஜனநாயக உரிமைகள் இரும்புச் சப்பாத்துக்களால் நசுக்கப்படுகின்றன என்பதனை (உடனடியாக இல்லாவிட்டாலும் மிக விரைவில்) ஐரோப்பிய பிரதிநிதிகள் குழு அம்பலமாக்கும் என எதிர்பார்க்கலாம்.

புனைவடிவங்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கலாம். ஆனால் சொற்ப காலத்தில் அவை விகாரங்களாக மாறிவிடும். இது அரசியலுக்கும் ஆட்சியின் உச்சத்தில் இருப்பவர்களுக்கும் பொருந்தும்.

போர் முடிவுற்று ஒன்றரை வருடங்கள் சென்ற பின்னரும் தமிழ்ப் பிரதேசங்களில் இன்னும் ஜனநாயக அலகுகளுடன் சுதந்திரமான இயல்பு வாழ்க்கை கிடைக்கவில்லை. இதனை மூடி மறைப்பதற்காகவே அபிவிருத்தி என்ற வாசகம் எல்லா மூலைகளில் இருந்தும் ஒலிக்கின்றது.

ஆனால், அதுவும் உரிய முறையில் செயற்படுத்தப்படுவதில்லை. வவுனியாவில் நடைபெற்ற வடக்கு அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதியே அதிகாரிகளை இது குறித்துக் கண்டித்திருக்கிறார்.

எது எப்படியாயினும், தமிழ் மக்கள் தாம் வாழும் பிரதேசங்களில் உண்மையான, பூரணமான, சுதந்திரமான வாழ்க்கை நடத்துவதற்கான இயல்பு நிலை தோற்றுவிக்கப்படவில்லை. வெறும் பொய்மைகளே தாராளமாக நடந்தேறுகின்றன என்பதே யதார்த்தம்.

பூரணமான இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கான செயற்பாடுகளை செய்வதாகக் கூறிக்கொண்டு, வடக்கு, கிழக்கு பிரதேசங்களை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான உத்திகள் மளமள வென்று 'ஜெற்' வேகத்தில் நடைபெறுகின்றன. இருந்தும், இனிமேலும் தமிழர் பிரதேசங்களில் பயங்கரவாதம் உற்பவிக்காமல் தடுப்பதற்கான ஏற்பாடுகளே இவை என்று சமன்பாடு போட்டுக் காட்டுவதற்கு அரசு, மிகக் குறிப்பாகப் பாதுகாப்பு அமைச்சு முண்டாசு கட்டிக் கொண்டு நிற்கின்றது!

இத்தகைய இரகசியத்தை நீண்ட காலத்துக்கு மறைத்து வைத்திருக்க முடியாது. அது பரகசியமானாலும் கூட சர்வதேச நாடுகள் எங்களை எதுவும் செய்துவிட முடியாது. இந்த நாடு சுயாதிபத்தியம் உள்ள நாடு. எமது நாட்டு அலுவல்களில் அடுத்த எவரும் மூக்கை நுழைக்க இடம் கொடுக்க இயலாது என்கிற இறுமாப்புடன் இவை நடந்தேறுகின்றன.

இதுவே இலங்கை ஜனநாயகத்தின் பண்பு என்று கூறுமளவுக்கு ஆட்சி தொனிக்கிறது. பொதுநல வாயப் பிரதிநிதிகள் வந்து நேரில் பார்த்தால் என்ன, ஐரோப்பிய ஒன்றியத்தினர் வந்து கேட்டறிந்தால் என்ன, சர்வதேச நீதிமன்றத்தினர் இங்கு வந்து தமிழர்களிடம் இரகசிய வாக்குமூலம் பெற்றுச் சென்றால் என்ன, உலகநீதி எச்சந்தர்ப்பதிலும் இலங்கையை எட்டிப் பார்க்கச் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதனையே இன்றைய போக்குகள் சமிக்ஞை காட்டுகின்றன. அவ்வளவே.

# றுகுணு பல்கலைக்கழக உபவேந்தர் மாணவர் குழுவால் தாக்கப்பட்டுக் காயம்

## வேறு இரு கல்வியாளர்களும் தாக்கப்பட்டுள்ளனர்

கொழும்பு,ஒக்.22

றுகுணு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சுசிரித் மெண்டிஸ் மற்றும் இரு கல்வித்துறை பிரமுகர்கள் நேற்றுமுன்தினம் காலையில் மாணவர் குழுவொன்றினால் தாக்கப்பட்டு காயங்களுக்குள்ளானதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி பல்கலைக்கழகத்தின் கலைத்துறை கேட்போர் கூடத்துக்கு முன்னால் இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவந்துள்ளது.

குறித்த இடத்திற்கு பல்கலைக்கழக உபவேந்தர் மெண்டிஸ் வந்து சேர்ந்தபோது மாணவர் குழுவினால் தாக்கப்பட்டதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சம்பவம் நடந்த இடத்துக்குவந்து சேர்ந்த சிரேஷ்ட மாணவர் பிரதிநிதி சமான் சந்தன மற்றும் விரிவுரையாளர் டி.ஏ.ஜயந்த என்பவரும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

பேராசிரியர் மெண்டிஸ் நெற்றியில் காயமடைந்துள்ளார். ஏனைய இருவரும் தலைகளில் காயமடைந்துள்ளனர். பேராசிரியர் மெண்டிஸ் மற்றும் இருவரும் மாத்தறை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களாக றுகுணு பல்கலைக்கழகத்தில் உருவாக்கி வந்துள்ள மாணவர் அமைதியின்மையின் காரணமாகவே இந்த அசம்பாவிதம் நடைபெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பகிடிவதையைக் கண்டித்து விஞ்ஞானப் பிரிவு மாணவர்களால் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டி ஒன்றினை றுகுணு பல்கலைக்கழக மாணவர் மன்றத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் கிழித்து எறிந்ததின் காரணமாக அங்கு முறுகல் ஏற்பட்டிருந்தது. அதே வேளை புதிய மாணவர்களை வரவேற்பதற்காக நிறுவப்பட்டிருந்த பந்தல் ஒன்று தீயிடப்பட்டதனால் நிலைமை மோசமடைந்திருந்தது. கடந்த செவ்வாயன்று ஏற்பட்ட மாணவர் மோதலில் காயமடைந்த 10 மாணவர்கள் மாத்தறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்நிலைமைகளால் மாணவர் அமைதியின்மை மேலும் மோசமடையாமல் இருக்கும் வகையில் மாத்தறை, வெலிகம, திகாகொட, கந்தார, கம்புறுபிட்டிய மற்றும் திக்வெல பொலிஸ் நிலையங்களிலிருந்து பொலிஸார் றுகுணு பல்கலைக்கழக வளாகத்தில் குவிக்கப்பட்டுள்ளனர்.

பேராசிரியர் மெண்டிஸ் மற்றும் கல்வியாளர்களைத் தாக்கிய சம்பவம் பற்றி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதுடன் சம்பந்தப்பட்ட மாணவர்களைக் கைது செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக மாத்தறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தமயந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

### தூண்டுதலால் ஏற்பட்ட சம்பவம்

இச்சம்பவம் தொடர்பாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க கருத்து தெரிவிக்கையில் இத்தாக்குதல்கள் ஜே.வி.பியுடன் தொடர்புடைய மாணவர் குழுவொன்றின் தூண்டுதல் காரணமாகவே நடத்தப்பட்டுள்ளன என்று கூறினார்.

எல்லா பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த 95 சதவீதத்துக்கு மாணவர்கள் மேற்பட்ட இம் மாதிரி வன்செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைத்து அமைதியை நிலைநாட்ட ஒத்துக் கொண்டுள்ளனர். ஒரு குறிப்பிட்ட சிலரே இம் மாதிரி செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

### உப வேந்தர் கூறியது

சம்பவம் தொடர்பாக உபவேந்தர் பேராசிரியர் மெண்டிஸ் கூறுகையில், படிக்கட்டில் அமர்ந்திருந்த ஒரு மாணவரின் தோளில் கை வைத்து வகுப்புக்கு போகும்படி கேட்டுக்கொண்டேன். அவர் என்னுடன் வாதிட ஆரம்பித்தார். நூற்றுக்குமதிகமான மாணவர்கள் தடிகள் பொல்லுகளுடன் அங்கு வந்தனர். தாக்குதலில் என் நெற்றியில் காயம் ஏற்பட்டது - என்றார். (ப)

## கைதடி அரச முதியோர் இல்லப் பாவனைக்கு பஸ், மின் பிறப்பாக்கி வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.22

கைதடி அரச முதியோர் இல்லத்தின் பாவனைக்கு பஸ் ஒன்றையும், மின்பிறப்பாக்கியும் தந்து உதவுமாறு இல்ல அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் ஒன்றை வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் இல்லத்தில் நடைபெற்ற முதியோர் தின விழாவில் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி முதியோர்களின் வசதி கருதி பஸ் ஒன்றையும், மின்பிறப்பாக்கியும் வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

ஆளுநர் கூறியதற்கு அமைய இந்த பஸ்ஸையும், மின்பிறப் பாக்கியையும் தந்துதவுமாறு அத்தி யட்சகர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (204-26)

## வடமராட்சி உட்பட சில பகுதிகளில் மின்வெட்டு

உயரழுத்த மின்மார்க்க கட்டமைப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின்சாரம் சில பிரதேசங்களில் தடைப்பட்டிருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலேயே மின்சாரம் தடைப்பட்டிருக்குமென மின்சார சபை அறிவித்துள்ளது. (ஐ-15)

# புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 23 பெண்கள் இன்று பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவர்

## யாழ். செயலகத்தில் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.22

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து 23 பெண்கள் இன்று விடுதலை செய்யப்படவிருக்கின்றனர்.

யாழ்.செயலகத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் வைத்து அவர்கள் தங்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றனர்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ.குணசேகர பிரஸ்தாப பெண்களை பெற்றோரிடம் கையளிப்பார்.

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் 113பேர் பல்வேறு பட்ட பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கைதடியில் இயங்கிய புனர்வாழ்வு நிலையம் மூடப்பட்டு விட்டது. தெல்லிப்பழையில் மட்டுமே தற்சமயம் புனர்வாழ்வு நிலையம் செயற்படுகிறது என்றுஅந்த நிலையத்துக்கு பொறுப்பான கேணல் அலமலபே உதயனுக்குத் தெரிவித்தார்.

கணினிப் பயிற்சி உட்பட பல்வேறு பயிற்சிகள் நிலையத்தில் தங்கியிருந்தவர்களுக்கு வழங்கப்படுகின்றது. அவர்கள் விடுதலையான பின் வாழ்வாதாரத்துக்கான தொழில் ஒன்றை ஆரம்பிக்க இந்தப் பயிற்சிகள் உதவும்- என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

## பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ்ப்பாணம் 'கேற்வே' நிறுவனத்தில் ஆசிரியர்களுக்கான சர்வதேச கணினிச் சாரதிப் பத்திரம் (ஐ.சீ.டீ.எல்), அதிபர்களுக்கான 'ஈ - சிற்றிசன்' பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கான 80 பேருக்கான சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேற்படி நிறுவனத்தில் கடந்த மாத இறுதிவரை மேற்படி கற்கை நெறிகளைப் பயின்ற அதிபர்களையும் ஆசிரியர்களையும் அலுவலக நேரத்தில் கஸ்தூரியர் வீதியில் அமைந்துள்ள 'கேற்வே' நிறுவனத்தில் தொடர்பு கொள்ளுமாறு கற்கை நெறி இணைப்பாளர் அறிவித்துள்ளார். (201)

## நாளை

| | | |
|---|---|---|
| ஐப்பசி 06 | 23.10.2010 | |
| | | சனிக்கிழமை |
| திதி: | : | பூரணை |
| | | மு.ப. 07.52 வரை |
| நட்சத்திரம் | : | அச்சுவினி |
| | | மு.இ. 11.24 வரை |
| [illegible] | : | [illegible] வரை |
| [illegible] | : | [illegible] வரை |

## கடவுளிடத்திலேயே பாரத்தைப் போடுவீர்!

ஞானக்கதிர்

கூனியின் கொண்டாட்டம் தசரத குடும்பத்தை நிலை குலைத்து விட்டது.

சூரபன்மனுடைய தன்மான உணர்ச்சியினால் தேவர் சிறை விடுப்பு மறுப்பினால் அசுர குலமே பூண்டோடு பொன்றிப் போனதே...!

இந்தப் பரந்த பாரத கண்டத்தில் ஐந்து நாடு, ஐந்து ஊர், ஐந்து வீடு கொடுப்பத் துரியோதனாதியோர் மறுப்பு பாண்டவ கௌரவ குடும்பங்களையே பதம பார்த்து விட்டதே. இந்த விதமான அர்த்தமற்ற அனர்த்தங்கள் அளவற்றவற்றை இந்த அகிலமும் அறிந்துதான் வைத்திருக்கின்றது.

கணவன் வீட்டுக் கடமைகளைச் சரிவரக் கவனிக்கத் தவறினால் மனைவியோடு முரண்பாடு கால்கொள்ளுகின்றது. மனைவி தன் வீட்டுக் கடமைகளைச் சரிவரச் செய்து முடிப்பதற்கு கணவனுடைய ஒத்துழைப்புச் சீரில்லாததால் பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளோடு ஒரு களேபரம் தலை தூக்குகின்றது. பிள்ளைகள் வீட்டுக் குழப்பத்தோடு கல்விச் சாலையை நாடுவதால் ஆசிரியர்களோடும் மனக் கசப்பு உருவாகின்றது. இந்த நிலை ஆசிரியர்களுக்கும் இல்லை என்று உறுதிப்படுத்த முடியாது. இந்த மாதிரியான மாறுபாடுகள் அனந்தம்.

ஒருவரோடு குறைபாடு அவரோடு மட்டில் அல்ல. அவரோடு சம்பந்தப்பட்ட மற்றவர்களிடத்திலும் தாவுகின்றது. அதனால் என் கடனைச் சரிவரச் செய்தாலும் மற்றவர் கடமை என்னையும் பாதிக்குமாதலால் கடவுள் தான் என்னைக் காக்கும் கடனை கைதர வேண்டும் என்று பட்டினத்தடிகள் கடவுளிடத்தில் பாரத்தைப் போடுகின்றார். (நன்றி : அருள் ஒளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோட்டறி ஆளுநர் யாழ்.வருகை

# Rtn. Imthiaz Ismail

BUILDING COMMUNITIES
BRIDGING CONTINENTS

## (2010-2011)



**Rtn. Imthiaz Ismail**
**District Governor**
*2010 -2011*

Rtn. PHF. Imthiaz Ismail has been in the Family of Rotary since 1978, first as a member of the Interact club of Royal College and thereafter as a Charter Director of the Rotaract Club of Colombo Mid Town.

He was inducted as a member of the Rotary Club of Colombo Mid Town in 1996. He has served the Club in all key positions before leading the Club as its President in 2001-2. Whilst the Club received the Rotary International Presidents' Citation, Rtn. Imthiaz was recognized by Rotary International as a "Distinguished President". He was awarded the Best Secretary by the District in 1999-2000 and in the same year received the "Four Avenues of Service" Citation from Rotary International.

He has continuously served the District on the invitation of many District Governors since 1997 -98. He has been involved with District RYLA programmes on many occasions and has been with the International RYLA programmes in Brisbane, Australia, Barcelona, Spain and the District RYLA in Kuala Lumpur, Malaysia. He has been a panelist at the RI Pre- Convention on Rotaract in Malmo Sweden.

Rtn. Imthiaz led the Group Study Exchange (GSE) team to Belgium (RI Dist. 2170) in May2006. He is a Major Donor & Benefactor of the Rotary Foundation and has been a Mentor of 2 Peace Scholars. He has attended 10 International Conventions.

On the invitation of the Government of Sri Lanka, he served as the Chairman of the National Lotteries Board. He also served on the Public Enterprises Reforms Commission.

Among his civic activities he is a Justice of Peace (All Island), a member of the National Steering Committee on Humanitarian Mine Action and serves on the Prisons Board.

Rtn. Imthiaz is the Group Managing Director of the Transnational Group, Sri Lanka and Iron Mountain Lanka Pvt. Ltd., and serves on the Board of Transnational Group, Singapore as the Senior Vice President- South Asia.

His spouse, Nazra, is a teacher by profession at the Lyceum International School; Nugegoda, and is qualified and committed in teaching children needing special attention. Nazra and Imthiaz are blessed with two daughters and a son.

### *Message from the District Govenor*

Nazra and I have great pleasure in sending this message for publication in the souvenir to mark the District Governor's Official Visit of the Rotary Club of Jaffna

We take this opportunity to congratulate IPP. Tharmakulasingam Neela and her team for a successful conclusion of balanced Rotary activities upholding the values of Rotary. We are confident that dynamic and enthusiastic membership will extend the support and cooperation to Pres. Kangaratnam Surendran, and are confident that the trend may continue in its Humanitarian Service and also maintain high standards in Rotary Fellowship and Friendship. The dynamism and dedication of the membership will undoubtedly see another year of effective Rotary Service.

President Kangaratnam Surendran, we are aware is a committed Rotarian enthusiastic in leading the Club during this Rotary year. I am confident that he will together with his enthusiastic membership will continue to achieve the objectives of the Club in "Building Communities – Bridging Continents".

*PHF Imthiaz Ismail*
*District Governor, 2010-11*

### Message from the Past District Govenor



It is indeed a pleasure and a privilege to send this message on a unique occasion such as the launching of a Souvenir to mark the visit of the 2010-11 District Governor's Official visit to the Rotary Club of Jaffna on 22nd October 2010.

I am certain that you will face the very special challenges that all of us face in this country today, in a truly courageous fashion and play a significant role which will set an example to other Rotary Clubs.

I wish to offer my sincere congratulations and good wishes to President Surendran and his team for a successful Rotary Year 2010-11.

***PHF B.D.R. Rajan,*** *DISTRICT GOVERNOR 2009-2010*

### முன்னாள் றோட்டறித் தலைவரின் செய்தி



அனைத்துலக சேவைக் கழகத்தின் மகத்துவமான இலட்சியங்களால் உணர்வூட்டப்பட்ட நாம் எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ஏராளமான நலன்புரித் திட்டங்களைச் செயற்படுத்த முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

எமது மக்கள் எண்ணிறைந்த கஷ்டங்களை எதிர்நோக்கும் காலம் இது. அவர்களின் இன்னல்களை நீக்கும் விதத்திலும் இவ்வேளையிலும் தாம் விரும்புவதை அணிவித்து மகிழ்ச்சியாக வாழ முடியும் என்று அவர்கள் மன நம்பிக்கை கொள்ளும் வகையிலும் எங்கள் சேவைத் திட்டங்கள் அமைந்தன என்பதில் நாம் திருப்தி கொள்கின்றோம். எமது கழகம் தனது 70 ஆம் ஆண்டு கால வரலாற்றில் சகல துறைகளிலும் தனது சேவையை மிகச்சிறப்பாக ஆற்றியுள்ளது என்று கூறுவதில் இறும்பூதெய்துகின்றேன்.

மக்களின் நல்வாழ்வுக்கும் சமூக செழிப்புக்குமாக நாம் வகுத்த செயல்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் அவர்களின் உழைப்பும் அர்ப்பணிப்பும் முழுப்பங்கானதாகும். எதிர்வரும் ஆண்டுகளிலும் எத்தகைய சூழ்நிலையிலும் எங்கள் மக்களுக்கு எமது சிறப்பான சேவையைத் தொடர்ந்து நல்குவோம் என்று இத்தருணத்தில் திடசங்கற்பம் செய்கின்றோம்.

PP Rtn. PHF. **சு.சரவணபவன்**, Director,
International Understanding, யாழ்.றோட்டறிக்கழகம்

### ஒன்று கூடலுக்கு ஓர் சந்தர்ப்பம்



யாழ்.றோட்டறிக் கழகத்திற்கு றோட்டறி கௌரவ ஆளுநர் இம்தியாஸ் இஸ்மயில் அவர்களின் இன்றைய வருகையால் சர்வதேச ரீதியில் கழகம் மேலும் உயர்த்தப்படுவதுடன் கழக செயற்பாடுகளுக்கும் மேலும் அங்கீகாரம் கிடைப்பதற்கும் உறுதுணை ஆகிறது. றோட்டறி ஆளுநர் றோட்டறி வருடத்தின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றார். இவரது வருகையால் றோட்டறிக் குடும்பம் மகிழ்ச்சி அடைவதுடன் அவர்களது சேவை மேலும் வலுப்பெற ஓர் உந்து சக்தியாகக்கூட அமையும் எனலாம். எனவே, இன்றைய நாள் றோட்டறியின் உயர்வுக்கான மற்றுமொரு உன்னத நாளாகக்கூடக் கருதலாம். யாழ்.றோட்டறிக் கழகத்தினருடைய சேவை சமூக மட்டங்களிலே பல்வேறு வழிகளில் உன்னத சேவையை வழங்கி வருகின்றது. இச் சேவைகள் சிறப்படைய பலரது ஒத்துழைப்புக்கள் அவசியமாகின்றது. அப்படியானவர்களின் ஒன்று கூடலுக்கும் இது ஓர் அரிய சந்தர்ப்பமாக அமையும் என நம்பலாம்.

PP. Rtn. **அ.பஞ்சலிங்கம்**, *சமூக சேவை இயக்குனர்,*
*யாழ்ப்பாண றோட்டறிக் கழகம்.*

### Message from the President



We are really honoured and privileged by our distinguished District Governor's visit to Rotary Club of Jaffna. Needless to say that your visit assumes great significance at a time when the people of Jaffna peninsula need your dignified presence by which, it is their fruitful anticipation that you will become acquainted with the numerous problems confronted by them.

What they confidently expect is the generous help of the Rotarians whose club is an international organization that proudly possesses a praiseworthy record of having rendered very useful and meritorious service to the war-torn people in several countries in the world.

I take this opportunity with great happiness to extend our cordial welcome to the District Governor, Rtn. Imthiaz Ismail, PDG Rtn. Suri Rajan, District Secretary Rtn. Gowry Rajan and other Rotarians who are dedicated to the service of the people and as such they deserve the gratitude a praise of all the people.

**Rtn.K.Surenthiran**

### சமூக சேவைக்குத் திரளட்டும் இளைஞர் அணி



யாழ்.மாவட்டத்தில் உள்ள சமூக சேவைக் கழகங்களில் முக்கிய கழகங்களில் ஒன்றாக யாழ்.றோட்டறிக் கழகம் செயற்பட்டு வருகின்றது. மக்களுக்கு வேண்டிய தேவை அறிந்து சேவையினை மேற்கொண்டு வருவதுடன் யாழ்.மாவட்டத்தை தாண்டி வன்னி நோக்கியும் சேவை விஸ்தரிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இளைஞர் அணிகளைக் கொண்ட ஒரு கழகமாக மிளிர்வதுடன் தனது சேவையை 'றோட்டறி ஆளுநரின் வருகையுடன் மேலும் விஸ்தரிக்க எண்ணுகின்றோம்.

கழகங்களின் செயற்பாடுகள் சமூக சேவை என்பதுடன் மட்டும் நின்றுவிடாது கழகங்களை நிர்வகிக்கும் உறுப்பினர்கள் பெரும்பாலானோர் இளந்தலைமுறையினர் ஆகக் காணப்படுவதால் அவர்களுடைய தலைமைத்துவ பண்புகளும் நிர்வாகத் திறமைகளும் மேலும் வளர்த்தெடுக்கப்பட உதவுகின்றது.

''இளைஞர்கள் உள்ள இடத்தை எனக்கு காட்டுங்கள், சமூகத்தினதும் நாட்டினதும் எதிர்காலத்தையும் நான் உங்களுக்கு எதிர்வு கூறுகின்றேன்'' என்று முன்னாள் RI தலைவர் Raja Saboo ஒரு முறை சொன்னார். பாடசாலை மாணவர்களிடையே தலைமைத்துவப் பண்புகள் வளர்க்கப்படுவதால் சமூகத்தில் அவர்கள் நாளைய நல்ல நிர்வாகிகள் ஆக வருவதற்கு கல்விக்கு அப்பால் இது பெரும் பங்கு வகித்து உதவுகின்றது.

அத்துடன் இக்கழகம் சர்வதேச ரீதியான கழகமாகத் காணப்படுவதால் உலகளாவிய ரீதியிலே தொடர்புகள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்து சர்வதேசத்தில் பல்வேறு மட்டங்களில் சமூகவியல் அறிவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கின்றது.

யாழ்.றோட்டறிக் கழகம் பிரதேச ரீதியில் நான்கு றோட்டரக்ட் கழகங்களையும் பாடசாலை மட்டங்களில் இன்ர றட் கழகங்களையும் கொண்ட தாய்ச்சங்கமாக விளங்கி வருகிறது. இக்கழகங்கள் சமூக சேவைக்கு சமூக ஆர்வலர்களின் ஆதரவுடன் சமூகப் பணியாற்ற ஒன்று திரள்வோம்

Rtn.லோ.துஷிகரன்,
*இளந் தலைமுறை இயக்குனர்,*
*யாழ்.றோட்டறிக் கழகம்.*



*The Founder of Rotary,*
***Paul P. Haris***
***1868 - 1947***

### செயலாளரின் செய்தி



துயரப்பட்டோர் துயர்துடைத்தும் காலத்தின் தேவைகளை உணர்ந்தும் எழுபதாண்டு காலமாக இம்மண்ணில் சமூகப் பணி ஆற்றிவரும் யாழ்.றோட்டறிக் கழகமானது இன்று றோட்டறி ஆளுனர் Rtn. இம்தியாஸ் இஸ்மெயில் அவர்களின் வருகையினால் பெருமை பெறுவது மட்டுமன்றி குடாநாட்டின் றோட்டறிக் குடும்பத்தினர் யாவருக்கும் இன்றைய நாள் ஓர் மகிழ்ச்சியான நாளாகும்.

ஆளுநர் அவர்களின் சேவைகள் எம் மண்ணில் தொடர்ந்திடவும் எமது கழகத்தின் வரலாற்று ஏடுகளில் அவரது பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவும் மனமுவந்து வாழ்த்தி நிற்கின்றேன்.

Rtn.V.K.**ரவீகரன்.**

### Message from the President Elect



It is indeed a great pleasure and a sense of great pride for all of us to accord an enthusiastic and warm welcome to the District Governor Rtn. Imthiaz Ismail whose being in our midst today lends great strength and richness to the solemn occasion and to the members of the Rotary club which is a service organization.

At a time when our people undergo hardships a service organization of this kind is a great consolation and comfort to them as this organization is always at their disposal and command to render the most valuable service to the destitute and the downtrodden.

This service organization pledges to serve the people in all possible ways with a view to redeeming the sufferings of the people and ameliorate their lot.

I, as a member of the service club feel gratified to extend my cordial welcome to the District Governor whose contribution to the success of the service club is both impressive and significant.

May I pray in earnest for astounding success.

**Rtn. S.Sivasankar**

### Message from the Past President



I take great pleasure in sending greetings to our Governor, who is among us to day. Though we have gone through plenty of hardships due to the war situations, still we went all out to do our best during the past for humanity services.

Let me wish the Governor and his team an enjoyable time and happiness during his visit.

With best Wishes

*PP. Rtn. N. Tharmakulasingam*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் விற்பனைத் தரகராகச் செயல்படும் மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஒக். 22

யாழ். குடாநாட்டில் மணல் பெறுவதில் மக்கள் எதிர்நோக்கும் அளவுக்கு அதிகமான சுமைகள், சிரமங்களுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான மனுவை கடந்த 18ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

இந்த வழக்கில் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் மற்றும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர், மகேஸ்வரி நிதியத்தின் பொறுப்பாளர், புவிசரிதவியல் அளவையியல் சுரங்கப் பணியக அதிகாரி ஆகியோரை டிசெம்பர் 14ஆம் திகதிக்கு முன் பதில் அளிக்குமாறு மேன்முறையீட்டு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

பொதுமக்கள் வழக்காடல் அடிப்படையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் இது தொடர்பான மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

"3 சுமை மணலைப் பெறுவதற்கு ரூபா 286.20 மட்டுமே புவிச்சரிதவியல் அளவையியல் சுரங்கப் பணியகத்தினால் கோரப்படுகிறது. ஆனால் அதேயளவு மணலைப் பெறுவதற்கு யாழ். மக்கள் மகேஸ்வரி நிதியத்திற்கு 13,500 ரூபாவைச் செலுத்த வேண்டி உள்ளது.

பொதுமக்கள் மணல் பெறும் விடயத்தில் மகேஸ்வரி நிதியம் தரகராகச் செயற்படலானது சட்டத்துக்கு முரணான செயல்; அதிகாரமளிக்கப்படாத செயல் என்பதுடன் பெரும் ஊழலுமாகும்" என மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். இவ்வழக்கில் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையோடு சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மன்றில் மனுதாரர் சார்பில் வாதிட்டார்.

(உ-ஐ)

## போர் பாதித்த ஆலயங்களின் விவரம் திரட்டல்

வடமராட்சி, ஒக்.22

உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட யுத்தத்தினால் பாதிப்படைந்த ஆலயங்களின் விவரங்களை சமர்ப்பிக்குமாறு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையினர் கேட்டுள்ளனர்.

கிராம சேவகரின் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் கலாசாரப் பிரிவில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (201-319)

## திருத்தப்பட்ட வீதி திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

வேலணை வங்களாவடியிலிருந்து புளியங்குளம் சந்தி வரையான பாதை நீண்ட காலத்தின் பின்னர் இன்று காலை 8.30 மணிக்குத் திறந்து வைக்கப்படுகிறது. புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகரா வீதியைத் திறந்து வைப்பார்.



யாழ்.போதனா வைத்தியசாலையில் 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் இந்திய அமைதிப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 21 பணியாளர்களின் நினைவுநாள் நிகழ்வுகள் நேற்று வைத்தியசாலைப் பணியாளர் திருமதி பவானி பசுபதிராஜா தலைமையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். நிகழ்வில் தாதியர் பயிற்சி கல்லூரி மாணவிகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம். (படம்: சோபனா)

## மழை பெய்யும் வேளைகளில் வகுப்பறைகளுள் வெள்ளம்

**சாவகச்சேரி இந்து மாணவர் அவதி**

தென்மராட்சி, ஒக்.22

மழை பெய்யும் வேளையில் வகுப்பறையில் இருந்து கல்வி கற்க முடியாத அவலநிலை, தேசிய பாடசாலையான சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் காணப்படுகிறது. இதனால் மழை பெய்யும் காலத்தில் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்படி கல்லூரியின் வகுப்பறைக் கூரை ஓடுகளால் மழை பெய்யும் வேளையில் மழை நீர் ஒழுகுவதால் மாணவர்கள் எழுந்து நின்று தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். சுமார் 15 வகுப்பறையில் மாணவர்கள் இத்தகைய நிலையிலேயே கல்வியில் ஈடுபட்டுள்ளனர்.

1960 ஆம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்ட இக்கட்டடத்தின் ஓடுகள் கடந்த 2000 ஆம் ஆண்டு யுத்த அனர்த்த வேளையில் சேதமடைந்தன. அதனைப் புனரமைத்தவர்கள் ஒழுங்காக ஓடுகள் அடுக்காததால் மழை பெய்யும் வேளையில் மழை நீர் ஓடுகளுக்கு இடையில் காணப்படும் இடைவெளிகள் ஊடாக வகுப்பறைக்குள் மழை நீர் புகுகிறது. இதனால் மழை முடியும் வரை எழுந்து நிற்க வேண்டிய நிலை மாணவர்களுக்கு ஏற்படுகிறது.

அத்துடன் மிகவும் உயரம் குறைந்த நிலையில் வகுப்பறைகள் உள்ளதால் மழை காலங்களில் வகுப்பறைகள் இருள் சூழ்ந்தும் காணப்படுகின்றது.

(த-201-207)

## குடாநாட்டுப் பாடசாலைகளில் தேசிய மாணவர் படையணிப் பயிற்சிகள்

அச்சுவேலி, ஒக்.22

யாழ். மாவட்டத்தில் 25 இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் தேசிய மாணவர் படையணி "பிளட்டூன்' ஆரம்பிக்கப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

பாடசாலைகளில் மாணவர் மத்தியில் தேசிய மாணவர் படையணி ஆரம்பிப்பதற்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலிருந்து ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டு 45 தினங்கள் வரையில் கண்டி ரத்தெனிய தேசிய மாணவர் பயிற்சி முகாமில் பயிற்சி அளிக்கப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருந்தன.

பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் கடமைபுரியும் பாடசாலைகளில் தேசிய மாணவர் படையணி 'பிளட்டூன்' கள் ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்கான உடல் உறுதிப் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தேசிய மாணவர் படையணி உருவாக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அண்மையில் அமைந் துள்ள பாதுகாப்புப் படை முகாம்களில் உள்ள தேசிய மாணவர் படையணிக்குப் பொறுப்பான அதிகாரிகள் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் இருந்து 32 பேருக்கு அதிகமான ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுள்ள போதிலும் 25 இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் தேசிய மாணவர் படை யணி செயற்படத் தொடங்கியுள்ளது.

கடந்த 30 வருடங்களுக்கு முந்திய காலப்பகுதியில் நகர்ப்புறத்தில் அமைந்துள்ள கல்லூரிகளில் "கரேட்" அமைப்பு உருவாக்கப்பட்டு செயற்பட்டதுண்டு. தற்போது நகர்புறங்களில் மட்டு மல்ல கிராமப்புற பாடசாலைகளிலும் தேசிய மாணவர் படையணியின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை - பாடசாலைகளில் நடைபெறும் தேசிய மாணவர் படையணி அங்குரார்ப்பண நிகழ்வுகளில் பாதுகாப்புத் தரப்பு உயர் அதிகாரிகள் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கருத்துரைகளை வழங்கி வருகின்றனர். (201-11)

## குமுதினிப் படகு மீண்டும் திருத்த வேலைக்கு

திருத்த வேலைகளுக்காக ஊர்காவற்றுறையில் நங்கூரமிடப் பட்டுள்ள குமுதினி மோட்டார் படகின் திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் நவம்பர் 25 ஆம் திகதிக்கு முன்பதாகத் திருத்த வேலைகள் நிறைவடைந்ததும் நெடுந்தீவுக்கான சேவையில் மீண்டும் ஈடுபடவுள்ளது என வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மேற்படி சேவைக்கென அமைக்கப்பட்டு வரும் புதிய படகு அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் வந்து சேரும் எனவும் இந்தப் படகில் 100 பயணிகள் பிரயாணம் செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் மேற்படி சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (201-7)

## இறைச்சிக்காகப் பசுமாடுகள், மறியாடுகள் வெட்டப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்

**கால்நடை உற்பத்தி சுகாதார உதவிப் பணிப்பாளர் அறிவுறுத்து**

யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ். மாவட்டத்தில் நல்ல இனவிருத்திக்குரிய பசுமாடுகள்- மறியாடுகள் என்பன இறைச்சிக் காக வெட்டப்படுவது உடன் நிறுத்தப்படவேண்டும்.

யாழ். கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

நல்ல இனவிருத்திக்குரிய சினைப்பட்ட பசுமாடுகள், மறியாடுகள் என்பன பெரும்பாலும் யாழ். குடாவில் கால்நடை வைத்திய அதிகாரிகளின் சிபார்சு இன்றி, இறைச்சிக்காக வெட்டபடுகின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இனிவரும் காலங்களில் எந்தவொரு பசுமாட்டையோ அல்லது மறியாட்டையோ கால்நடை வைத்திய அதிகாரிகளின் சிபார்சு இன்றி இறைச்சிக்காக வெட்டுவதற்கு அனுமதிக்கப்படமட்டாது.

மேற்படி விடயங்களில் சம்பந்தப்பட்ட அனைத்துத் திணைக்களங்களும் முறையாக செயற்படுவது சிறந்தது. உள்ளூராட்சி சபை அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.


இதேவேளை யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களம் பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் இது குறித்த அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் - என்றார். (எ-302)

## சிரமதானம் மூலம் வீதி துப்புரவு

யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ். ஈச்சமோட்டை விதானையார் வீதி இலகு வேலைத்திட்டத்தின் கீழ் சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. வீதியின் இருமருங்கிலும் அதிகரித்துக் காணப்பட்ட பற்றைகள், புற்கள் என்பன வெட்டி அழிக்கப்பட்டுள்ளன. இலகு வேலைத்திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறும் மக்களே இந்தச் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

துப்புரவு செய்யப்பட்ட கழிவுகள் பின்னர் தீயிட்டு எரிக்கப் பட்டன. (201-26)






யாழ். நகரில் பழம்பெருமை வாய்ந்ததான சுப்பிரமணியம் பூங்கா அழகுறப் புனரமைக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி ஆளுநர் நிவாட் கப்ரால் (நடுவில் இருப்பவர்) நேற்று அதனைத் திறந்து வைத்தார். எல்.பி.பினான்ஸ் நிறுவனம் பூங்காவைப் புனரமைப்புச் செய்திருந்தது.

## வலி.தெற்குப் பிரதேச வீதிகளில் தேங்கியுள்ள திண்மக் கழிவுகள்

சண்டிலிப்பாய், ஒக்.22

வலி.தெற்குப் பிரதேசத்தில் டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளின் உற்பத்தியைத் தடுக்கும் நோக்குடன் வீடுகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வீதிகளிலும், சந்திகளிலும் மலை போல் குவிக்கப்பட்டுள்ள திண்மக் கழிவுப் பொருள்கள் பல வாரங்களாகியும் அகற்றப்படவில்லை. இது குறித்து கவலை தெரிவித்துள்ள பொதுமக்கள் மழை வரமுன்பு இவற்றை அகற்றுவதற்குப் பிரதேச சபையை நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இதேவேளை, குடாநாட்டில் டெங்கு நோயின் தாக்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்து வருவதைத் தொடர்ந்து சுகாதாரத் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய இந்நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் இந்நோய்க்கான நுளம்பு உற்பத்தியைத் தடுக்கும் நோக்குடனும் வீட்டுச் சுற்றாடலிலுள்ள மழை நீர் தேங்கி நிற்கக் கூடிய திண்மக் கழிவுப் பொருள்கள் பிரதேச சபைகள் மூலம் அகற்றப்பட்டு வருகின்றன. ஆனால் வலி.தெற்குப் பிரதேசத்தில் வீடுகளிலிருந்து சேகரிக்கப்பட்டு வீதிகளிலும் சந்திகளிலும் குவிக்கப்பட்டுள்ள திண்மக் கழிவுப் பொருள்கள் பல வாரங்களாகியும் அகற்றப்படாமலிருப்பதால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதுடன் சுகாதாரத்திற்கும் பங்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. இது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (201-115)

## ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.22

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு மாதாந்தம் நடத்திவரும் ஆய்வரங்கத் தொடரில் நாளை சனிக்கிழமை பகல் 10 மணிக்கு 'யாழ். மாவட்டத்தில் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறைகள்' என்ற பொருளில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி ஆய்வுரை நிகழ்த்துவார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு வர்த்தகத் துறையானது பெரும் பங்கு வகிக்கின்றது. அந்த வகையில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் அளப்பரிய சேவைகளையும் பணிகளையும் ஆற்றியுள்ளது. 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தத்தால் நகர்ப் பகுதியில் பொதுச் சந்தையில் இருந்த பல வர்த்தக நிலையங்கள் முழுமையாக அழிந்து போனதாலும் அவ்வேளையில் பல வர்த்தகர்கள் பாதுகாப்புத் தேடி ஏனைய பிரதேசங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்றதாலும் 2001ஆம் ஆண்டு அங்கத்தவர் எண்ணிக்கை 310ஆக குறைந்தது. அது மேலும் குறைந்து 2008ஆம் ஆண்டு 225ஆக குறைந்தது. நாட்டு நிலைமை சீரடைந்து வருவதால் இவ்வருடம் அங்கத்தவர் எண்ணிக்கை 291ஆக அதிகரித்துள்ளது.

அங்கத்தவர்களிடமிருந்து மாதாந்தம் அறவிடப்படும் சந்தா தொகையிலிருந்தே தனது நலனோம்புத் திட்டங்களை மன்றம் முன்னெடுத்து வருகிறது.

2000ஆம் ஆண்டு யுத்த வேளையில் சாவகச்சேரி நவீன சந்தையின் கிழக்குப் பகுதி பலத்த சேதங்களுக்கு இலக்காகியிருந்ததுடன் கூரைப்பகுதி முழுமையாக அழிந்திருந்தன. மக்கள் மீளக்குடியமர்ந்த வேளையில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராகவிருந்த டக்ளஸ் தேவானந்தாவிடம் மன்றம் விடுத்த வேண்டுகோளையடுத்து அமைச்சர் ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்து நவீனசந்தையைப் புனரமைத்து வழங்கினார்.

நகர்ப்பகுதி வணிக நிலையங்களில் பணியாற்றிய வகுப்புத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கென சங்கத்தை அமைத்துக் கொடுத்த பெருமை மன்றத்தையே சாரும்.

சாவகச்சேரி நகர்ப்பகுதி கடந்த 1990ஆம் ஆண்டு தொடக்கம் வீதி விளக்குகள் இல்லாமல் இருண்டு காணப்பட்டது. சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடத்திய மன்ற அங்கத்தவர்கள் சந்திப்பில் மன்றத்தினர் முன்வைத்த கோரிக்கையை ஏற்று அதற்கான நிதியினை அமைச்சர் ஒதுக்கி வழங்கியதில் நகர்ப் பகுதி மட்டுமல்ல நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 500இற்கு மேற்பட்ட வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது.

அண்மையில் சுகாதாரத் திணைக்களத்தினர் விடுத்த வேண்டுகோளையடுத்து சாவகச்சேரி நகரசபையினருடன் இணைந்து நகரப்பகுதியில் சிரமதானத்தினை மேற்கொண்டதுடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக நகர்ப் பகுதியில் புகையூட்டல் பணிக்குத் தேவையான எரிபொருளை வழங்கி வர்த்தக நிலையங்களைச் சுற்றி புகையூட்டல் செய்யப்பட்டன.

மன்றத்திற்கான அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இரண்டு எழுதுநர்கள் பணியாற்றி வருகின்றனர். அலுவலகம் 1990இல் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை திருமதி ம.கீர்த்திநாதன் பணியாற்றி வருகிறார். தொழில் வாய்ப்பு மற்றும் வெளிநாடு என மன்ற அலுவலகத்தில் எழுதுநர்களாகப் பணியாற்றிய எஸ்.உதயகுமார், ந.அருளீஸ்வரன், ந.தவேந்திரராசா, கு.விஜயகுமார், ம.விகர்ணன் பதவியிலிருந்து விலகியுள்ளனர். 1997ஆம் ஆண்டு தொடக்கம் க.பீரதீபன் பணியாற்றி வருகிறார். அலுவலகத்திற்கு ஆரம்பகாலத் தலைவர் சி.நவரத்தினம் வழங்கிய உருக்கு அலுமாரி மற்றும் மன்ற உறுப்பினர்களின் நலன்கருதி போட்டோப் பிரதி இயந்திரம் போன்றவை உள்ளன.



வன்னிப் பகுதியிலிருந்து கடந்த வருடம் நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிரந்தர வீடின்றித் தவித்த குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து வழங்க நகர்ப்பகுதி படை அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க மன்ற அங்கத்தவர்களின் (ஹார்ட்வெயர், மொத்த பலசரக்கு விற்பனை) ஒத்துழைப்புடன் 150 பைக்கற் சிமெந்து, கூரைத் தகடுகள் போன்றவை படையினரிடம் கையளிக்கப்பட்டன.

வர்த்தகர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு சங்கமானது பொது மக்களுக்கும் சேவைகள் வழங்கும் மன்றமாக செயற்படுவது பாராட்டத்தக்கது.

*(முற்றும்)*

# மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயம்


தொகுப்பு: ஐயந்தன்



இந்து சமயத்தின் ஒவ்வொரு கடவுளரையும் முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயங்கள் ஆறு என எமது முன்னோர் காலத்திலிருந்தே பயன்பாட்டில் உள்ளது. சிவத்தை முதன்மையாகக் கொண்டு சைவமும் சக்தியை முதன்மையாக கொண்டு சாக்தமும் விஸ்ணுவை முதன்மையாகக் கொண்டு வைணவமும் கணபதியை முதன்மையாக கொண்டு காணாபத்தியமும் முருகனை முதன்மையாக கொண்டு கௌமாரமும் சூரியனை முதன்மையாக கொண்டு சௌரமும் சமயங்கள் இந்து மக்கள் மத்தியில் காணப்படுகின்றன. ஆறு மதங்கள் உள்ள போதிலும் அவை ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருப்பதால் இந்து மக்களிடையே கருத்து வேறுபாடின்றி வழிபட்டு வருகின்றனர்.

சைவ சமய வரலாற்றில் தென்கைலாயம் என அழைக்கப்படும் பிரதேசத்தில் யாழ்.குடாநாடும் அடங்கும். யாழ்.குடாநாட்டில் முதன்முறையாக அமைக்கப்பட்ட சிவாலயம் தென்மராட்சியில்தான் உண்டு. அவ்வாறு பெருமைமிக்க தென்மராட்சியில் உள்ள கல்வம் சிவன் ஆலயம் மட்டுவில் கிராமத்தில் அமைந்துள்ளது. மட்டுவில் கிராமமானது தென்னை, பனை வளங்களுடன் உலகமெங்கும் புகழ்பெற்ற முட்டிக் கத்தரிக்காய் உற்பத்தி இடமாகும்.

சைவமக்கள் பெருமளவில் வாழ்ந்து வந்த மட்டுவில் பகுதியில் காலம் குறிப்பிட முடியாத காலம் தொடக்கம் தமது அருளினால் புகழ்பெற்ற பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயம் பற்றி ஆராய்வோம்.



இலங்கையில் உள்ள இந்து மத மக்களைப் பொறுத்த வரையில் பங்குனி மாதம் முதலாம் திகதி வந்ததும் அனைவரின் நினைவுக்கு வருவது மட்டுவில் பன்றித் தலைச்சி அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம்தான். பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் அனைத்து இந்து ஆலயங்களின் உற்சவ தினங்களை நினைவு கூர கட்டியம் கூறுவது போல் இருக்கும். பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் நிறைவு பெற்ற பின்னரே ஏனைய இந்து ஆலயங்களின் உற்சவங்கள் ஆரம்பமாவதை அனைவரும் அறிவர்.

பங்குனித் திங்கள் உற்வசம் என்றால் மக்கள் மாட்டு வண்டில்களிலும் கால்நடையாகவும் வருகை தந்து அங்குள்ள குளத்தில் நீராடிவிட்டு பொங்கலிட்டு வேறு பலகாரங்கள் செய்து கண்ணப்பர் காளாத்தியப்பருக்கு நிவேதித்ததுபோன்று தாங்களே ஆலய வாசலில் நிவேதித்து வணங்குவர்.

பன்றித் தலைச்சி அம்பாள் ஆலய பொங்கல் உற்சவத்திற்கு குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் கால்நடையாகவும் மாட்டு வண்டில்களிலும் வருகை தருவதால் ஆலயத்திலிருந்து நாலாபக்கமும் உள்ள வீதிகளில் ஐந்து மைல் தூரத்திற்கு பல தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து அடியார்களின் தாகசாந்திக்கு உதவுவது இன்றும் உள்ளது.

1950களில் ஆலயத்திற்கு போக்குவரத்து வாகனசேவைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் வாகனங்களில் வருவோர் தண்ணீர்ப் பந்தல்களில் நிறுத்தப்பட்டு தாகசாந்தி செய்யப் பட்டு வருகின்றனர். பன்றித்தலைச்சி பங்குனித் திங்களுக் கும் முட்டிக் கத்தரிக் காய்களுக்கும் தொடர்புண்டு எனலாம். ஏனெனில் பங்குனித் திங்கள் முதலா வது பொங்கல் உற்சவ தினத்தன்றே முட்டிக் கத்தரிக்காய் விற்பனைக்கு விடுவது இப்பகுதி விவசாயிகளின் விருப்பமாகும்.

ஆலய வெளி வீதிகள் பெரிய நிலப்பரப்பைக் கொண்டுள்ளதால் நாலாபுறமும் பொங் கல் செய்வதற்கும் அடி யார்கள் நெருக்கடியின்றி தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற முடிகிறது.

*(தொடரும்)*

தென்மராட்சி வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் நீண்டகாலம் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு ஜனவரியில் இடமாற்றம்

கிளிநொச்சி,ஒக்.22

வன்னிப் பெருநிலப்பரப்பு பாடசாலைகளுக்கு யாழ். மாவட்ட ஆசிரியர்களை பதிலீடாக மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்கள் அடுத்த வருடம் ஜனவரியில் இருந்து நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. மீளாய்வு செய்யப்பட்ட வேகத்தில் நடைமுறைப் படுத்தப்படவில்லை என வன்னிப் பெருநிலப்பரப்பு பாடசாலைகளில் நீண்டகாலமாக கடமை புரிந்துவரும் ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மூன்றாம் தவணை ஆரம்பத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உள்ளடங்கலாக வன்னிப் பெருநிலப்பரப்பு பாடசாலைகளில் நீண்டகாலமாக கடமையாற்றிய ஆசிரியர்களில் கணிசமான தொகையினர் யாழ். மாவட்டம் உட்பட வெளி மாவட்ட பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அவர்களுக்கு பதிலீடாக வன்னிப் பெருநிலப்பரப்பு பாடசாலைகளுக்கு 3 வருடகால நிபந்தனையுடன் ஒரு தொகுதி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

வன்னிப்பெருநிலப்பரப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றத்தில் முறைகேடு இருப்பதாக செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து இடமாற்றங்கள் இடை நிறுத்தப்பட்டு வடக்கு மாகாண ஆளுநரின் வழிப்படுத்தலுக்கு அமைய வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையிலான உயர்மட்ட கல்வி அதிகாரிகள் குழு கல்வி வலய ரீதியில் நேரடியாகச் சென்று ஆசிரியர் இடமாற்றப் பட்டியல்கள் மற்றும் ஆசிரியர்களின் மேன்முறையீடுகளை மீள்பரிசீலனை செய்து குறுகியகால அவகாசத்தில் புதிய இடமாற்றப்பட்டியல் ஒன்றை தயார் செய்தது.

ஆனால் இடமாற்றம் மீள்பரிசீலனை செய்யப்பட்ட வேகத்தில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த விடயத்தில் வடக்கு மாகாண கல்வி நிர்வாகம் பக்கச்சார்பாக நடந்து கொண்டுள்ளது என வன்னிப் பெருநிலப்பரப்பு ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பின் நிர்வாகம் சிவில் நிர்வாகத்துக்கு உட்படுத்தப்படாமல் இருந்த காலப்பகுதியில் ஆசிரியர் இடமாற்றம் தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு அமையவோ அல்லது வேறுவகையிலோ மேற்கொள்ளப்படவில்லை. இதனால் 18-20 வருடங்கள் வரையில் கடமையாற்றிய ஆசிரியர்கள் பலநூற்றுக் கணக்கானோர் தொடர்ந்து கடமை புரிகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் யுத்த நடவடிக்கைகளால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு உறவுகளை, உடைமைகளை இழந்தவர்களாகும். அவர்களில் ஒரு பகுதியினரே இடமாற்றம் செய்யப்பட்டு இடைநிறுத்தப்பட்ட பட்டியலில் உள்ளனர்.

வன்னிப் பெருநிலப்பரப்புக்கு பதிலீடாக இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் வசதிகள் தொடர்பாகக் காட்டப்படும் அக்கறையும் நியாயங்களும் தங்களைப் பொறுத்தவரையில் புறந்தள்ளப் பட்டிருப்பதாக வன்னிப் பெருநிலப்பரப்பு ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசேப் ஸ்ரான்லின் தகவல் தருகையில் :-

வன்னிப்பெருநிலப்பரப்பில் பாதிப்புக்குள்ளாகிய ஆசிரியர்கள் மற்றும் குறிப்பிட்டகால சேவை பூர்த்தி செய்த ஆசிரியர்கள் உடனடியாக வெளி மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட வேண்டும். அதற்கு பதிலீடாக மற்றும் வன்னி மாணவர்களின் கல்வியில் எதுவித மான பாதிப்பும் ஏற்படாத வகையில் வன்னிப் பெருநிலப்பரப்புக்கு ஆசிரியர்களை பொருத்தமான முறையில் இடமாற்றம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி வருகின்றோம். இந்த விடயத்தில் வடக்கு மாகாண கல்வி நிர்வாகம் மௌனம் சாதித்து வருகின்றது. வடக்கு மாகாண ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநரை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறோம் - என்றார். (ஐ-11)

# கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் மாணவர் வரவு வீழ்ச்சியடைந்துள்ளது

கிளிநொச்சி,ஒக்.22

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் அ.பங்கயற்செல்வன் தெரிவித்துள்ளார்.

இடப்பெயர்வுக்கு முன்னர் சுமார் 2,400 மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். தற்போது 1,400 மாணவர்கள் மட்டுமே உள்ளனர். முன்னர் 72 ஆசிரியர்கள் கற்பித்தனர். ஆனால் தற்போது இந்தத் தொகை 44 ஆகக் குறைவடைந்துள்ளது. எமக்கு 37 வகுப்பறைகள் தேவையாக உள்ளன. ஆனால் 18 வகுப்பறைகள் மட்டுமே கட்டடங்களில் இயங்குகின்றன. ஏனையவை மர நிழல்களில்தான் நடைபெறுகின்றன. இவற்றை நேரில் பார்க்க முடியுமென்றார் அவர்.

விரைவில் மழைகாலம் ஆரம்பமாகப் போகின்றது. அப்போது இந்தப் பாடசாலை பெரும் சிரமத்தை எதிர்கொள்ளும் நிலை தோன்றும். வகுப்பறைகளில் மாணவர்கள் ஒதுங்கி நிற்கக் கூட இடவசதி இல்லை. இதனால் சுற்று முறையில் மாணவர்களுக்குப் பாடங்களை நடத்த நாம் எண்ணியுள்ளோம். இதற்கு வலயக் கல்வி அலுவலகத்தின் அனுமதியைக் கோரியுள்ளதாகவும் அதிபர் மேலும் கூறினார்.

இப்பாடசாலையில் பெற்றோரை இழந்த 32 பிள்ளைகளும், பெற்றோரில் ஒருவரை இழந்த 200 பிள்ளைகளும் பயில்கின்றனர். இவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது.

ஏற்கனவே இருந்த இரட்டை மாடிக்கட்டடம் தரைமட்டமாக்கப் பட்டுள்ளது. இந்தப் பாடசாலையின் உடனடித் தேவை கட்டடங்களே. விஞ்ஞானம், ஆங்கிலம், கணினி, விவசாய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. விஞ்ஞான ஆய்வு கூடமும், இணைப்பாட விதானங்களுக்குத் தேவையான கட்டடங்களும் தேவையாகவுள்ளன.

இவைகள் தான் உடனடியாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள்- என்றார் அதிபர்.

# பேராற்றில் வதியும் மலையக மக்களுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கப்படவில்லை

ஒட்டுசுட்டான்,ஒக்.22

பேராற்றுக் கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் அரை ஏக்கர் திட்ட மலையக மக்களுக்கு இதுவரையிலும் விவசாயத்துக்கான உள்ளீடுகளோ மேட்டு நிலப் பயிற்செய்கைக்கான விதை தானியங்களோ வழங்கப்படவில்லை என அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

அவர்களுக்கென விவசாயத்துக்கு காணி இல்லாதுவிட்டாலும் காணியினை குத்தகை அடிப்படையில் பெற்று செய்வதற்கு விதை தானியங்கள் வழங்காமையால் தாம் தொடர்ந்து கூலி வேலையையே நம்பி இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர்.

இதில் எமது பிரதேசக் கமக்கார அமைப்பினர் தம்மைப் புறக்கணித்து விடுகின்றனர் எனவும் கவலையோடு தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இதனைக் கருத்திற் கொண்டு தமக்கும் உள்ளீடுகள் வழங்க ஆவன செய்ய வேண்டுமென கேட்டுள்ளனர். (ஐ-341)

# மன்னார் தமிழ் செம்மொழி விழாவில் ஆய்வரங்கம் நாளை ஆரம்பமாகின்றது

மன்னார்,ஒக்.22

மன்னாரில் இன்று ஆரம்பமாகும் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை மன்னார் நகர மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றன.

இலக்கிய விழாவின் இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை செபஸ்ரியான் குரூஸ் அண்ணாவியார் அரங்கு மன்னார் தமிழ்ச் சங்கத்தின் நிதிச் செயலாளர் தோமஸ் மரியதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.சிவலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரபாகரமூர்த்தி, மன்னார் மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் முருகேசு சிவகுமாரி, கௌரவ விருந்தினர்களாக சிறுவர் இலக்கியப் படைப்பாளி பி.பி.அந்தோனிப் பிள்ளை,ஜப்பான் டோக்கியோ பல்கலைக்கழகத்தின் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் 'ஆதலால் தமிழ் மேல் காதல் கொள்வீர்' என்னும் தலைப்பில் கவிஞர் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் கவியரங்கமும் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். சிவகரனின் 'தமிழ் பயன்பாடு' என்னும் தலைப்பில் சிறப்புரையும், கலார்ப்பணா நாட்டியக் கல்லூரியினரின் குழு நடனமும் இடம் பெறவுள்ளன.

மூன்றாம் நாளின் மாலை அமர்வான நாடக விழா பி.ப 3 மணிக்கு ஆரம்பமாகும். முகம்மது காசிம் புலவர் அரங்குக்கு மன்னார் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் அருட்திரு ஜெறோம் லெம்பேட் அடிகளார் தலைமை வகிப்பார்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மடு கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்ரியன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகரசபைச் செயலாளர் திருமதி ஆர்.பெர்னடெற், குரூஸ், இடம் பெயர்ந்த மன்னார் பாடசாலைகளின் இணைப்பாளர் ஜனாப் எஸ்.ஏ.ஹினாயத்துல்லா,

கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில மொழி கற்பித்தல் துறையின் தலைவர் கலாநிதி கந்தையா சிறி கணேசன், மூத்த நாட்டுக் கூத்து கலைஞரும் இளைப்பாறிய அதிபருமான கலாபூஷணம் கலைஞர் குழந்தை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் 'முயலார் முயல்கிறார் வெற்றிக்காய்' என்னும் சிறுவர் நாடகம், 'ஞான சவுந்திரி' இசை நாடகம், 'கோலியம்' நவீன நாடகம், 'தர்மத்தின் தீர்ப்பு' இலக்கிய நாடகம் 'கல் சுமந்த காவலர்கள்' கூத்து நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

செம்மொழி விழாவின் இரண்டாம் நாளான சனிக்கிழமை ஆய்வரங்கம் ஆரம்பமாகின்றது. ஆய்வரங்கத்தின் முதலாம் நாள் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார் அரங்கில் பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் தலைமையில் 'தமிழின் இலக்கியப் பாரம்பரியம்' என்னும் தலைப்பில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வை மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் தொடக்கி வைப்பார். இதில் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி துரைமனோகரன் தலைமையில் 'தமிழகத்தின் இலக்கிய வேர்கள்' என்னும் தலைப்பில் அகம், புறம் பற்றிய கருத்தாடலும்,

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வ.மகேஸ்வரன் தலைமையில் 'அனைத்திந்தியாவுடனான முதல் இலக்கிய ஊடாட்டங்கள்' என்னும் தலைப்பில் சமண, பௌத்த இலக்கியங்களில் தமிழ் நிலை பற்றிய கருத்தாடல்களும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட ...' என்னும் தலைப்பில் சைவ, வைணவ மதப் பாரம்பரியங்களில் பக்தி, முன்னாள் பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபரும் கவிஞருமான சோ.பத்மநாதன் தலைமையில் 'அனைத்திந்தியப் பண்பாட்டுக்கு தமிழின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் சேக்கிழார், கம்பனை மையமாகக் கொண்டு பக்தி இலக்கியங்களின் தோற்றம் வளர்ச்சி பற்றிய ஆய்வும், கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி அம்மன் கிளி முருகதாஸ் 'புதிய விறகுகளும் புகை மூட்டங்களும்' என்னும் தலைப்பில் விஜயநகர ஆட்சி முதல் நவீன கால தொடக்கம் வரையிலான இலக்கிய நெறிகள் பற்றிய ஆய்வும் இடம்பெறவுள்ளன. நிகழ்வின் முடிவில் கருத்துப் பகிர்வும் இடம்பெறும்.

ஆய்வரங்கின் இரண்டாம் நாளான 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மன்னார் சித்திவிநாயகர் கல்லூரியில் இடம்பெறும் ஆறுமுகநாவலர் அரங்கத்தில் 'தமிழ் சர்வதேசியத்தை நோக்கி' என்னும் தலைப்பில் பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.நுஃமான் தலைமையில் ஆய்வரங்கம் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைப் பேராசிரியர் கலாநிதி கி.விசாகரூபன் 'ஈழத்தில் தமிழ்' ஆரம்பகாலம் முதல் போர்த்துக்கேயர் காலம்வரையும் கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை பதில் தலைவர் கலாநிதி செ.யோகராசா 'சிங்கப்பூர் முதல் அமெரிக்கா, கனடா வரை' என்னும் தலைப்பில் தமிழ் மொழியின் வியாத்தியும் தமிழின் புகலிட இலக்கியங்களும்.

கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் விரிவுரையாளர் அருட் கலாநிதி அ.பி. ஜெயசேகரம் 'கிறிஸ்தவமும் தமிழ் பண்பாட்டின் அகர்ச்சியும்' என்னும் தொனிப் பொருளிலும் தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் றமீஸ் அப்துல்லா 'இஸ்லாம் தந்த தமிழ்' என்னும் பொருளிலும் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித் துறைத் தலைவர் க.இரகுபரன் 'ஆங்கில வருகையும் தமிழின் நவீன மயமாக்கலும் என்னும் தொனிப் பொருளிலும் ஆய்வுரை நிகழ்த்துவார். நிகழ்வின் இறுதியில் கருத்துப் பகிர்வும் இடம் பெறவுள்ளது. (ஐ)

# முள்ளியவளையில் தமது காணிகளில் மீளக்குடியேறுகிறார்கள் முஸ்லிம் மக்கள்

கிளிநொச்சி,ஒக்.22

முள்ளியவளைப் பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்




குடியேற்றம் செய்வதற்காக தமது பிரதேசங்களுக்கு வந்துள்ளார்கள்.

தண்ணீரூற்று, நீராவியடி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் தமது சொந்தக் காணிகளில் குடிமனைகளை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

போர்ச் சூழ்நிலையின் போது இக்கிராமங்களில் இருந்து வெளியேறி வெளிமாவட்டங்களில் வசித்த மக்களே இவ்வாறு மீண்டும் தமது காணிகளைத் துப்புரவு செய்து அவற்றில் தற்காலிக குடிமனைகளை அமைத்து வருவதாகக் கூறப்படுகின்றன. (ஐ-313)

# கவிதை, சிறுகதை போட்டிகளில் பரிசு பெறுவோர்

மன்னார்,ஒக்.22

மன்னார், தமிழ்ச் செம்மொழி விழாவையொட்டி நடத்தப்பட்ட கவிதை, சிறுகதைப் போட்டிகளில் கலந்து கொண்டு முதல் 3 இடங்களைப் பெற்றவர்கள் மற்றும் பாராட்டுப் பரிசுகளைப் பெறுவோரின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவர்களின் விவரம் வருமாறு:-

**கவிதை**

**முதலாம்பரிசு:** (தொடர்ந்தும் எம் கதை தொடர்கதை தானோ) வ.யோகானந்தசிவம், வட்டு. வடக்கு , வட்டுக் கோட்டை.

**இரண்டாம் பரிசு:** (ஈழத் தமிழரின் அவலம்) த.வித்தியா, 85/6, அருணகிரி வீதி, திருகோணமலை.

**மூன்றாம் பரிசு:-** (ஈழத் தமிழர்களின் அவலம்) சின்னையா சிவபாலன், செல்வநகர், எழுத்தூர், மன்னார்.

**பாராட்டுப் பரிசு பெறுவோர்**

அ.அந்தோனிமுத்து இல.328, கடலேரி வீதி, மன்னார், அம்பலவாணர் கௌறிதாசன் ஆலங்கேணி கிழக்கு,கிண்ணியா,க.மாயா மதுக்ஷினி இல.50/7, பன்சால வீதி, ஹற்றன்,சரவணமுத்து நவனேந்திரன் 170/B, சோமநாதர் வீதி, பாண்டிருப்பு 01, கல்முனை. எம்.எம்.அஷ்ரப் 489, ஆஸ்பத்திரி வீதி, சாய்ந்தமருது -07, ஏ.எம்.பாத்திமா -சஹானா முஸ்லிம் மகாவித்தியாலயம் சம் மாந்துறை,ஏ.சந்திரிகா-6ஆம் ஒழுங்கை, கோவில் புதுக்குளம், வவுனியா.

**சிறுகதை**

**முதலாம் பரிசு:-** (எங்கள் பொழுதும் விடியும்) நா.யோகேந்திரநாதன்-நீர்வேலி தெற்கு.

**இரண்டாம் பரிசு:** (சிரிக்க மறந்த சின்னச் சித்திரங்கள்) ஆரபி சிவகுகன்-ஆணைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு.

**மூன்றாம் பரிசு:** (சிலுவைப் பாடு) தம்பிராசா பரமலிங்கம்-45,மவுண்கார்மேல் வீதி, குருநகர்.


**பாராட்டுப் பரிசு பெறுவோர்**

திருமதி மீராமுகைதீன் உம்மு நசிலா - இல.18/53 அல்அமீன் வீதி, புதிய காத்தான்குடி-06, பாலசுப்பிரமணிய ஐயர் பாலச்சந்திரன்-சண்முகபவனம்,மயிலணி, சுன்னாகம்,ப.உதயகுமார்- தேரிட்டி அளவெட்டி வடக்கு, பிரதீபா அனிதா-ஏ.பி.சி. லேன், கைதடி தெற்கு.

எஸ்.பி.கிருஷ்ணன் - 244/4 கண்டி வீதி, யாழ்ப்பாணம். கிருஷ்ணபிள்ளை நவநீதன்- பாடசாலைவீதி,தொண்டைமானாறு, சோ.சிவகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் மாத நினைவுகளுடன்....



மலர்வு
19.04.1948

உதிர்வு
23.09.2010

## அமரர் சின்னப்பொடியன் இரத்தினம்

[உரிமையாளர், S.R. கட்டட ஒப்பந்த நிறுவனம், கைதடி]

எங்கள் உலகிற்கு ஒளிதந்த சூரியனே
கங்குல் காணாமல் ஒளிதந்த முழு நிலவே
பொங்கும் மகிழ்வுகள் தந்த வசந்தமே
இங் கெமக்கு வளங்கள் தந்த வள்ளலே
திங்கள் ஒன்று இன்றுடன் கழிந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன்.....

கைதடி வடக்கு,
கைதடி.

குடும்பத்தினர்.

# ஐந்தாம் ஆண்டின் ஆறாத நினைவலைகள்



மலர்வு:
10.04.1986

உதிர்வு:
17.05.2005

## செல்வி
## அர்ச்சனா பாலசுப்பிரமணியம்

(திதி: பௌர்ணமி- 22.10.2010)

கல்லாத மாந்தரம்மா கற்றிருந்தும் நன்றி
சொல்லாத பேர் வழிகள்
பொல்லாத மாந்தர் வாழும் பொய்யான இத்தரையில்
எப்படி வாழ்வதென்று எம்மைவிட்டுப் பிரிந்தாயோ?

'நில்லாது காலம் நிலையாது நம் வாழ்வு-என்றும்
செல்லாது எம் மனதில் செல்வமே உன் நினைவு'


விளையாட்டரங்க வீதி,
கட்டப்பிராய்.

(104922)

நினைவில் வாடும்:
குடும்பத்தினர்

# ஆறாம் ஆண்டு ஞாபகார்த்த அஞ்சலி

உருவமாக: 1946.06.25 அருவமாக: 2004.10.27



அப்பா!
வாழ்க்கை எனும் தொலைதூரப் பயணத்தில் - இறுதிவரை
உற்ற துணையாய் இருப்பீர்கள் என்று இறுமாந்திருந்தோம்
நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் படைத்தவனுக்கு தொழிலேது?
ஆறாண்டுகள் கடுகதியாய் விரைந்து விட்டதப்பா- எனினும்
உங்கள் அழகான புன்சிரிப்பு முகம் மறையவில்லை
உங்களின் பிரிவு தந்த பேரிழப்பினை - இன்றுவரை
மறக்கமுடியாது வேதனையே வாழ்க்கையாக வாழ்கிறோமப்பா
எம் துயர் கண்டு மீள்பிறப்பெடுத்து எம்மிடம் வருவீர்களாப்பா?
அதுவரைக்கும் நம்பிக்கையுடன் உயிர் சுமந்து
உங்களின் அமைதிக்காய்ப் பிரார்த்திப்போம்.

கென்ஸ்மன் லேன்,
டச்சு றோட், சாவகச்சேரி.

நீங்கா நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.

## அமரர்
## சுப்பிரமணியம் செல்வராசா

(உரிமையாளர், வாணி ரெக்ஸ் - சாவகச்சேரி)
திதி: பூரணை (22.10.2010)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு சர்வதேச மட்டத்தில் செயற்பாடுகள்

## மன்றில் பிரதமர் தெரிவிப்பு



யுத்தத்தின் மூலம் சிதறடிக்கப்பட்ட புலிகள் அமைப்பை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு சர்வதேச மட்டத்தில் இரகசியமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் அமெரிக்காவில் தங்கியுள்ள உருத்திரகுமாரும், நோர்வேயில் இருக்கும் நெடியவனும் முன்நின்று செயற்படுகின்றனர் - என பிரதமர் தி.மு. ஜயரத்ன கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் கூறினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பான பிரேரணையை சபையில் சமர்ப்பிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

யுத்தத்தில் புலிகள் அமைப்பு சிதறடிக் கப்பட்டது. எனினும், புலிகளின் உட்புலனாய்வு, இராணுவப் பிரிவு என்பன மிகவும் இரகசியமான முறையில் இயங்கி வருகின்றன என இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இதுவரை வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இருந்து வெடிமருந்துகளும், தற்கொலை அங்கிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

புலிகளின் 30 வருட ஈழக் கோரிக்கை அழித்தொழிக்கப் பட்டுவிட்டது. அதேவேளை, வெளிநாடுகளில் தங்கி இருக்கும் தீவிர புலி ஆதரவாளர்கள் இலங்கையில் மீண்டும் புலிகள் அமைப்பை உயிர்ப்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

சர்வதேச இணையத்தளம் மற்றும் எஸ். எஸ்.எம்.எஸ். ஆய்வுகளின் மூலம் இதற்கான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

யுத்தம் முடிந்த பின் வெளிநாடுகளில் இருந்து திரும்புபவர்களுள் இப்படியானவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஊடுருவலாம். இதனைத் தடுக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு.

நாட்டின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட வேண்டும் என்பதாலேயே மீண்டும் அவசர காலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை மனிதாபிமான மறுசீரமைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறோம். முன்னாள் போராளிகளில் 4,485 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சரணடைந்தவர்களின் சுயதொழில், மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காக பல கோடி ரூபாக்களை செலவிட்டு வருகின்றோம்.

நாட்டில் மீண்டும் பயங்கரவாத நடவடிக்கைகள் தலைதூக்குவதற்கு இடமளிக்க முடியாது. எனவே நாட்டின் பாதுகாப்பை உறுதிபடுத்துவதற்காக அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் - இவ்வாறு பிரதமர் தெரிவித்தார்.

# பொன்சேகாவுக்கே இந்தக்கதி என்றால் சாதாரண தமிழர் நிலைமை என்னவாகும்?

## சபையில் சுமந்திரன் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஒக். 22

பயங்கரவாதத்தை முடித்து வைத்தவர் என்று தலையில் தூக்கி வைத்துக்கொண்டாடப் பட்ட சரத் பொன்சேகாவுக்கே இந்தக் கதி என்றால் சாதாரண தமிழ் மக்களின் நிலைமை என்ன?

இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார். நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நீதிபதிகளின் சம்பள அதிகரிப்புத் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இரண்டு லட்சத்து 20 ஆயிரம் தமிழ் மக்கள் அகதிமுகாம்களில் அடைத்து வைக்கப்பட்டனர். அவர்களைத் தடுத்து வைப்பதற்கான தடை உத்தரவு பாதுகாப்புச் செயலாளராலோ அல்லது வேறு எவராலோ பிறப்பிக்கப்படவில்லை.

நீதிமன்ற உத்தரவின்றியே அந்த மக்கள் ஒன்றரை வருடங்களாக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களுள் அதிகமானவர்கள் இப்போது விடுதலை செய்யப்பட்டு இன்னும் 30 ஆயிரம் மக்கள் அகதி முகாம்களில் உள்ளனர்.



எது எப்படி இருப்பினும், இவர்கள் விடயத்தில் சட்டம் எங்கே சென்றது? நீதிமன்றம் இந்த விடயத்தில் ஒத்துழைப்பு வழங்கவில்லை.

சரத் பொன்சேகாவின் நிலைமையைப் பாருங்கள். பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டியவர் என்று முழு நாடுமே அவரைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியது.

இப்போது அவரின் நிலைமையைப் பாருங்கள். அவ்வாறு மதிக்கப்பட்ட - தலையில் வைத்துக் கொண்டாடப்பட்ட சரத் பொன்சேகாவுக்கே இந்த நிலைமை என்றால், சாதாரண தமிழ் மக்களின் நிலைமை என்ன என்று சொல்லத் தேவையில்லை. - என்றார். (சி)

# புயலைக் கிளப்பியது கே.பி. விவகாரம்; திக்குமுக்காடினார் அமைச்சர் தினேஷ்

வட்டுக்கோட்டைக்கு வழிகேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு என்கிறார் அமைச்சர். நான் குமரன் பத்மநாதன் தொடர்பாகக் கேள்வி எழுப்பும்போது அமைச்சர் எதை எதையோ கூறிக் குழப்பியடிக்கிறார் என சபையில் குற்றம் சுமத்தினார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான தயாசிறி ஜயசேகர.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றம் சாபாநாயகர்சமல்ராஜபக்ஷதலைமையில் கூடியபோது எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குமரன் பத்மநாதன் தொடர்பாக வாய்மூல விடைக்கான இரண்டு கேள்விகளை எழுப்பினார்.

பிரதமரிடம் எழுப்பிய இரு கேள்விகளுக்கும் ஆளும் கட்சிப் பிரதமகொரடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதில் அளித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பிரிவின் முன்னாள் தலைவரான குமரன் பத்மநாதன் என்று கைதுசெய்யப்பட்டார்? அவர் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டது எப்போது? அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் என்ன? குமரன் பத்மநாதனை எந்த நீதிமன்றத்தில் ஆஜர் செய்தீர்கள்? அவர் எங்கே சிறைப்படுத்தப்பட்டுள்ளார்? அவர் சிறைப்படுத்தப்பட்டுள்ள சிறைச்சாலையின் பெயர் என்ன?

- இவ்வாறு தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார். அத்தோடு, இவ்வாறு பயங்கரவாதத் தலைவர் எனக் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படும் கே.பியை அண்மையில் வன்னிப் பிரதேசத்திற்கு அழைத்துச் சென்றது எப்படி என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

கே.பியுடன் தொடர்புடைய மற்றும் ஒரு கேள்வியையும் தயாசிறி ஜயசேகர எழுப்பினார்.

சர்வதேச மட்டத்தில் குமரன் பத்மநாதனால் நிர்வகிக்கப்பட்ட சொத்துக்கள் இனங்காணப்பட்டுள்ளனவா? அவற்றின் பெறுமதி என்ன? அவை எந்த எந்த நாடுகளில் இருக்கின்றன. இன்றளவில் அந்தச் சொத்துக்களில் அரசுடைமையாக்கப்பட்டவை எவை. அவை எங்கே வைக்கப்பட்டுள்ளன என்றும் இரண்டாவது கேள்வியை எழுப்பினார்.

இக்கேள்விகளுக்கு ஆளும் கட்சிக் கொரடாவான தினேஷ் குணவர்த்தன பதில் அளித்தார்.

அமைச்சரின் கேள்வியின் பின்னர் எதிர்த்தரப்பு உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட இடைக் கேள்விகளால் அமைச்சர் திக்குமுக்காடிப்போனார்.

அதாவது கே.பியையும் மற்றும் புலி உறுப்பினர்களையும் கைதுசெய்துள்ளதால் சர்வதேச மட்டத்தில் புலிகளை ஒடுக்கி விட்டோம் என்று கூறிகின்றனர் ஒரு பக்கம்.

அதே அரசு இன்று சர்வதேச வலையமைப்பின் ஊடாகப் புலிகள் மீண்டும் புத்துயிர் பெற்று வருகின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளது என்று மறுபக்கம் கூறிகின்றனர்.

இதில் எது உண்மை என்றும் தயாசிறி கேட்டார்.

ஜனாதிபதியுடன் தேர்தலில் போட்டியிட்ட ஒரே காரணத்திற்காக சரத்பொன்சேகாவை கைது செய்தீர்கள். அவசர அவசரமாக விசாரணைகளையும் நடத்தி 30 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கிவிட்டீர்கள்.

அதேவேளை சர்வதேச பயங்கரவாதத் தலைவர் என்று அரசால் கூறப்பட்ட குமரன் பத்மநாதன் தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று ரவி கருணாரட்ண கேட்டார்.

தொடர்ச்சியாக எழுப்பப்பட்ட தொடர் கேள்விகளால் அமைச்சர் திக்குமுக்காடிப்போனார்.

எனினும் குமரன்பத்மநாதன் 2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி கைதுசெய்யப்பட்டார். இவருடைய செயற்பாடுகள் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு அமைய படையினரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்துவதற்காகவே வன்னிக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என சுருக்கமாக அமைச்சர் பதிலளித்தார்.

ஐயா, நான் உங்களிடம் கேட்டது ஒன்று. நீங்கள் பதில் அளிப்பதோ வேறு ஒன்று. வட்டுக்கோட்டைக்கு வழி எது என்றால், துட்டுக்கு ரெண்டு கொட்டைப் பாக்கு என்று பதில் அளிக்கலாமா?

நேரடியாக எனது கேள்விக்குப் பதில் தாருங்கள். கே.பியிடம் கைப்பற்றப்பட்ட சொத்துக ளின் பெறுமதி எவ்வளவு. அவற்றை எங்கே வைத்துள்ளீர்கள் என்று நேராகப் பதில் கூறுங்கள் என வலியுறுத்தினார் தயாசிறி.

இதனால் சற்று ஆத்திரமடைந்த அமைச்சர் நீங்கள் கேட்கும் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் அளிக்கமுடியாது. தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காக எதனையும் வெளிப்படையாகக் கூறமுடியாது என்றார் அமைச்சர்.

தயாசிறியோ விட்டுவிடுவதாக இல்லை. என்ன ஐயா. குமரனைப் பிடித்துவிட்டோம், சொத்துக்களைப் பறிமுதல் செய்துவிட்டோம் என்று எல்லா ஊடகங்களுக்கும் கூறினீர்கள். பத்திரிகைகளில் செய்திகள் வெளிவருகின்றன. ஆனால் இந்த அதி உயர் சபையில் கூற மறுப்பது வேடிக்கையாக இருக்கின்றது. ஏன் யாருக்கும் பயப்படுகின்றீர்களா என்று கேட்டார் தயாசிறி.

இந்த உறுப்பினருக்கு தேசிய பாதுகாப்புத் தொடர்பான அக்கறை இல்லை. எனவே என்னால் பதில் சொல்லமுடியாது என அமைச்சர் தினேஸ் குணவர்தன தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

ஐயா எனக்கு கேள்வி கேட்கும் உரிமையுண்டு. அதற்குப் பதில் அளிக்க வேண்டியது அமைச்சரின் கடமை அல்லவா என்று சபாநாயகரிடம் கேட்டார் உறுப்பி னர். நீங்கள்தான் மூன்றுக்கும் அதிகமான கேள்விகளைக் கேட்டுவீட்டீர்களே. அதற்கு அமைச்சர் பதில் அளித்துவிட்டார் என்றார் சபாநாயகர்.

ஐயா, நான் கேட்டது ஒரே கேள்வி. பத்மநாதனிடம் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு, அவை எங்கே வைக்கப்பட்டுள்ளன என்று மட்டும் கூறட்டும் என்றார் தயாசிறி ஜயசேகர.

**சபையில் கேட்டவை**

கூறவேண்டியதை எல்லாம் கூறிவிட்டேன். இதற்கு மேல் எதையும் கூறமுடியாது என்று மறுத்துவிட்டார் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

நேற்று அமைச்சர்களின் பொறுப்புகள் அமைச்சு மாற்றங்கள், அதிகாரங்கள் குறைக்கப்பட்டனவா என்றும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அதாவது அமைச்சர்களின் பொறுப்புகள், 2010 ஏப்ரல் 30ஆம் திகதி அமைச்சர்களின் பொறுப்புகள் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலின் பின் பொறுப்புகள் மாற்றப்பட்டவை, அதிகாரங்கள் குறைக்கப்பட்டனவா? குறைக்கப்பட்ட அதிகாரங்கள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க பிரதமரிடம் ஒரு கேள்வியை எழுப்பினார்.

இக்கேள்விக்கும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவே பதில் அளித்தார்.

அப்போது அமைச்சரின் பதில்கள் வழமைக்கு மாறாக நகைச்சுவையாகவும் நையாண்டியாகவும் இருந்தது.

அதாவது எதிர்க்கட்சியினர் அமைச்சுகளின் பொறுப்புகள் தொடர்பாக அறிந்துகொள்வதில் மிகவும் ஆர்வமாக இருக்கின்றனர். காரணம் நவம்பர் மாதத்தில் ஜனாதிபதி இரண்டாவது பதவிக் காலத்தைப் பொறுப்பேற்கும்போது மேலும் பலர் அரசின் பக்கம் வரவுள்ளனர். அதனால்தான் இப்போதே அமைச்சுக்களின் பொறுப்புகள் தொடர்பாக அறிந்துகொள்ள ஆசைப்படுகின்றனர் என்று கூறினார். இதனால் சபையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

தொடர்ந்து பிரதம நீதியரசர் உட்பட நீதியரசர்கள், நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்களினதும் சம்பள உயர்வு, சட்டமூலம் தொடர்பான விவாதம் ஆரம்பமானது.

இந்த விவாதத்தின்போது பெரும்பாலும் சரத் பொன்சேகாவின் கைது தொடர்பாகவும் குமரன் பத்மநாதனின் விடயம் தொடர்பாகவும் பெரிதும் விமர்ச்சிக்கப்பட்டது.

ஜே.வி.பி. உறுப்பினர் விஜித்த ஹேரத் உரையாற்றும்போது, குமரன் பத்மநாதனுக்கு அரசு வழங்கிவரும் கௌரவம், சலுகைகள் தொடர்பாகக் கடுமையாக விமர்ச்சித்தார். அதேவேளை இந்த நாட்டைப் பயங்காரவாதப் பிடியில் இருந்து மீட்டெடுத்த சரத் பொன்சேகா இன்று சிறையில் கைதியாக இருக்கின்றார். இப்போது நீதித்துறை என்ன செய்கின்றது என்றும் சாடினார்.

இவருடைய குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலடி கொடுத்தார் பிரதி அமைச்சர் லலித் திஸாநாயக்க.

அதாவது இன்று சரத்பொன்சேகாவுக்காக வக்காளத்து வாங்கும் ஜே.வி.பியினர் தான் முன்பு சரத் பொன்சேகாவை பித்தளைப் பொத்தானைக் கழற்றிவிட்டு வீட்டுக்கு விரட்டுவோம் என்றனர். இதை இப்போது மறந்துவிட்டனர். அன்று கோட்டைக் கழற்றுவோம் என்ற ஜே.வி.பியினர் தான் இன்று சரத் பொன்சேகாவுக்கு கொடி பிடிக்கின்றனர்.

நேற்றுமுன்தின விவாதத்தின் போது மிகவும் காரசாரமாகவும், சூடாகவும் இருந்த விடயம், ஆளும் கட்சி உறுப்பினாரான ஏ.எச்.எம். அஸ்வருக்கும் எதிர்க் கட்சி உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கும் இடையிலான உச்சக்கட்டக் கருத்து மோதல் தான்.

அஸ்வர் உரையாற்றும்போது ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையை பெரிதும் பாராட்டினார். ஐ.தே.க. ஒரு தேசத்துரோகக் கட்சி என்றும், சர்வதேச அரங்கில் நமது நாட்டைக் காட்டிக் கொடுக்கின்றனர் என்றும் வசை பாடினார்.

அப்போது எதிர்க்கட்சி உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன சபைக்குள் பிரவேசித்தார்.

இன்று புலிகளை அழித்து விட்டோம். அன்று நம்மில் எவருக்கும் வடக்கே செல்லமுடியாது. டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவுக்குக் கூட அங்கே செல்ல முடியா மிலிருந்தது என்று கூறினார் அஸ்வர்.

இவருடைய கூற்றை மறுத்தார் டாக்டர். அஸ்வர் கூறுவது தவறு நான் யுத்த சூழ்நிலையிலும் யாழ். சென்றுவந்தேன். யாழ். மாவட்டத்திற்குப் பொறுப்பாக இருந்து ஒரே சிங்கள அமைச்சர் நான்தான் என்றார் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன.

இந்தியா முதல் உலகமெல்லாம் சென்று புலிகளுக்கு ஆதரவாகவும் நாட்டிற்கு விரோதமாகவும் பிரசாரம் செய்த துரோகிகள் என்று சாடினார் அஸ்வர்.

ஆம், அன்று நாடாளுமன்ற ஒன்றியத்தின் அதிமுக்கிய உறுப்பினரான அஸ்வர், முன்பு இப்பக்கம் இருந்துகொண்டும் இப்படித்தான் கத்திக் கொண்டிருந்தார் என்று ஜயவர்த்தன கூறிவிடவே அஸ்வர் ஆவேசம் கொண்டவர் போல் கடுமையாக விமர்ச்சிக்க ஆரம்பித்துவிட்டார். கழுதைகள், நாய்கள் என்ற வார்த்தைகளும் இரு பக்கத்தாலும் வெளிப்பட்டன.

துரதிஷ்டவசமாக அஸ்வர் பேசி முடிந்தபின் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது.

பேச்சை ஆம்பிக்கும்போது ஐயா, கழுதை ஒன்று கத்தி ஓய்ந்த பின் நான் எனது பேச்சை ஆரம்பிக்கின்றேன் என்றார். அதனை அஸ்வர் கடுமையாக ஆட்சேபித்தார். ஐயா, நான் யாருடைய பெயரையும் அந்தக் கழுதைக்குச் சூட்டவில்லையே.

அந்தக் கழுதைகள் அஸ்வரின் பெயரைக் கூறிக்கொண்டு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பேரீச்சம்பழங்களை சொந்தப் பாவனைக்குப் பயன்படுத்தின. பழங்களை உண்டு சிறுநீரையும் குடித்தனவாம் என்றார்.

இரா.புத்திரசிகாமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**



எளிதில் முடிந்துவிடும் என நினைத்த வேலை ஒன்றுக்குக் கடுமையாக அலையலாம். தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியாகப் புதியவர்கள் சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். எதிர்கால நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்திகளைக் கேட்கலாம்.

**இடபம்:**



எதிலும் நாணயமாகவும், நம்பிக்கையுடனும் நடந்து கொள்வீர்கள். வியாபாரிகள் தந்திரமாகச் செயற்பட்டு, கூடுதல் வருமானம் பெறுவர். உங்களின் புத்திசாலித் தனமான செயற்பாடுகளைப் பார்த்து, நண்பர்கள் பாராட்டலாம். உறவினர்கள் சிலரின் உபசரிப்பில் பெருமிதம் அடைவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்தவர் உங்களைத் தேடி வரலாம்.

**மிதுனம்:**



எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நடக்கும். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். வீடு, மனை வாங்க போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடும் நண்பர்கள் சிலரை ஊக்கப்படுத்து வீர்கள். நீங்கள் செய்த உதவிக்கு ஒருவர் பதில் உதவி செய்யலாம்.

**கடகம்:**



சிலர் உங்களிடம் தந்திரமாகப் பேசி ரகசியங்களை அறியலாம். தொழில் ரீதியான கூட்டங்கள், நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். வருமானத்தைப் பெருக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். நீண்ட நாள்களாகச் சந்திக்காத நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்காகச் சில செலவுகளைச் செய்யலாம்.

**சிங்கம்:**



மனஅமைதி பாதிக்காமல் இருக்க இறைவழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல சில விடயங்கள் கை நழுவிப் போகலாம். ஓய்வு எடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்குச் சிலரின் தொல்லைகளுக்கு ஆள்படலாம். வாகனங்கள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம். மறதியைத் தவிர்க்கவும்.

**கன்னி:**



தொலைந்து விட்டதாக நினைத்த பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கலாம். நண்பர்களுடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி காணலாம். கடிதங்கள் மூலம் நல்ல செய்திகள் வரலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றிப் பெருமை சேர்க்கலாம். பரபரப்பாகச் செயற்படும் நாள்.

**துலாம்:**



முக்கியமான ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். தொல்லை கொடுத்தவர்கள் எல்லை விட்டுச் செல்வர். அண்டை அயலாருக்குப் பலன் தரும் காரியம் ஒன்றைச் செய்வீர்கள். பெண்கள் புதுமையான அனுபவங்களைப் பெறலாம். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறுவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும்.

**விருச்சிகம்:**



எதிலும் தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள். தொழில் ரீதியாகப் பரபரப்பாகச் செயற்படலாம். குடும்பப் பெரியவர்களின் விருப்பங்களை நிறை வேற்றி வைப்பீர்கள். கொடுக்கல், வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். உங்களின் யோசனைகளுக்கு நண்பர்கள் மத்தியில் எதிர்ப்பு உருவாகலாம். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும்.

**தனுசு:**



மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல், அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். காலை நேரத்தில் உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளை சந்திக்கலாம். பொதுவாழ்வில் உள்ளோர் தேவையற்ற விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம்.

**மகரம்:**



கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். பொறுமையாக செயல்பட்டு எந்த விடயத்திலும் சாதனை படைப்பீர்கள். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். பெற்றோர்கள் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் நீங்கி பாசம் அதிகரிக்கும். சிறியளவிலான பணவரவு உண்டு. பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள்.

**கும்பம்:**



தொழில் ரீதியாகச் சிறு நெருக்கடிகளைச் சந்திக்கலாம். வேலையாள்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். குடும்பத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பயணங்கள் பலன் தரும் விதத்தில் அமையும். சிலர் உங்களுக்காக பிணைள கொடுக்கலாம். நடந்து முடிந்த சம்பவம் ஒன்றை நினைத்துப் பெரியளவில் கவலைப்படுவீர்கள்.



**மீனம்:** சிறிய விடயத்திற்காகப் பெரியளவில் அலட்டிக் கொள்வீர்கள். சிலரைப் பார்த்து எரிச்சல் அடைவீர்கள். திடீர் செலவுகள் இருந்தாலும் அதை சமாளிக்கப் புதிய வரவுகள் வரலாம். உங்களின் வேலை ஒன்றை மற்றொருவர் தலைமையில் சுமத்துவீர்கள். பெண்கள் வழியில் சிறு உதவி கிடைக்கலாம். சந்தோஷச் செய்தி கேட்கலாம்.

# நல்லிணக்கக் குழு முன்பாக சம்பந்தன் சாட்சியமளிப்பார்

கொழும்பு, ஒக். 22

ஜனாதிபதி நியமித்துள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாட்சியமளிக்கவுள்ளது.

அடுத்த சில வாரங்களுக்குள் தமது தரப்பில் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக சாட்சியங்களை முன்வைப்பார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கொள்கை ரீதியாக நாம் இந்த நல்லிணக்க ஆணைக்குழுவை எதிர்க்கிறோம். அதேவேளை, போரினால் எமது சமூகம் பெரிதும் பாதிப்புகளை அடைந்துள்ளது.

ஆகையால் இந்த ஆணைக்குழு முன்தோன்றி தமிழ் மக்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என்று பதிவு செய்ய வேண்டியுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் சில மாதங்களாக வெளிநாடுகளில் தங்கியிருந்தார்.

அவர் தற்போது நாடு திரும்பியுள்ள நிலையிலேயே ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

அதேவேளை, இந்த ஆணைக்குழு முன்பாக சாட்சியமளிக்க புளொட் தலைவர் சித்தார்த்தனும் முடிவு செய்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (சி)

# போலி விசாக்களைக் கண்டு பிடிக்க கட்டுநாயக்காவில் விசேட இயந்திரம்

கொழும்பு, ஒக். 22

கட்டுநாயக்க விமான நிலையத்தில் போலி விசாக்கள் மற்றும் கடவுச்சீட்டுக்களைக் கண்டறிய விசேட இயந்திரமொன்று பொருத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக இலங்கையிலிருந்து பெருந்தொகையானோர் போலி வீசாக்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குச் செல்வது அதிகரித்துள்ளது. அதனைத் தடுப்பதற்காவே இந்த இயந்திரம் நேற்று முன்தினம் பொருத்தப்பட்டுள்ளது.

குறித்த இயந்திரம் அவுஸ்திரேலிய அரசின் நன்கொடை என்றும், இதன் மூலம் உலகின் எந்தவொரு நாட்டினதும் வீசா, கடவுச்சீட்டு போன்றவற்றின் பாதுகாப்பு உள்ளீடுகளைப் பரிசோதித்துப் பார்க்க முடியும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)


## பசுமாடுகள் திருட்டு

சாவகச்சேரி, ஒக்.22

மேய்ச்சலுக்காகக் கட்டப்பட் டிருந்த 40 ஆயிரம் ரூபா பெறு மதியான இரு பசுமாடுகள் திரு டர்களினால் அபகரிக்கப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி நாவற்குழி தெற்கைச் சேர்ந்த தியாகராசா என்பவருடைய பசுமாடுகளே காணாமல் போயுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸில் முறையிடப்பட்டுள் ளது. (201-13)



கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம் இது. நிகழ்வில் அதிபர் ம.மகாகேதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், தாய்ப்பாடசாலை அதிபர் வே.சிவசிதம்பரம் ஆகியோர் சிற்பதை படத்தில் காணலாம்.

(படம்: கர்ணன்)

# ஏற்பது இகழ்ச்சி



வித்துவான் ஒருவர் திறமையாக ஆர்மோனியம் வாசிப்பார். ஆனால் குடிப்பழக்கம் அவரின் திறமையைக் குறைத்துவிட்டது. பிச்சை எடுக்கும் அளவுக்கு வந்துவிட்டார்.

ஒரு பெரியவர் இதைப் பார்த்தார். ''இதோ பாருங்கள்! உங்களிடம் சங்கீத ஞானம், திறமை என்பன இருக்கிறன. அப்படி இருக்கும் போது எதற்கு இப்படி தேவையில்லாமல் பிச்சை எடுக்க வேணும்? இப்பொழுதே நான் ஆர்மோனியத்தை வாங்கித் தருகின்றேன். அதைப் பயன்படுத்தி இனிமேல் நீங்கள் சுயமாகச் சம்பாதித்துச் சாப்பிட வேணும்'' என்றார்.

இவரும் நம்பிக்கையோடு '' சரி அப்படியே செய்கின்றேன்'' என்றார்.

அந்தப் பெரியவரும் ஆர்மோனியப் பெட்டியை வாங்கிக் கொடுத்தார் அதன் பின்னர் -

'' மூன்று மாதம் கழித்து மறுபடியும் என்னை வந்து பாருங்கள், எப்படி இருக்கிறது நிலைமை என்று சொல்லுங்கள்'' என்று கூறினார்.

வித்துவானும் அதைப் பவ்வியமாக வாங்கிக் கொண்டு போனார்.

சொன்ன மாதிரியே மூன்று மாதங்களின் பின்னர் திரும்பி வந்தார். ஆனால் வெறுங்கையோடு வந்தார்.

'' இன்னொரு ஆர்மோனியப் பெட்டி வாங்கிக் கொடுத்தால் பரவாயில்லை'' என்று பெரியவரிடம் வித்துவான் கூறினார்.

'' ஏற்கனவே வாங்கிக் கொடுத்தது எங்கே?'' என்று கேட்டார் அந்தப் பெரியவர்.

''அது அடகுக் கடையில் இருக்கிறது'' என்றார் வித்துவான்.

இவரையெல்லாம் எப்படித் திருத்துவது.

**கோ.சுவாமிநாதன்.**

# நல்லது செய்யும் நார்ச்சத்து

ஒருநாள் நண்பர் ஒருவரின் வீட்டிற்கு நான் சென்றிருந்தேன். அந்த நண்பர் சற்றுப் பருமனாக இருந்தார். ஆனால் அவரது மனைவி மட்டும் மிகவும் ஒல்லியாக இருந்தார். நான் நண்பரைக் கேலியாகக் கேட்டேன். '' நீங்கள் ஏன் இவ்வளவு உடல் பருமனாக இருக்கிறீர்கள்'' என்று. அதற்கு அவருடைய மனைவி '' அவர் மூன்று தடவைகள் சோறு சாப்பிடுவார்'' எனப் பதில் கூறினாள். எனக்கு அதற்கு அர்த்தம் புரியவில்லை. '' என்ன அர்த்தம்?'' என்று கேட்டேன்.

''முதல் தடவை சோற்றில் சாம்பாரும் இரண்டாவது தடவை சோற்றில் இரசமும் மூன்றாவது தடவை சோற்றில் மோரும் விட்டுச் சாப்பிடுவார்'' என்றார்.

'' அது சரி நீங்கள் எப்படிச் சாப்பிடுவீர்கள்'' என்று அவரது மனைவியைக் கேட்டேன்.

''நான் ஒருவேளை மட்டும் சோறு சாப்பிடுவேன். அதனால்தான் இப்படி ஒல்லியாக இருக்கிறேன்'' என்றாள்.



இவ்வாறு வயிறு நிரம்பச் சாப்பிடும் பழக்கம் உடையவர்கள் நார்ச்சத்து மிகுந்த உணவுப் பொருள்களைச் சாப்பிட்டால் சாப்பாட்டின் அளவு அதிகமாக இருந்தாலும் அது உடனடியாக சமிபாடடைந்துவிடும்.

முள்ளங்கி, வாழைத்தண்டு, பூசணிக்காய் இவற்றில் நார்ச்சத்து அதிகம். எனவே இவற்றில் தயிர், மோர் கலந்து சாப்பிட்டால் உடலுக்குத் தேவையான அதிகளவு சக்தியும் சமிபாடும் இலகுவானதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**சுகி.சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மால் முடியும்; எழுந்து நிற்போம்

இயற்கையின் படைப்பின்போதோ நோய், யுத்தம் போன்றவற்றின் விளைவாகவோ, விபத்தின்போதோ அல்லது வேறு ஏதேனும் காரணிகளாலோ மனிதர்கள் பாதிப்புகளுக்குள்ளாகலாம்.

பகுதியளவாகவோ அல்லது முழுமையாகவோ உடல் உள ரீதியாகப் பாதிக்கப்படுவோர் அல்லது அவயங்களை இழப்போர் 'வலுவிழந்தோர்' என்ற பதத்தால் சுட்டப்படுகின்றார்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட நிலையில் - உடல் உளத் தாக்கங்களுக்கு உட்பட்டு - எதிர்காலம் கேள்விக்குறியாகி ஒதுக்கப்பட்ட சூழலில் வாழ்ந்து வருபவர்களை நம்மிடையே கூடக் காண முடிகின்றது.

இந்த இழப்புகளை மீறி வாழ்வில் தம்மாலும் சாதனைகள் படைக்க முடியும் எனத் தம் வாழ்வியலை அர்த்த புஷ்டியோடு நகர்த்துகின்ற மனத்தைரியம் உடையவர்களும் இங்கு இருக்கவே செய்கின்றனர். ஊனத்தைத் தாண்டியும் உலகின் முன் நிமிர்ந்து நிற்கவிழையும் சிலரை இங்கே தரிசிப்போம்.

## சிவராசா *(வயது 61)*



இவருடைய சொந்த இடம் நாவற்குழி. 24 வயது வரை இளமையுடனும் துடிதுடிப்போடும் குடும்ப வறுமையும் மீறி ஜீ.சீ. ஈ உயர்தரம் வரை கல்வியும் கற்றார். திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையுமானார்.

இந்நிலையில் விதி தன் கோரக்கரங்களை இவர் மீது படரவிட்டது 27 வயதில் 'குளுக்கோமா 'எனும் கண்ணீர் அழுத்த நோயினால் பாதிக்கப்பட்டு கண் பார்வையை முற்றாக இழந்தார் சிவராசா. இதன் பின்னர் மனைவி, பிள்ளைகளால் ஒதுக்கப்பட்ட நிலையில் விழிப்புலனற்றோர் சங்கம், வலுவிழந்தோர் சங்கம் இவற்றில் இணைந்து கொண்டு தனது திறமைகளை வெளிப்படுத்தினார். சிறுகதை, கதை, கட்டுரை போன்றவற்றை பத்திரிகைகளுக்கு சங்கத்தினரின் உதவியுடன் எழுதிக்கொடுத்து இதன் மூலம் பரிசும் பாராட்டுக்களும் பெற்றுவருகிறார். அத்தோடு கடதாசிப்பை, புத்தகங்கள் தயாரித்து பொதுச்சந்தைகளில் விற்பனை செய்து, இதன்மூலம் பெறும் வருமானத்தில் தனது தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்

பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியராகவும் கடமையாற்றி வந்தார். இச்சந்தர்ப்பங்களில் பாடசாலை மாணவர்களின் உதவியுடன் கல்வி சம்பந்தமான இலக்கிய நூல்களையும் எழுதியுள்ளார். மாணவர்களுக்கு தமிழ்த்தினப்போட்டி மற்றும் ஆங்கில தினப்போட்டிகள் போன்றவற்றுக்காக நாடகம், வில்லிசை போன்றவற்றைப் பயிற்றுவித்து தன்னுடைய மாணவர்களை வெற்றிப் பாதைக்கு அழைத்தச் சென்றார்.

தன்னுடைய இத்தகைய முயற்சிகளை சமுகமோ ஏனைய தொண்டு நிறுவனங்களோ கௌரவப்படுத்துவதுமில்லை பாராட்டுவதும் இல்லை என சிவராசா கவலை தெரிவிக்கிறார். ''என்னுடைய மனச்சாந்திக்காக கோயில்களுக்குச் சென்று கந்தபுராணம், வாதவூரடிகள் போன்ற புராணக் கதைகளைக் பத்தர்களுக்கு எடுத்துரைப்பேன். இதனால் எனது பொழுது மகிழ்வோடு கழிகிறது.'' என்று தன்னுடைய வாழ்வு கழியும் விதத்தைச் சொல்கிறார்.

உறவுகளால் ஒதுக்கப்பட்ட போதும் வெளி உலகிற்கு தம்மை அடையாளப்படுத்தும் விதமாக தமது குறைகளை மறைக்கச் செய்யும் வகையில் தொடர்ந்தும் இலக்கிய முயற்சிகளிலும், கல்விப்பணிகளிலும், ஆன்மீகப் போதனைகளிலும் சிவராச ஈடுபட்டே வருகிறார்.

## நாகராசா *(வயது 35)*



இவருடைய சொந்த இடம் கொக்குவில் அம்மா, அப்பா 4 சகோதரர்கள் எனப் பெரிய குடும்பம். இவர்கள் நாகராசாவின் திறமைக்கு ஊக்கம் கொடுத்து வருகிறார்கள். பிறந்தபோது 'போலியோ' நோயால் பாதிக்கப்பட்டு இரண்டு கால்களும் ஊனமுற்ற நிலையில் சக்கர நாற்காலியின் உதவியுடனேயே நகர்ந்து தேவைகளை பூர்த்தி செய்கிறார் இவர்.

கால்கள் ஊனமுற்று இருந்தாலும் அதையொரு குறையாகக் கருதாமல் மருந்துக்கடைகள், மற்றும் பல சரக்கு கடைகள் என்பவற்றுக்கு கடதாசிப்பைகளை ஒட்டிக்கொடுத்து அதன் மூலம் சிறு வருவாயைப் பெற்று வருகிறார்.

உடலில் ஏற்பட்ட பாதிப்புகள், இழப்புகளை நாங்கள் ஊனமாகக் கருதமுடியாது. முயற்சி இருந்தால் ஊனம் என்பதை ஒரு குறையாக நோக்கும் நிலையை மாற்றியமைக்க முடியும். எனினும் ஒரு சிலர் தம்முடைய உடல் இழப்புகளைப் பயன்படுத்தி பிறரிடம் இரக்கத்தை உண்டு பண்ணி, பிச்சை எடுக்கும் செயலில் இறங்குவது தவறானதொன்றாகும். இத்தகைய சிலரின் நடவடிக்கைகளால் சமூகத்தின் இழிவான பார்வை நிலைக்கு வலுவுற்றோர் அனைவரும் தள்ளப்பட வேண்டியிருக்கும். எம்மால் இயன்ற வேலைகளைச் செய்தால் சிறு வருமானத்தையும், மனதில் சந்தோஷத்தையும் பெறமுடியும். அதுவே வாழ்வின் உண்மையான அர்த்தத்தையும் , எம்மாலும் முடியும் என்ற நம்பிக்கையையும் உணர்த்தும்.

நிஷா,வாணி

## ந.ஜெயக்குமாரி *(வயது-40)*



இவரது சொந்த இடம் சங்கானை தற்பொழுது தந்தையை இழந்த நிலையில் தாய் மற்றும் சகோதரர்களுடன் ஈச்சமோட்டையில் வசித்து வருகின்றார். இவருடைய நான்காவது வயதில் போலியோ குறைபாட்டால் கால்கள் இரண்டும் ஊனமடைந்தன. தரம் 8 வரை கல்வி பயின்றார். எனினும் தொடர்ச்சியாக பாடசாலைக்குச் சென்று கல்வி கற்க முடியாத சூழலில் கல்வியை இடைநிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

நாமும் முன்னுக்கு வரலாம் என துணிவோடு தான் தையல் பயிற்சியை மேற்கொண்டேன். தற்போது எல்லா வகை ஆடைகளையும் தைக்கப் பழகிவிட்டேன். இதன்மூலம் பெறும் வருமானத்தின் ஒரு பகுதியை எனது குடும்பத்திற்கும் செலவிடுகிறேன். அடிக்கடி வீட்டுக்குச் செல்ல முடியாத காரணத்தினால் இங்கேயே தங்கி நின்று வாரம் ஒரு தடவை தான் வீட்டிற்குச் சென்று வருவேன். எனக்கு ஊனம் இருப்பதாகவே நான் எண்ணுவதும் இல்லை கவலைப்படுவதும் இல்லை. மற்றவர்களைப் போல் நாமும் உழைத்து வாழ வேண்டும் என்பதே எனது விருப்பம். எம்மைப்போன்ற ஊனமடைந்தோர் தம்மால் முடிந்ததைச் செய்து தமது உழைப்பில் வாழப் பழகிக் கொள்ளவேண்டும்.

உடலில் ஏற்பட்ட அவயவ இழப்புக்களைப் பயன்படுத்தி தம்மீதான சுய பச்சாதாபத்தை பிறரிடம் உண்டு பண்ணி,பிச்சை எடுக்கும் செயலில் ஈடுபடுகின்ற ஒரு சிலரால் வலுவற்றோர் அனைவர் மீதும் தவறான எண்ணம் கொண்ட பார்வையைச் சமூகம் உருவாக்கிவிடவும் கூடும். தமது திறனுக்கு இயலுமானதொழில் முயற்சிகளில் இறங்கி, சமூக இருப்பில் தமது இடத்தை பலமான முறையில் பதிவு செய்ய வலுவற்ற அனைவரும் முயற்சிக்க வேண்டும். முயற்சி தான் வாழ்வின் நகர்வை தீர்மானிக்க வல்லது.

வலுவற்றோரைப்பார்த்து, ''ஐயோ! பாவம்!'' என்று பரிதாபப்படுவதை விடவும் அவர்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டுதவிகளைச் செய்வதற்கு நம் சமூகத்தவர்களின் மனப்பாங்கு மாற்றமடைய வேண்டும். எல்லோரைப்போலவும் ஆசைகளும், இலட்சியங்களும் கொண்டவர்களாக உலாவும் இவர்களுக்கு தோள் கொடுக்க அனைவரும் முன்வர வேண்டும். எல்லோரும் வாழப்பிறந்தவர் தான். வாழ வழி தெரியாமல் வலுவிழந்து கஷ்டப்படுவோருக்கு எம்மால் உதவிகளைச் செய்யும் பக்குவத்தை எமக்குள் ஏற்படுத்த வேண்டும்.

# தென்மராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் உதயமாகுமா?

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு தனியொரு பிரதேச செயலகம் அமைக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையும் ஆதங்கமும் பிரதேச மக்கள் மத்தியில்,சமூக நிறுவனங்களின் ஆர்வலர்கள் மத்தியிலும், புத்தி ஜீவிகள் மட்டத்திலும் தொடச்சியாக - நீண்ட காலமாகப் பேசப்பட்டு வரும் விடயமாகும் 2005ஆம் ஆண்டு இந்த விடயம் தொடர்பாக தென்மராட்சி கிழக்குப் பிரதேச அபிவிருத்தி 'ஒன்றியம்' அப்போது ஆட்சியில் இருந்த அரசிடம் குறித்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு மகஜர் ஒன்றை சமர்ப்பித்து தனிப்பிரதேச செயலகம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருந்தது. இந்த விடயம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு இருந்ததாகவும் கூறப்பட்டது.

எனினும் தொடர்ந்து நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள், யுத்த நடவடிக்கைகள் காரணமாக தென்மராட்சி கிழக்குக் தனிப்பிரதேச செயலகம் அமைப்பது தொடர்பாக ஆக்கபூர்வமான முயற்சிகள் எதுவும் நடைபெறவில்லை. தற்சமயம் நாட்டில் சமாதன சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து தென்மராட்சி கிழக்குப் பிரதேச ஒன்றியம் இக் கோரிக்கையை மீண்டும் முன்னெடுத்துள்ளது. ஒன்றியத்தின் தலைவர் த.கந்தையா, செயலாளர் செ.நவரட்ணசாமி உப செயலாளர் க.கனகேஸ்வரன் உட்பட 10 பேர் அடங்கிய குழுவினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் இக்கோரிக்கையை மீண்டும் முன்வைத்துள்ளனர்.

## குடாநாட்டிலேயே அதிக கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசம் தென்மராட்சிதான்!

தென்மராட்சிப் பிரதேச செயலகம் 60 கிராம அலுவலர் பிரிவுகளுடன் பாரிய நிலப் பரப்பையும் அதிகளவான மக்கள் தொகையையும் கொண்டதாக விளங்குகிறது.

இப் பிரதேசம் கிழக்கே எழுதுமட்டுவாள், கரம்பகம், விடத்தற்பளை ஆகிய கிராமங்களையும், மேற்கே கைதடி, நாவற்குழி ஆகிய பிரதேசங்களையும், வடக்கே சரசாலை, மந்துவில் வரணி போன்ற பிரதேசங்களையும் தெற்கே, தனங்களப்பு, தச்சன்தோப்பு, கச்சாய் பிரதேசங்களையும் எல்லைகளாகக் கொண்ட பாரிய நிலப்பரப்பை உள்ளடக்கிய பிரதேசமாகும். இப் பிரதேசத்துக்குள் சுமார் 70 ஆயிரம் வரையிலான பொது மக்கள் வசிப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு பெருமளவான மக்கள் வசிக்கின்றபோதும் இவர்களின் தேவைகளை ஒரே ஒரு பிரதேச செயலகம் மாத்திரமே பூர்த்தி செய்து வருகின்றது.

இதேவேளை இப்பிரதேச மக்களின் வசதிகருதி - தேவை கருதி.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி என்பன சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற இடங்களிலும் - தமது கிளைகளை நிறுவி மக்களுக்கு சேவை புரிகின்றன. மக்களும் சேவை புரிகின்றன.மக்கள் வங்கியின் முக்கிய அங்கமான கிராமிய வங்கிகள் மேற்கூறிய இடங்களிலும் கைதடியிலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாகக் கிளைகளை நிறுவி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. கைதடியில் இலங்கை வங்கிக் கிளை ஒன்று இயங்குவது குறிப்பிடத்தக்கது. சாவகச்சேரியில் பொதுவான மருத்துவமனை பிரதேச மக்களின் தேவை கருதி இயங்குகின்றது. மேலதிகமாக பிரதேசத்தின் பல இடங்களிலும் தாய் சேய் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மேலதிக அரச மருத்துவ மனைகள் கொடிகாமம், கைதடி, வரணி போன்ற இடங்களில் பொது மக்களுக்கு சேவைபுரிகின்றன. சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி போன்ற இடங்களில் அஞ்சல் அலுவலகங்கள் சாவகச்சேரியில் நிறுவப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் 15க்கு மேற்பட்ட உப அஞ்சல் அலுவலகங்கள் மக்களின் தேவைகருதி அமைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் திணைக்களமும் கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய இடங்களில் தமது கிளைகளை நிறுவி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றது. இவ்வாறு மேற்படி நிறுவனங்கள் தென்மராட்சிப் பிரதேசத்தின் பல இடங்களிலும் பரந்து வசிக்கும் மக்களின் நன்மை கருதியே ஒன்றிற்கு மேற்பட்ட காரியாலயங்களை அமைத்து செயற்படுகின்றன. இது அவற்றின் நிர்வாக நடவடிக்கைகளின் இலகு தன்மைக்கும் உதவுகின்றன.

ஒன்றிற்கு மேற்பட்ட கிளைகளை நிறுவனங்கள் பேணிவருவதால் - பல இடங்களில் இயங்குவதால் மக்களின் போக்குவரத்துக்கான காலவிரயம் குறைவடைவதுடன் அவர்களின் சிரமங்களும் இல்லாமல் போகின்றன.

பொதுநூலகங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்கூட இப்பிரதேசத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட கிளைகளை நிறுவியே மக்களுக்கு சேவை புரிகின்றன. எனவே 60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சிப் பிரதேச செயலகப்பிரிவு இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தென்மராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு தனியானதொரு பிரதேச செயலகப்பிரிவு அமைக்கப்படல் வேண்டும் என்ற மக்களின் கோரிக்கை நியாயமானதே.

யாழ்.மாவட்டம் பௌதீக ரீதியில் வடமராட்சி வலிகாமம், தீவகம்,தென்மராட்சி என நான்கு வலயங்களாக வகைப்படுத்தப்பட்டு -

✱ வடமராட்சி வலயத்தில் - வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு, வடமராட்சி தெற்கு, மேற்கு என மூன்று பிரதேச செயலகங்களும்

✱ வலிகாம வலயத்தில் - யாழ்ப்பாணம், நல்லூர், வலி.தெற்கு, மேற்கு, வலி.வடக்கு, வலி. கிழக்கு, வலி. மேற்கு, வலி.தெற்கு என 7 பிரதேச செயலகங்களும்

✱ தீவக வலயத்தில் வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர் என 4பிரதேச செயலகங்களும்,தனி அரசாங்க அதிபர் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. ஆனால் தென்மராட்சி வலயத்தில் தென்மராட்சி பிரதேச செயலகம் என ஒரு பிரதேச செயலகம் மட்டுமே செயற்படுகின்றது. இதேவேளை வடமராட்சி வலயத்தில் உள்ள வடமராட்சி வடக்கு 35 கிராம அலுவலர் பிரிவுகளையும், வடமராட்சி கிழக்கு 18 கிராம அலுவலர் பிரிவுகளையும் வடமராட்சி தெற்கு மேற்கு 35 கிராம அலுவலர் பிரிவுகளையும் கொண்டதாக உள்ளது.

*(18ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

100%சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

**றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்**

PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**இலவசம்** அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணிபுரிய 32 கால்நடை வைத்தியர்கள் நியமனம்

கொழும்பு,ஒக்.22

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கால்நடை வளர்ப்பை விருத்தி செய்யும் பொருட்டு 32 கால்நடை வைத்தியர்களும் , 6 கால்நடை ஆராய்ச்சியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கன்னொருவ கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பிரதான மண்டபத்தில்நடைபெற்றது.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதியமைச்சர் எச்.ஆர். மித்ரபால மற்றும் அமைச்சு அதிகாரிகள் கலந்துகொண்டனர். கால்நடை வளர்ப்பில் நவீன தொழில்நுட்பத்தை புகுத்தி பால் பொருள் உற்பத்திகளில் ஈடுபடுவதன் மூலம் கால்நடை வளர்ப்பாளர்களை பொருளாதார மட்டத்தில் உயர்வடையச் செய்யமுடியும்.

அத்துடன் இது இளைஞர்,யுவதிகளையும் இத்துறையில் ஈடுபட வழிவகுக்கும். கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை இனங்காணவும் முடியும். வடக்கு, கிழக்கில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் வழி காட்டலில் மேற்படி நியமனங்கள் வாங்கப்பட்டன என அமைச்சு விடுத்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)


**காணி விற்பனைக்கு**

உசன் கந்தசாமி கோயிலுக்கு அருகில் 10 பரப்புக் காணியும் 17 பரப்பு வயலும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779235935. (104925)

**பெண் உதவி மருந்தாளர் தேவை**

பருத்தித்துறையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பார்மஸியில் பணியாற்ற பெண் உதவி மருந்தாளர் தேவை. வடமராட்சியில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0772479636.

**பிறின்ஸி போல்றி பாம்**

புறொயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
இல.380, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். •
இ.பீற்றர்தாஸ்- 0776095749

*யாழ்.நகரில்*

**அனுபவம் வாய்ந்த மொழிபெயர்ப்பாளர்களின்**

**மொழிபெயர்ப்புச் சேவை**

கடிதங்கள், ஆவணங்கள், ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், நூல்களின் பகுதிகள் முதலியவை.

ஆங்கில, சிங்கள மொழிகளிலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து ஆங்கில, சிங்கள மொழிகளுக்கும் மொழிபெயர்த்துத் தரப்படும்.

Translation Service in Jaffna By Experienced Translators Letters, Documents, Thesises Books, Parts of books Translated Acurately from English, Sinhala To Tamil and from Tamil to Sinhala and English.

அலுவலக நேரம் - 09-00- 11-00 மணி
Office hours - 02-04 மணிவரை

**நிஷா மொழிபெயர்ப்பாளர்கள்**
27,புதுமைமாதா கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 0775948722

**கோழிக்குஞ்சு விற்பனைக்கு**

• ஒரு நாள் கோழிக்குஞ்சு விற்பனைக்குண்டு.
(டிக்கந்தைவெள்ளை- கோழிக்குஞ்சு).
**பிள்ளையார் மாஸ் கடை**
வல்வெட்டித்துறை.
தொ.பே.: 0778806952. (104463)

**காணி விற்பனைக்கு**

யாழ்.மாநகர எல்லைப் பிரதேசத்துக்குள் 3000 சதுர அடி களஞ்சிய வசதியுடைய மூன்று அறைகளைக் கொண்ட லொறிகள் நிறுத்தக் கூடியதான கட்டடத்துடன் கிணறு, தண்ணீர்த் தாங்கி, போக்கு வரத்துப் பாதைகளுடன் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே: 0773363482

**பெண் வேலை ஆள் தேவை**

வீட்டுடன் கூடிய கோழிப் பண்ணை ஒன்றிற்கு பண்ணை பராமரிப்பதற்கு பெண் வேலை ஆள்கள் தேவை.
தொடர்பு:- விபுலானந்தர் வீதி, மாதகல்.
தொ.பே: 0776094232

**A/L 2010 மாணவர்கள்**

? உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ, **(UK, Canada, Australia, India, Ukraine, Malaysia, USA, New Zealand, Singapore)** கல்வி கற்பதற்கான வாய்ப்பை எதிர்பார்க்கின்றீர்களா?

இன்றே எமது **STUDENTS DATA BANK**ல் உங்களை பதிவு செய்து கல்வி சம்பந்தமான முழுமையான விபரங்களையும் இலவசமாக பெற்றுக் கொள்ளவும்.

Name : ..........
Address : ..........
.......... Tel : ..........
Name of your School : ..........
A/L Stream : BIO / MATHS/ COMMERCE/ ARTS (Circle)
A/L Exam Index No : ..........
E-mail : ..........

உங்கள் விபரங்களை கடிதத்திலோ/ தபாலட்டையிலோ எழுதி அனுப்பவேண்டிய முகவரி

**SIC CENTRE**
734, Hospital Road, Jaffna.
TEL: 0777-767818


## கானக்குயிலுக்கு கௌரவ ஆளுநர் விருது



வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட கலை இலக்கிய விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவி ருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களால்

**செல்வி மாது சிறோன்மணி வேலாயுதர்**

அவர்கள் கௌரவ ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். விருது பெற்ற செல்வி மாதுசிறோன்மணி வேலாயுதர் அவர்கள் மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகிறோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:
**குடும்பத்தினர், மாணவர்கள்.**

## பாராட்டி வாழ்த்துகிறோம்



திருமதி
**சுகன்யா அரவிந்தன்**
B.A. (HONS)
B.F.A.(1st Class) Dip-in Ed.
கலாவித்தகர்-வாய்ப்பாட்டு,
வயலின், பரதம்
(இசை விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்
நுண்கலைத்துறை)
இந்தியா-பாரதிதாஸன் பல்கலைக்கழகத்தால் யாழ்.திருமறைக் கலா மன்றத்தில் இன்று நடத்தப்படும் பட்டமளிப்பு விழாவில் 'முது நுண் கலைமாணி' M.F.A (நடனம்) பரீட்சையில் முதல் பிரிவில் (1st Class) முதல் மாணவியாக பட்டம்பெறும் திருமதி சுகன்யா அரவிந்தன் அவர்களை மனதார வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ இறைவனை வேண்டுகிறோம்.

திருமதி இராமலிங்கம் குடும்பம்
(பெரியம்மா) மட்டக்களப்பு.

## யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

### வதிரி, கரவெட்டி

### வருடாந்த பரிசில் தின விழா- 2010

இன்று(22.10.2010) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ள கல்லூரியின் வருடாந்த பரிசில் வழங்கும் நிகழ்வில் பரிசில்கள் பெறும் சாதனையாளர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**க.பொ.த.(சா/த) 2009 சிறப்புப் பெறுபேறு**

5A இற்கு மேற்பட்ட பெறுபேற்றினைப் பெற்றோர்

| ஆங்கில மொழி மூலம் | தமிழ்மொழி மூலம் |
|---|---|
| செல்வி சுபாங்கனி நாகராசா | செல்வி கிருத்திகா தேவதாசன் |
| செல்வி துஷ்யந்தி கணேசகுமார் | செல்வி ஜெயந்தி அருளாநந்தம் |
| செல்வி உஷாந்தி புலேந்திரராஜ் | செல்வி தனுஷா குலநாதன் |
| செல்வி சிவப்பிரியா வரதராசா | செல்வி கார்த்திகா யோகேஸ்வரன் |

**பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்**

க.பொ.த.(உ/த) 2009

**வர்த்தகப் பிரிவு**

செல்வி மரியங்கா விக்னேஸ்வரன்

**கலைப் பிரிவு**

செல்வி பாரதி சபாரத்தினம்
செல்வி நிஷாந்தினி தங்கவேலாயுதம்
செல்வி அருண்யா சிவராசா
செல்வி நிரோஷா நாகேந்திரராசா
செல்வி தனுஷிகா தர்மலிங்கம்
செல்வி நிலோஜினி பாலகிருஷ்ணமூர்த்தி
செல்வி அருந்தஷா முருகேசு
செல்வி தர்சிகா பாக்கியநாதன்
செலவி சிந்துஜா மனோகரன்

**தேசியமட்ட பங்குபற்றல்களும் தெரிவுகளும்**

19 வயதிற்குட்பட்ட பெண்கள் அணி (கரம்)
வலய மட்டம் முதலாம் இடம், மாவட்டம் மற்றும் மாகாண மட்டங்களில் 3ஆம் இடம்.
15 வயதிற்குட்பட்ட பெண்கள் அணி (கரம்)
வலய மட்டம்முதலாம் இடம், மாவட்ட மட்டம் 3ஆம் இடம், மாகாண மட்டம் முதலாம் இடம்.
19 வயதிற்குட்பட்ட பெண்கள் அணி (சதுரங்கம்)
வலய மட்டம் முதலாம் இடம், மாவட்டம் மற்றும் மாகாண மட்டம் 3ஆம் இடம், தேசிய மட்டத்தில் 8ஆம் இடம்.

**மெய் வல்லுநர் போட்டிகள்- 2010**

21 வயதிற்குட்பட்ட பெண்கள் குண்டு போடுதல்
செல்வி குலத்துங்கம் கௌசிகா
வலய மட்டம் முதலாமிடம். மாவட்ட மற்றும் மாகாண மட்டம் 2ஆம் இடம்.

**சமூக விஞ்ஞானப் போட்டி**

தரம்- 10
செல்வி பிரகாசனா தேவராஜ்
மாகாண மட்டம் இரண்டாமிடம்.
தரம்- 11
செல்வி கஸ்தூரி மகாதேவா
மாகாண மட்டம் 3ஆம் இடம்.

இத்துடன் இன்றைய நிகழ்வில் பாடசாலை, வலய, மாவட்ட மற்றும் மாகாண மட்டப் போட்டிகளால் வெற்றியீட்டி பரிசில் பெறும் ஏனைய சாதனையாளர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/வடமராட்சி ம.ம.கல்லூரி.**
(சி/572074)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு,குவைத் சிட்டி வீட்டுத் திட்டத்திலிருந்து வெளியேறுமாறு 43 குடும்பங்களுக்குப் பணிப்பு

மட்டக்களப்பு , ஒக்.22

மட்டக்களப்பு, மஞ்சந்தொடுவாய் தெற்குக் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குவைத் சிட்டி வீட்டுத் திட்டத்தில் வசித்து வரும் 43 குடும்பங்களுக்கு அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு அடங்கிய கடிதங்கள் மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜாவால் உரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த வீடுகள் அமைந்துள்ள காணி அரசுக்குச் சொந்தமானது எனக் குறிப்பிட்டு 1997ஆம் ஆண்டு 7ஆம் இலக்க அரச காணிகள் ஆட்சி மீளப்பெறல் சட்ட வெளியேற்றல் அறிவித்தலின் கீழ் இக் கடிதங்கள் வீடுகளின் உரிமையாளர்களுக்கு அனுப்பப்பட்டுள் ளன.

இக்காணியில் தங்கியிருப்பவர்கள் அங்கிருந்து வெளியேறும் பட்சத்தில், அந்தக் காணி பிரதேச செயலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட மஞ்சந்தொடுவாய் தெற்கு கிராம உத்தியோகத்தரிடம் எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் பிரதேச செயலாளரால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீடுகள் குவைத் நாட்டின் உதவியுடன் ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவின் முயற்சியினால் கட்டப்பட்டு 2007ஆம் ஆண்டு கையளிக்கப்பட்டன.

இது தொடர்பாக மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் திருமதி.கலாமதி பத்மராஜா குறிப்பிடுகையில், தனிப்பட்ட விருப்பத்தில் தாம் இக்கடிதங்களை அனுப்பவில்லை என்றும் நீதிமன்றத்தின் உத்தரவுப்படியே இவற்றைத் தாம் அனுப்பினார் என்றும் தெரிவித்துள்ளார். அத்துடன் அவர் தமது நிலைப்பாட்டைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்:-

இவ்வீடுகள் கட்டப்பட்டிருக்கும் காணிகளுக்கு நஷ்ட ஈடு கோரி ஏற்கனவே அக்காணிச் சொந்தக்காரர்கள் எனக் கூறப்படும் இருவரால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றம், இங்கு கட்டப்பட்டுள்ள வீடுகளில் ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள்தான் இருக்கின்றார்களா என ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தது.

இந்நிலையில், ஆழிப்பேரலை அனர்த்தத் தினால் பாதிக்கப்பட்ட 27பேர் மாத்திரமே இவ்வீட்டுத் திட்டத்தில் குடியிருக்கின்றனர் எனக் குறிப்பிட்டு காத்தான்குடிப் பிரதேச செயலாளர் நீதிமன்றத்




தில் அறிக்கை சமர்ப்பித்தார்.

இதன் பின்னரே இங்கு கட்டப்பட்டுள்ள 70 வீடுகளில் 27 வீடுகளைத் தவிர்ந்த ஏனைய 43 வீட்டுரிமையாளர்களுக்கும் வீட்டை விட்டு வெளியேறி காணியை ஒப்படைக்க ஒரு மாத கால முன்னறிவித்தல் விடுக்குமாறு நீதிமன்றம் கேட்டுக்கொண்டது.

அதனடிப்படையிலேயே நான் அக்கடிதங்களை அனுப்பியுள்ளேன். இவர்கள் விதிக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் அக்காணிகளை விட்டு வெளியேறாவிடின் நீதிமன்றம் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கும். -இப்படி மண்முனைவடக்குப் பிரதேசசெயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இவ்வீட்டுரிமையாளர்கள் குறிப்பிடுகையில், எங்களை வெளியேறுமாறு கட்டளைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனினும், நாங்கள் வெளியேறமாட்டோம். இது தொடர்பாகப் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கு அறிவித்துள்ளோம் என தெரிவித்துள்ளனர். ( ளி )

# 39 வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை

மட்டக்களப்பு,ஒக்.22

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 39 வர்த்தகர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகத்தினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவொன்று, மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த மூன்று தினங்களாக திடீர் சோதனையை மேற்கொண்டது.

இதன் போது நிர்ணயிக்கப்பட்ட விலையில் பொருள்களை விற்பனை செய்யாமை, விலைப்பட்டியலைக் காட்சிக்கு வைக்காமை, காலாவதியான பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்தமை ஆகிய செயற்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இச்செயற்பாடுகளில் ஈடுபட்ட மட்டக்களப்பு, செங்கலடி, காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, களுவாஞ்சிக்குடி, வாழைச் சேனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 39 வர்த்தகர்களுக்கெதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மேலும் தெரிவித்தார். ( ளி )

# யானைத் தாக்குதலில் பலியானோருக்கு முகாமைத்துவ அமைச்சு நஷ்டஈடு

கொழும்பு, ஒக்.22

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவில் யானைகளின் தாக்குதலால் கொல்லப்பட்டோருக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் நஷ்டஈடு வழங்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் திருமணமானோருக்கு ஒரு லட்சம் ரூபாவும், திருமணமாகாதவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டு வருகிறது என வெல்லாவெளி உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.வரதராஜன் தெரிவித்தார்.

இதேவேளை, மரணச் செலவுக்காக உடனடியாக ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவில் கடந்த 2008ஆம் ஆண்டு மீளக்குடியேறிய பின்னர் 10 பேர் யானைத் தாக்குதலால் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். ( ளி )

# பிரதியமைச்சரின் முயற்சி காரணமாக அம்பாறை மாவட்ட பாதைகள் புனரமைப்பு

## 27 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

அம்பாறை, ஒக்.22

பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் மேற்கொண்ட துரித நடவடிக்கையால், காரைதீவு, நாவிதன்வெளி, திருக்கோவில், ஆலையடிவேம்பு, கல்முனைத் தமிழ்ப் பிரிவு, பொத்துவில், சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களின் பாதைகள் புனரமைக்கப்படவுள்ளன.

இப்புனர்நிர்மாணப் பணிகளுக்காக 87 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் தமிழ்ப் பிரதேசங்களுக்குக் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அபிவிருத்திப் பணிகள் பரவலாக, துரிதமாக மேற்கொள்ளப்படும் என பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் அண்மையில் அம்பாறை மாவட்டத்துக்கு நேரடி விஜயம் செய்தார். அப்போது தமிழ்ப் பிரதேசங்கள் 'கம நெகும' திட்டத்தின் கீழ் புறக்கணிக் கப்பட்டு வருகின்றன எனப் பல தரப்புகளும் அமைச்சரிடம் முறையீடு செய்தன.

பிரதேச செயலாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், ஆலய நிர்வாக சபையினர், கிராம மக்கள் ஆகியோரே இவ்வாறு முறையீடு செய்தனர். காலா காலமாக ஆட்சியாளர் களால் இத் தமிழ்ப் பிரதேசங்கள் புறக்கணிக் கப்பட்டு வருகின்றன என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இதையடுத்து, பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம், இம் முறையீட்டை ஜனாதிபதியினதும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினதும் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இதையடுத்து மேற்படி பிரதேசங்களின் பாதைகள் புனரமைப்புக்கு ரூபா 87 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ளி)

# அரசு சர்வாதிகார ஆட்சி நடத்தவில்லை; அப்படிக் கூறுவோருக்கு விளக்கமளிப்போம்!

## மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க கூறுகிறார்

கண்டி, ஒக். 22

இந்த ஆட்சியை எவரும் சர்வாதிகார ஆட்சி எனக் கூறமுடியாது. எமது ஜனாதிபதிக்கு ஆறுவருடங்கள் பதவிவகிக்கும் காலம் இருந்தபோதிலும் நான்கு வருடத்தில் தேர்தலுக்குச் சென்று வெற்றி பெற்றார். இவ்வாட்சி பற்றி விமர்சிப்பவர்களுக்கு வகுப்பு நடத்தி, உலகில் சர்வாதிகாரம் என்றால் என்ன என்பதைத் தெளிவுப்படுத்த வேண்டும். அத்தோடு சிலரின் உரைகளைப் பார்க்கும் போது தேர்தல் சட்டம் பற்றியும் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்றே தோன்றுகின்றது.

-இவ்வாறு மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

மத்திய மாகாணசபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் சாலிய திஸாநாயக்க தலைமையில்கடந்த செவ்வாய்க் கிழமை காலை பள்ளேகல மண்டபத்தில் நடை பெற்றது. இங்கு உள்ளூராட்சி சட்டமூலம் தொடர்பான விவாதத்திலேயே முதலமைச்சர் இத னைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தமதுரையில் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சிசபை சட்டங்கள் கொண்டு வரப்படுவதற்கு முன்பே இலங்கையில் உடரட்ட, ரஜரட்ட, பாத்தரட்ட என உள்ளூராட்சிப் பிரிவுகள் அமைந்திருந்தன. டொனமூர் திருத்தம் மூலமாகவே தேர்தலில் வெற்றி பெறுவோரைத் தீர்மானிக்கும் முறைமை அறிமுகமானது.

1978 இற்கு பின் 18 மாநகர சபைகள், 48 நகரசபைகள், 27 பிரதேசசபைகள் கொண்ட 332 உள்ளூராட்சிசபைகள் காணப்படுகின் றன. இதில் திருத்தம் செய்வதற்காக 1978இல் கலாநிதி அபயநாயக்க தலைமையில் ஒரு குழுவும், மீண்டும் தினேஸ்குணவர்த்தன தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டன.

இதனடிப்படையில் ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கும் உள்ளூராட்சி அமைப்பு முறையை அறிமுகம் செய்யவும், சிறுபான்மையினருக்குப் பாதிப்பில்லாத முறையில் இதனை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது - இவ்வாறு முதலமைச்சர் தெரிவித்தார். (ளி)

# உள்ளூராட்சி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் மத்திய மாகாணசபையில் நிறைவேற்றம்

கண்டி, ஒக். 22

உள்ளூர் அதிகாரசபைகள் விசேட ஏற்பாடுகள் சட்டமூல




மும், தேர்தல் திருத்த சட்ட மூலமும் மத்திய மாகாண சபையில் ஏகமனதாக நிறைவேறின.

கடந்த செவ்வாக்கிழமை மத்திய மாகா ணசபை மாதாந்த கூட்டம் நடைபெற்றபோது முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க-

மாகாணசபையின் ஒப்புதலுக்காக நாடாளுமன்றிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத் திருத்தங்கள் அடங்கிய பிரேரணையை சபையில் சமர்ப்பித்தார்.

இதனை எதிர்க்கட்சிகள் ஆட்சேபித்த போதும் இறுதியில் விவாதத்துக்கு எடுக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ளி)

# நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்தவர் மின்சாரம் தாக்கிப் பலி; இருவர் படுகாயம்

கண்டி, ஒக். 22

கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மீது மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்த சம்பவம் பேராதனையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் பேராதனை ஈரியகம விகாரைக்கு அருகில் இடம்பெற்ற இச்சம்ப வத்தில் 59 வயதான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தொழிலாளர்கள் மாடிக்கட்டடம் ஒன்றின் மீது பணியாற்றிக் கொண்டிருந்தபோதே அந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. படுகாயமடைந்த இருவரும் பேராதனை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ளி)

# குரங்குகளுக்கு சொகுசு வாகனம்

பதுளை,ஒக்.22

பதுளை மாவட்டத்தில் விவசாயிகளுக்குப் பெரும் தொல்லை கொடுத்துவரும் குரங்குகளைப் பிடித்து காடுகளுக்குக் கொண்டு சென்றுவிடும் வேலைத்திட்டத்திற்கு சுமார் 56 லட்சம் ரூபா செலவில் நவீன வாகனமொன்றை வாங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

பதுளை மாவட்டத்தின் விவசாயப் பிரதேசங்களில் சுமார் 3000 வரையான குரங்குகள் பெரும் அட்டகாசம் புரிந்து வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்தாவிட்டால் விவசாயத்துக்கு பேரழிவு ஏற்படும் என நீர்ப்பாசன நீர்வள முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பொதுமக்களின் முறைப்பாட்டையடுத்து இக்குரங்குகளைப் பிடித்து மாதுறுஓயா காட்டில் விடும்பணி அண்மையில் ஆரம்பமாகியது.

எனினும், பிடிக்கப்பட்ட குரங்குகளைக் கொண்டு சென்ற வாகனத்தில் போதிய வசதிகள் இல்லாதபடியால் பல குரங்குகள் இறந்தும், காயப்பட்டும் விட்டன. இதைத் தவிர்ப்பதற்காகவே விசேட வாகனம் கொள்வனவு செய்யப்படவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

குரங்குகளைக் கொண்டு செல்லும்போது கால்நடை வைத்தியரொருவரும், பிரதேச செயலாளர் காரியாலய அதிகாரியொருவரும் அதனை மேற்பார்வை செய்வர் - என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ளி)

# உள்ளூராட்சி திருத்தச் சட்டத்தின் மூலம் சிறுபான்மையினர் நன்மைபெற வேண்டும்

## ம.மாகாண சபை உறுப்பினர் சதாசிவம் வலியுறுத்து

கொழும்பு,ஒக்.22

உள்ளூராட்சித் திருத்தச் சட்டத்தின் ஊடாக சிறுபான்மை மக்களின் ஜனநாயக உரிமைகள் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று இ. தொ. ஐ. மு. தலைவரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான எஸ்.சதாசிவம் தெரிவித்தார்.

மத்திய மாகாணசபையில் உள்ளூராட்சி திருத்தச் சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி திருத்தச் சட்ட மூலத்தில் சிறுபான்மை மக்கள் நலன் தொடர்பாகக் குறிப்பிட்டுள்ள விடயங்கள் நடைமுறையில் அமுல் [illegible] மக்களின் [illegible] உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஊடாகவே நிறைவேற்றப்படுகின்றன.

அந்தவகையில் சகல இன மக்களும் நன்மை பெறும் வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட வேண்டும். கடந்த காலங்களில் சிறுபான்மை மக்கள் தொடர்பாக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நடைமுறையில் மீறப்பட்டன.

குறிப்பாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்தில் தமிழ்மொழி உரிய முறையில் அமுல்படுத்தப்படாததால் தமிழ்பேசும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவ்வாறான நிலைமை உள்ளூராட்சி திருத்தச்சட்டத்தின் ஊடாக ஏற்படக்கூடாது - இவ்வாறு சதாசிவம் தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம் - 2010

### க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்கும் பாராட்டுக்குமுரிய ஆசிரியர்
திரு.எம்.சி.பிரகாஷ்,
E.P.I கல்வி நிலையம், கண்டி.
தொ.பே.: 077-9468195

G.C.E.(O/L) வலம்-3 வெளியீடு-3 கண்டி

## கணிதம் - I

நேரம்: 2 மணித்தியாலங்கள்


### பகுதி A

01. சுருக்குக. 3/8 + 5/8 - 6/8

02. 7x = 35 எனின், x ஐக் காண்க.

03. சுருக்குக. 0.03 × 0.5

04. X இன் பெறுமானத்தைக் காண்க.





05. $x^{-5} \times x^3$ ஐச் சுருக்குக.


06. ஒரு கொப்பியின் விலை ரூ.20 எனின், 10 கொப்பிகளின் விலை என்ன?

07. 2, 3, 3, 5, 5 தரவுக்கூட்டத்தின் இடையைக் காண்க.

08. செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க.




09. வென்வரிப்படத்தில் (x∪y)' ஐ நிழற்றுக.





10. y = 2x - 3 எனும் சமன்பாட்டின் படித்திறன் வெட்டுத்துண்டு என்பவற்றை எழுதுக.


11. பெறுமானங் காண்க. $\log_3 9 + \log_5 125$

12. காரணிப்படுத்துக. $4x^2 - 25y^2$


13. உருவில் x ஐக் காண்க.




14. சரிவகம் ABCD இன் பரப்பளவு 45cm² எனின், h ஐக் காண்க.




15. இணைகரம் ABCD யின்,
   1. பரப்பளவைக் காண்க.
   2. <BCD இற்குச் சமனான கோணம் ஒன்றைப் பெயரிடுக.





16. வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காக தயாரிக்கப்பட்ட தளபாட அடுக்கிற்கு 50% சுங்கவரி அறவிடப்படுகிறது. சுங்கவரியாக ரூ.150,000 செலுத்தப்பட்டால் தளபாட அடுக்கின் உண்மைப் பெறுமதி யாது?

17. சுருக்குக. $5\sqrt{24} + 2\sqrt{6} - 3\sqrt{54}$

18. சதுரமுகிவடிவத் திண்மப் பொருளின் ஒரு முகத்தின் பரப்பளவு 100cm² எனின், திண்மப் பொருளின் கனவளவைக் காண்க.


19. உருவில் x இன் பெறுமானத்தைக் காண்க.




20. K = 1/2 mV² இல் V ஐ எழுவாயாக மாற்றுக.


21. 1) தொடை A = { X,Y} இன் எல்லா தொடைப்பிரிவுகளையும் எழுதுக.
    2) n(A) ஐக் காண்க.

22. உருவில் உள்ள தகவல்களுக் கேற்ப x இன் பெறுமானத்தைக் காண்க.





23. நாணயமொன்றும் அறுமுகத் தாயக்கட்டை ஒன்றும் ஒருங்கே எறியப்பட்டது. ஏற்பட்ட விளைவை தெக்காட்டின் தளத்தில் குறித்துக்காட்டுக.

24. O ஐ மையமாகக் கொண்டு ஆரை 15cm, ஆரை 13cm கொண்ட இரு வட்டங்கள் வரையப்பட்டுள்ளன. ABCD ஒரு நேர் கோடு. இது பெரிய வட்டத்தை A,D இலும்,சிறிய வட்டத்தை B,C இலும் வெட்டுகின்றன. ABCD இன் செங்குத்து OX ஆகும். OX = 12cm ஆயின், CD இன் நீளத்தைக் காணுங்கள்.




25. ஒருவர் தனது சொத்தில் 2/5 ஐ மனைவிக்கும், 1/3 ஐ மகளுக்கும் கொடுத்த பின் அவரிடம் ரூபா 40,000 எஞ்சியிருந்தது. அவரது சொத்தின் பெறுமதி எவ்வளவு?

26. இங்குள்ள வரிப்படத்திலே கோட்டுத் துண்டங்கள் சமாந்தரமானவை என அம்புக்குறிகள் காட்டுகின்றன. ABPQ இன் பரப்பளவுக்கு சமனான ஒரு உருவத்தைப் பெயரிடுக.




27. 2x - 7 ≤ 21 என்பதன் தீர்வை எண் கோட்டில் குறியுங்கள்.

28. ஆரை 7cm, உயரம்15cm ஆன உருளையின் கனவளவைக் காண்க.

29. மணிக்கு 96 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் ஒரு புகையிரதம் 5 நிமிடங்களில் செல்லும் தூரம் எவ்வளவு?


30. தீர்க்குக. 5{ 3 (x+2) +2 } = 10

### பகுதி B

01. 1) ஒருவர் கம்பனி ஒன்றின் ரூ. 10 பங்குகளை ரூ.15 படி வாங்குவதற்கு ரூ. 12,000.00 ஐ முதலீடு செய்கிறார். கம்பனி வழங்கும் பங்குலாபம் 14% ஆகும்.
   1. அவர் வாங்கிய பங்குகள் எத்தனை?
   2. அப்பங்குகளின் பெயர்மாத்திரைப் பெறுமானம் என்ன?
   3. அவரது வருமானம் எவ்வளவு?
   4. அவ்வருமானம் முதலீட்டின் என்ன சதவீதம் ஆகும்?

   2) மேலே (1) இல் முதலிட்ட தொகையை 5% கூட்டுவட்டிக்கு கடனாக வழங்கியிருந்தால் இரு வருடங்களின் முடிவில் அவர் பெறும் வட்டியையும் மொத்தத் தொகையையும் காண்க.

02. உருவில் நிழற்றப்பட்ட பகுதியினால் ஒரு புற்தரை காட்டப்பட்டுள்ளது. இதில் ஓர் எல்லை அரைவட்டப்பகுதி குளம் ஒன்று ஆகும். குளத்தில் நீர் நிரம்பி உள்ளது.
   1) A,B,C,D எவ்வகையான உருவம் ஆகும்?
   2) குளத்தின் ஆரையை எழுதுக.
   3) குளத்தின் சுற்றளவைக் காண்க.
   4) புற்றரையின் (நிழற்றியபகுதி) பரப்பளவைக் காண்க.
   5) புற்தரைக்கு ஒரு சதுரமீற்றர் புற்பதிப்பதற்கு ரூபா 50 செலவானது எனின், புற்பதிக்க ஏற்பட்ட செலவு எவ்வளவாகும் எனக் காண்க.




03. 1) குறிப்பிட்ட கிராமத்தில் வசிப்போர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ கதைக்கின்றனர். 220 பேர் சிங்களத்தையும், 195 பேர் தமிழையும், 125 பேர் ஆங்கிலத்தையும் கதைக்கின்றனர். 90 பேர் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டையும்,80 பேர் சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரண்டையும் கதைக்கின்றனர். 40 பேர் இம்மூன்று மொழிகளையும் கதைக்கின்றனர். தமிழை மட்டும் கதைப்போர் எண்ணிக்கை 95.
   1. இவ்விவரங்களை வென்வரிப்படம் ஒன்றில் காட்டுக.
   2. ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றை மட்டும் கதைப்போரின் எண்ணிக்கை யாது?
   3. ஆங்கிலம் மட்டும் கதைப்போரின் எண்ணிக்கை யாது?
   4. அக்கிராமத்தில் மொத்தம் எத்தனை பேர் வசிக்கின்றனர்?

   2) பெட்டி ஒன்றில் 5 நீலமாபிள்களும், 3 பச்சை மாபிள்களும் காணப்பட்டன. ஒரு சிறுவன் எழுமாற்றாக ஒரு மாபிளை எடுத்தான். அது
   1. நீல நிறமாக இருப்பதற்கான நிகழ்தகவு?
   2. பச்சை நிறமாக இருப்பதற்கான நிகழ்தகவு என்பவற்றைக் காண்க.

04. 1) ரூபன், சமீர், மோகன் ஆகியோருக்கிடையில் 5:3:2 எனும் விகிதத்தில் ரூ. 7,500 ஐ பங்கிட்டால் மோகனுக்கு எவ்வளவு கிடைக்கும்?
   2) மேலே (1) இல் குறிப்பிடப்பட்ட மூவருக்கும் அதே விகிதத்தில் இன்னுமொரு தொகைப் பணத்தைப் பங்கிட்டால் ரூபனுக்கு ரூபா 450 கிடைக்குமாயின் சமீருக்குக் கிடைக்கவேண்டிய தொகையைக் காண்க.
   3) ஒருவர் 8% வற்வரியுடன் ரூ. 6,480 இற்கு மின் உபகரணம் ஒன்றை வாங்கினார்.
   1. வற்வரி நீங்கலாக பொருளின் விலை எவ்வளவு?
   2. வற்வரியைக் காண்க.

05. 1) குறிப்பிட்ட மாணவர்களின் உயரம் பற்றிய விவரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| உயரம் (செ.மீ) | 110-125 | 125-130 | 130-135 | 135-140 | 140-145 | 145-150 | 150-170 |
|---|---|---|---|---|---|---|---|
| மீடிறன் | 18 | 10 | 12 | 20 | 17 | 13 | 16 |

   1. இவ்விவரங்களை வலையுரு வரையம் ஒன்றில் காட்டுக.
   2. மீடிறன் பல்கோணியை வரைக.

   2) 15 மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகள் வருமாறு;
   75, 15, 11, 85, 90, 60, 17, 35, 28, 64, 72, 19, 44, 70.
   1. இடையம்
   2. முதலாம் காலணை
   3. 3 ஆம் காலணை
   4. காலணை இடைவீச்சு
   என்பவற்றைக் காண்க.

   3) கிராமப்புறத்திலிருந்து நகரத்திற்கு தொழிலுக்காகச் செல்லும் ஒருவர் கிராமத்தில் பேருந்துக்காகக் காத்திருந்த காலம் பின்வருமாறு அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. இடையைக் காண்க.

| நேரம்-நிமிடம் | 10-20 | 20-30 | 30-40 | 40-50 | 50-60 | 60-70 |
|---|---|---|---|---|---|---|
| நாட்கள் மீடிறன் | 2 | 6 | 10 | 5 | 4 | 3 |

### வரலாறு I விடைகள் (21.10.2010)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-3 | 02-4 | 03-2 | 04-1 | 05-1 | 06-2 | 07-3 | 08-4 | 09-4 | 10-3 |
| 11-2 | 12-1 | 13-1 | 14-4 | 15-1 | 16-3 | 17-2 | 18-4 | 19-1 | 20-3 |
| 21-2 | 22-4 | 23-3 | 24-1 | 25-2 | 26-3 | 27-4 | 28-2 | 29-1 | 30-3 |
| 31-4 | 32-2 | 33-1 | 34-3 | 35-4 | 36-2 | 37-1 | 38-3 | 39-4 | 40-3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(17ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர்களின் ஒற்றுமையை குலைக்கும் முயற்சியில் ஜே.வி.பி.

## அமைச்சர் எஸ்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.22

''வன்முறைகள் மூலம் மாணவர்களின் ஒற்றுமையைக் குலைக்க ஜே.வி.பியும், ஜே.வி.பி.சார்பான மாணவர் அமைப்புகளும் செயற்படுகின்றன.''

- இவ்வாறு உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு ஜே.வி.பியும், ஜே.வி.பி. சார்பான அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமுமே காரணம். ஜே.வி.பி. சார்பான அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு தற்போது ஆதரவு குன்றியே காணப்படுகிறது.

ஒரு சதவீதத்துக்கும் குறைவான மாணவர்களே அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர்.

அதேவேளை, பல்கலைக்கழக ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வதற்காக மாணவர்களை ஏற்றிச் செல்லும் தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

ஆர்ப்பாட்டங்களுக்கு பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு செல்லும் பஸ்களின் உரிமையாளர்கள் மீது ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ள விரும்பாத மாணவர்களும் பெற்றோரும் கடும் ஆத்திரத்தில் உள்ளனர். இதனால் பஸ்களுக்கு என்ன நடக்கும் என்று கூறமுடியாது. எனவே, இத்தகைய பஸ் உரிமையாளர்கள் தமது பஸ்களைப் பாதுகாத்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த அமைப்புகள் வன்முறை ஊடாக மாணவர்களின் ஒற்றுமையைக் குலைக்க முயற்சிகளை மேற்கொள்கின்றன.

- இப்படி அமைச்சர் தெரிவித்தார்.

உயர்கல்வி அமைச்சுக்கு இடையூறு விளைவித்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் பேராதனை, ரஜரட்டை ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 7மாணவர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 14ஆம் திகதி உயர்கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் காரியாலயம் ஆகியவற்றுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 35 மாணவர்களும் 12 பொலிஸாரும் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(சி)

# புலிச் சந்தேக நபர்களை சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு அனுப்பிய நால்வர் கைது

கொழும்பு, ஒக்.22

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் பலரை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என குற்றத் தடுப்புப் பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு பிரதம நீதிமன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி கோரி நீதிமன்றுக்குச் சமர்ப்பித்த அறிக்கை மூலமாகவே பொலிஸார் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளனர்.

கடவுச்சீட்டுக்களில் போலி வீசாவை ஒட்டியே புலி உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர் என நீதிமன்றுக்குஅறியப்படுத்திய பொலிஸார், இந்த விடயத்தில் வெளிநாடுகளில் இருக்கும் பலருக்கும் தொடர்புகள் இருக்கக்கூடும் என்றும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார்சமர்ப்பித்த அறிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய நீதிவான், சந்தேக நபர்களைத் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி வழங்கினார். அத்துடன், விசாரணையின் முன்னேற்றங்கள் குறித்து நீதிமன்றுக்கு அறியத்தர வேண்டுமென்றும் பொலிஸாருக்குப் பணிப்புரைவிடுத்துள்ளார்.

(சி)

# இலங்கை அரசை கண்டித்து அஞ்சல் அட்டைப் பிரசாரம்

## சர்வதேச மன்னிப்புச் சபை அறிவிப்பு

கொழும்பு, ஒக்.22

திருகோணமலையில் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் ஐவரைப் படுகொலை செய்தனர் எனக் கூறப்படும் இராணுவத்தினர் மீது உரிய நவடிக்கை எடுக்காத இலங்கை அரசைக் கண்டித்து அஞ்சல் அட்டைப் பிரசாரம் நடத்தப்படவுள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகமான சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

திருகோணமலையில் 5 தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நடந்து 5 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன.

இந்தப் படுகொலைகளை எடுத்துக் கூறும் வகையில் பிரசாரம் நடத்த மனித உரிமைகள் கண்காணிப்பகமான சர்வதேச மன்னிப்புச் சபை முடிவு செய்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையின் மனித உரிமை மீறல் போக்கை உலகறியச் செய்யும் முயற்சியாக அஞ்சல் அட்டைப் பிரசாரத்தில் மன்னிப்புச் சபை இறங்கியுள்ளது என அதன் அமெரிக்கப் பணிப்பாளர் ஜின் மெக்டொனால்ட் தெரிவித்துள்ளார்.

(சி)

# நாட்டின் நன்மதிப்புப் பிரசாரப் பணிக்கு மாதம் ரூ. ஒரு கோடி 20 லட்சம் செலவு

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 22

நாட்டின் நன்மதிப்பை நிலைநாட்டும் நோக்கிலான பிரசாரப் பணிகளுக்காக மாதாந்தம் ஒரு கோடி 20 லட்சம் ரூபா செலவிடப்படுகிறது - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கா, இந்தியா மற்றும் பிரிட்டன்போன்ற நாடுகளில் இலங்கையின் நன்மதிப்பை நிலைநாட்ட பிரசாரம் செய்யும் பணி சில நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தூரத்திலிருந்து கடமைகளை மேற்கொள்ளல் என்னும் முறையின் அடிப்படையில் குறித்த நிறுவனங்கள் இலங்கையின் நன்மதிப்பை மேம்படுத்தும் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நோக்கத்திற்காகவா வெளிவிவகார அமைச்சு இயங்கி வருகின்றது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டின் பணம் தேவையற்ற வழிகளில் வீண் விரயம் செய்யப்படுகிறது. நாட்டின் நன்மதிப்பை மேம்படுத்தும் பணிகள் ஒப்பந்த அடிப்படையில் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படக் கூடாது. பணிகளை வெளிவிவகார அமைச்சர்களே மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(சி)

# கணிதம் - II

நேரம்: 2 மணித்தியாலங்கள்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பகுதி A

01. a) ஒருவர் ரூபா 20,000 ஐ 15% கூட்டுவட்டிக்குக் கடனாகப் பெற்றார்.
    1) முதலாம் வருடத்தில் அவர் செலுத்தவேண்டிய வட்டி எவ்வளவு?
    2) இரண்டு வருட முடிவில் கடனில் இருந்து விடுபடுவதற்கு அவர் செலுத்தவேண்டிய தொகையைக் காண்க.

    b) கைக்காசுக்கு ரூபா 7,500 பெறுமதியான தையல் இயந்திரம் ஒன்றை முதலில் ரூபா 3,500 ஐச் செலுத்தியும், மீதியை 10 சமமான மாதாந்தத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தியும் வாடகைக் கொள்வனவு முறையில் கொள்வனவு செய்யலாம்.
    1) கடனுக்காக மாதம் 24% வட்டி அறவிடப்படின் செலுத்தவேண்டிய மொத்த வட்டி எவ்வளவு?
    2) ஒரு மாதத் தவணைக் கட்டணம் யாது?

02. $y = x^2 + 4x$ இன் வரைபை வரைவதற்கான x, y அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 |
|---|---|---|---|---|---|---|
| y | 0 | ..... | -4 | -3 | ..... | 5 |

a) 1) அட்டவணையில் வெற்றிடங்களை நிரப்புக.
   2) வரைபுத்தாளில் x அச்சு வழியேயும், y அச்சு வழியேயும் 10 சிறு பிரிவுகளை ஓர் அலகாக எடுத்து வரைபினை வரைக.

b) உமது வரைபைப் பயன்படுத்தி,
   1) சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக.
   2) வரைபின் இழிவுப் புள்ளியை எழுதுக.
   3) சார்பு மறையாகவுள்ள x இன் பெறுமான வீச்சைச் காண்க.
   4) $x^2 + 4x = 0$ ஆன x இன் பெறுமானங்களைக் காண்க.


03. a) தீர்க்குக. $3x - 2y = 1$ $3x + 4y = 23$

    b) $x^2 - 6x - 1 = 0$ எனும் இருபடிச் சமன்பாட்டை நிறைவர்க்கம் ஆக்குவதன் மூலம் அல்லது சூத்திரம் உபயோகித்துத் தீர்த்து விடையை இரு தசமதானங்களுக்குத் தருக.

04. a) கூட்டுக. $\begin{bmatrix} -2 & 5 & 0 \\ 3 & -4 & -1 \\ -2 & -1 & -5 \end{bmatrix} + \begin{bmatrix} -3 & -5 & -1 \\ 4 & 2 & -3 \\ -1 & -7 & 1 \end{bmatrix}$

    b) விருத்தி ஒன்றின் n ஆவது உறுப்பு $T_n = 5n-1$ இனாலே தரப்படுகின்றது.
    1) நியாயங்களைத் தந்து இது எவ்வகை விருத்தி எனக் கூறுக.
    2) இவ்விருத்தியின் 15ஆவது உறுப்பைக் காண்க.
    3) முதல் 21 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

05. முக்கோணி ABC இல் குத்துயரம் AX = 6.2cm, AB = 9.5cm, CX = 4cm.
    1) <ABC இன் பெறுமானம் 2) BX இன் நீளம்
    3) முக்கோணி ABC இன் பரப்பளவு
    என்பவற்றைக் காண்க.




06. ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் துணிகளில் எஞ்சிய வெட்டுத்துண்டுகள் தினந்தோறும் விற்கப்பட்டன. இது தொடர்பான தரவுகள் அட்டவணையில் காணப்படுகின்றன.

| வெட்டுத் துண்டுகளின் நிறை (கி.கி) வகுப்பாயிடை | 100 -124 | 125 -149 | 150 -174 | 175 -199 | 200 -224 | 225 -249 | 250 -274 | 275 -299 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை மீடிறன் | 2 | 2 | 4 | 6 | 4 | 5 | 4 | 2 |

இப்பரம்பலின்,
1) ஆகார வகுப்பு யாது?
2) ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு நாள் ஒன்றில் விற்கப்படும் வெட்டுத்துண்டுத் துணியின் இடை நிறையைக் காண்க.
3) ஒரு கிலோகிராம் வெட்டுத்துண்டுத் துணியின் விலை ரூபா 50 எனின், இவ்விற்பனையால் மாதம் ஒன்றில் தொழிற்சாலை எவ்வளவு பணத்தை உழைக்கிறது?

## பகுதி B


07. நேர்விளிம்பு கருவி, கவராயம், cm/mm அளவுக்கருவி ஆகியவற்றை மட்டும் உபயோகித்து அமைப்புக்கோடுகள் யாவற்றையும் தெளிவாகக் காட்டி,
    1) AB = 9.5cm, AD = 5.8cm, <DAB = $60^\circ$ உம் கொண்ட இணைகரம் ABCD ஐ அமைக்குக.
    2) பக்கம் DB ஐ இணைக்குக.
    3) பக்கம் B, C, D என்பவற்றைத் தொடுமாடு வட்டம் ஒன்றை அமைக்குக. அதன் மையத்தை O எனக் குறிக்குக.
    4) வட்டத்தின் ஆரையை அளந்து எழுதுக. 5) நீர் வரைந்த விட்டத்தைப் பெயரிடுக.

08. a) 5 இற்கும் 125 இற்கும் இடையில் உள்ள பெருக்கல் இடையைக் காண்க.

    b) கிணறுகள் வெட்டும் ஒரு மனிதன் முதல் மீற்றர் வெட்டுவதற்கு ரூபா 5.45, 2ஆம் மீற்றருக்கு ரூபா 90, 3ஆம் மீற்றருக்கு ரூபா 180 என ஒவ்வொரு மீற்றருக்கும் அதற்கு முன் ஒரு மீற்றருக்கு அறவிட்ட தொகையிலும் இரு மடங்கான கட்டணத்தை அறவிடுகிறான். அவன் குறித்த ஒரு கிணற்றை வெட்டுவதற்கான கொடுப்பனவாக ரூபா 5,175 ஐப் பெற்றானாயின், அக்கிணற்றின் ஆழம் எவ்வளவு?
    (விருத்திகள் பற்றிய அறிவைப் பயன்படுத்துக)


09. a) ''விட்டம் அல்லாத வட்ட நாண் ஒன்றின் நடுப்புள்ளியையும் மையத்தையும் இணைக்கும் கோடு அந்நாணிற்குச் செங்குத்தாகும்'' எனும் தேற்றத்தை நிறுவுக.

    b) வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள PQRS எனும் வட்ட நாற்பக்கலில், PQ = PS, RQ = RS ஆகும். PR ஆனது வட்டத்தின் விட்டமாகும் என நிறுவுக.





10. a) முக்கோணி ஒன்றின் பக்கம் ஒன்றை நீட்டுவதனாற் பெறப்படும் புறக்கோணம் அதன் அகத்தெதிர்க் கோணங்களின் கூட்டுத்தொகைக்குச் சமனாகும் என நிறுவுக.

    b) உருவில் AB ஐப் பொதுப்பக்கமாகக் கொண்ட இரு முக்கோணிகளைக் கொண்டுள்ளது. இதில் <ABC = <BAD, BC = AD எனின், AC = DB என நிறுவுக.





11. a) வைபவம் ஒன்றில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் என்னும் மூன்று மொழியையும் 120 பேர் பேசிய விவரம் வென்வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதற்கு ஏற்ப,
    1) எத்தனை பேர் சிங்கள மொழி பேசினர்?
    2) 75 பேர் ஆங்கில மொழி பேசினர் எனின், x ஐக் காண்க.
    3) x இன் பெறுமானம் யாது?
    4) x இன் மூலம் வகைக்குறிக்கப்படுபவர்கள் யாவர்?




    b) பெட்டி ஒன்றினுள் 5 அட்டைகள் காணப்பட்டன. அவற்றுள் 3 சிவப்பு நிறமானதும், 2 மஞ்சள் நிறமானதும் ஆகும். சிறுவன் ஒருவன் எழுமாற்றாக அட்டை ஒன்றை எடுத்தான். அதனை மீண்டும் பையினுள் இடாமல் இன்னொரு அட்டையை எடுத்தான்.
    1) மாதிரி வெளியைத் தெக்காட்டின் தளம் ஒன்றில் குறித்துக் காட்டுக.
    2) வெளியே எடுக்கப்பட்ட இரு அட்டைகளுள் இரண்டும் சிவப்பு நிறமாக இருத்தல்
    3) ஒன்று சிவப்பு நிறமானதாகவும், மற்றையது மஞ்சள் நிறமானதாகவும் இருத்தல்
    என்பவற்றுக்கான நிகழ்தகவுகளைக் காண்க.

12. a) உருவில் காட்டப்படுவது 10cm பக்கமுள்ள சதுர அடியைக் கொண்ட செங்கூம்பகமாகும். அடியில் உள்ள விளிம்புகள் தவிர்ந்த ஏனைய விளிம்புகள் ஒவ்வொன்றும் 13cm ஆகும்.
    1) A இலிருந்து ED இற்கு உள்ள செங்குத்தின் நீளம் h எனின், h ஐக் காண்க.
    2) முக்கோண முகம் ஒன்றினது பரப்பளவைக் காண்க.
    3) செங்கூம்பகத்தின் மேற்பரப்பளவைக் காண்க.

    b) 1) ஆரை r உம், உயரம் 6r உம் உடைய கூம்பின் கனவளவை π, r சார்பில் தருக.
    2) π = 3.14cm, r = 4.25cm எனின், காட்டப்பட்ட கூம்பின் கனவளவை மடக்கை அட்டவணையைப் பயன்படுத்திக் காண்க.




(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 66
திகதி - 20.10.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **W** அதிர்ஷ்ட இலக்கம் **04** வெற்றி இலக்கம் **1 7 0 7 6**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | W | 04 | 1 | 7 | 0 | 7 | 6 | ரூ. 19,710,187.00 | பரிசு - |
| 1 பரிசு | | 04 | 1 | 7 | 0 | 7 | 6 | ரூ. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 1 | 7 | 0 | 7 | 6 | ரூ. 100,000.00 | பரிசு 03 |
| 3 பரிசு | | | | 7 | 0 | 7 | 6 | ரூ. 10,000.00 | பரிசு 27 |
| 4 பரிசு | | | | | 0 | 7 | 6 | ரூ. 1,000.00 | பரிசு 277 |
| 5 பரிசு | | | | | | 7 | 6 | ரூ. 50.00 | பரிசு 2734 |
| 6 பரிசு | | | | | | | 6 | ரூ. 20.00 | பரிசு 26507 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 1 | 7 | 0 | 7 | | ரூ. 1,000.00 | பரிசு 28 |
| 8 பரிசு | | | 1 | 7 | 0 | | | ரூ. 100.00 | பரிசு 281 |
| 9 பரிசு | | | 1 | 7 | | | | ரூ. 50.00 | பரிசு 2803 |
| 10 பரிசு | W | | | | | | | ரூ. 20.00 | பரிசு 10897 |
| 11 பரிசு | W | 04 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1232 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. **2,051,230.00**

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 20,141,525.00


# மொழியை அடிப்படையாக வைத்து பிரதேசங்களைப் பிரிக்க முடியாது

## நாடாளுமன்றில் அத்துரலிய ரத்ன தேரர் உரை

மாத்தறையும், காலியும் சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்று எவரும் கூறமுடியாது. மொழியை அடிப்படையாகக் கொண்டு பிரதேசங்களைப் பிரிக்கக் கூடாது - எனக் கோரிக்கை விடுத்தார் ஹெலஉறுமய உறுப்பினரான வண. அத்துரலிய ரத்னதேரர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் நடைபெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே தேரர் இப்படிக் கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நான் சிங்களவன் என்பதால் தமிழர்களுக்கு எதிரானவன் அல்லன். தமிழர்களும், சிங்களவர்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றுதான் கூறுகின்றேன். இப்பொழுது சிங்களவர்கள் யாழ்ப்பாணம் சென்றுள்ளனர். அவர்களுக்கு அரசு ஆதரவு வழங்க வில்லை. அங்கு வாழும் தமிழ் மக்களே உணவு கொடுத்து உபசரிக்கின்றனர்.

அண்மையில் நான் நயினாதீவுக்குச் சென்றேன். அங்கு வாழும் தமிழர்கள் எங் களை எதிரிகளாகப் பார்க்கவில்லை. மிகவும் அன்பாகவும் மரியாதையாகவும் கௌரவித்தனர்.

1983 இனக்கலவரத்தை கறுப்பு ஜூலை என்கின்றனர். இதனை உருவாக்கியவர்கள் யார்? அன்று இனக்கலவரம் ஏற்பட்டவுடன் கம்யூனிஸ்ட் கட்சியையும், தமிழ்க் கூட்டணி யையும் ஐ. தே. கட்சி தடை செய்தது. இன்று அது தமிழர்களுக்காக வக்காளத்து வாங்குகிறது.

மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை என வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 6 சதவீதம் முதல் 9சதவீதம் வரை சிங்களவர்கள் வாழ்ந்தனர். 1983 ஆம் ஆண்டு கலவரத்தின் போது சிங்களவர்கள், குழந்தைகள், தாய்மார் எனக் குடும்பம் குடும்பமாக வெட்டிக் கொல்லப்பட்டனர். இதையெல்லாம் எவரும் பேசுவதில்லை.

கடந்தகாலச் சம்பவங்களைப்பற்றிப் பேசுவதில் எவ்விதமான பயனும் இல்லை. தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் எனப் பேதம் இன்றி அனைவரும் ஒரே குடும்பமாக வாழ வழி ஏற்படுத்த வேண்டும். மொழியை வைத்துக் காணியைப் பிரிக்கக் கூடாது. இது சிங்களவர்களுக்கு மட்டும் சொந்தமான நாடு அல்ல - இவ்வாறு தேரர் வலியுறுத்தினார். (சி)

## தென்மராட்சி.....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

வலிகாம வலயத்தில் யாழ்ப்பாணம் 28 கிராம அலுவலர் பிரிவுகளையும் நல்லூர் 40 கிராம அலுவலர் பிரிவுகளையும் வலி. தெற்கு, மேற்கு 28 கிராம அலுவலர் பிரிவுகளையும், வலி. வடக்கு 45 கிராம அலுவலர் பிரிவுகளையும் வலி கிழக்கு 31 கிராம அலுவலர் பிரிவுகளையும், வலி. தெற்கு 30 கிராம அலுவலர் பிரிவுகளையும், வலி. மேற்கு 25 கிராம அலுவலர் பிரிவுகளையும் கொண்டுள்ளது.

தீவக வலயத்தில் வேலணை 14 கிராம அலுவலர் பிரிவுகளையும் நெடுந்தீவு 6 கிராம அலுவலர் பிரிவுகளையும் காரைநகர் 9 கிராம அலுவலர் பிரிவுகளையும், ஊர்காவற்றுறை 15கிராம அலுவலர் பிரிவுகளையும் கொண்டுள்ளது.

மேற்படி புள்ளி விவரங்களை ஆராய்ந்து பார்க்கும் போது தென் மராட்சிப் பிரதேச செயலகம் இரண்டு பிரிவுகளால் பிரிக்கப்பட்டால் நிர்வாக அலகு இலகு வானதாக மாறிவிடும் என்பதையே சுட்டி நிற்கின்றது. ஒரு கால கட்டத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலரின் தலைமையில் கொடிகாமத்தில் உப பிரதேச செயலகம் ஒன்று இயங்கி வந்தது. ஆயினும் ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்பு அது மூடப்பட்டமை ஒரு துரதிஷ்டமான நிகழ்வாகும்.

அரசாங்க அபிவிருத்தி சார்பான நிதி ஒதுக்கீடுகள் நாடாளுமன்ற பிரதிநிதிகளின் ஒதுக்கீடுகள் யாவும் பிரதேச செயலகங்களை மையப்படுத்தியே ஒதுக்ககப்படுகின்றன. இப்படியான நிதி ஒதுக்கீடுகள்

அருவரன்

பிரதேசத்துக்கு போதுமானதா? என்ற கேள்வியும் எழுகின்றது.

உதாரணமாக 6 கிராம அலுவலகர் பிரிவுகளைக் கொண்ட நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும், 60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கும் ஒரேயளவான நிதியே ஒதுக்கப்படுகின்றது.

இவ்வாறான தொகை மூலம் இப்பாரிய பிரதேசத்தை முழுமையாக அபி விருத்தி செய்வதென்பது இயலாத காரியம். எனவே தென்மராட்சிப் பிரதேச செயலகம் பிரிக்கப்பட்டு, கொடிகாமம் பிரதேசத்தை மையப்படுத்தி தென்மராட்சி கிழக்கு பிரதேசத்துக்கென தனி ஒரு பிரதேச செயலகம் அமைய எமது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர், வட மகாண ஆளுநர், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் கூடிய கவனம் செலுத்தி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி நிர்வாக கட்டமைப்பு ரீதியாக அவர்களுக்குள்ள அசௌகரியங்களை நீக்க வழி செய்ய வேண்டும்.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
செல்வி க.பிரியதர்சினி அவர்களின் அன்புத் தாய்
**திருமதி கலாவல்லி கனகரத்தினம்**
அவர்களது மறைவையிட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.

## பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் K.K.S வீதியில்
அமைந்துள்ள கல்வி நிறுவனத்திற்கு
01. IELTS போதிக்கும் ஆசிரியர்கள்
02. கணனி ஆசிரியர்கள்
03. VISA CONSULTANTS OFFICERS
04. வரவேற்பாளர்
05. அலுவலக சிற்றூழியர் உடனடியாகத் தேவை.
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு- 0777919293
E-mail-manager@SEC.Edu.lk

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2166 திகதி 20-10-2010

ஆங்கில எழுத்திற்கும் **B**

வெற்றி எண்கள் **19 26 59 67** போனஸ் இல: **33**

ஜக்பொட் பரிசு ரூ. 18,454,700/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 197767 | 20/- | 3,955,340/- |
| 2 இல | 14149 | 100/- | 1,414,900/- |
| 3 இல | 292 | 1,000/- | 292,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7966 | 40/- | 318,640/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 544 | 1,000/- | 544,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 18 | 10,000/- | 180,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 18,454,700/- | - |
| 1 இல + போனஸ் இல | 9414 | 100/- | 941,400/- |
| 2 இல + போனஸ் இல | 452 | 500/- | 226,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 360 | 200/- | 72,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | | | 9,516,780/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 230993 | | 10,116,780/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 202408289-5-37 |
| கொழும்பு | 202414920-4-28 |
| மாத்தறை | 202410523-8-09 |
| மாத்தளை | 202411339-2-34 |
| கம்பஹா | 202413458-8-09 |
| பொலன்னறுவை | 202411720-5-06 |
| மட்டக்களப்பு | 202430376-4-43 |
| கண்டி | 202412400-8-03 |
| இரத்தினபுரி | 202417502-6-12 |
| மொனராகலை | 202409962-0-06 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 18,994,650/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஒக்டோபர் 23 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2344546/7

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சுபாஜினி இராஜேந்திரன் அவர்களின் மாமனார்
**அமரர் முத்துத்தம்பி தம்பிராசா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
நலன்புரிக் கழகம்,
யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.
(104965)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02.08.1934
மறைவு: 26.10.2007
**திருமதி நடேசமூர்த்தி சின்னம்மா**
எங்கள் அன்புத் தாயே!
ஆண்டுகள் மூன்று கடந்தாலும்
ஆறாத துயரத்தில் தவிக்கிறோம்
எங்கள் தாயின் அன்பிற்கு நிகரேது அம்மா
என்றும் உங்கள் பிரிவால் தவிக்கும்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
கொக்குவில் மேற்கு. (104958)

## சம்மேளனத்திற்கு ஊழியர் தேவை

01. சம்மேளனத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பனிக்கட்டி ஆலைக்கு இரண்டு 23 வயதுக்கு மேற்பட்ட O/L படித்த ஊழியர்கள் தேவை.

02. கணக்கு லிகிதர் A/L படித்த கணக்கு வைப்பில் தேர்ச்சியுள்ள 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

28.10.2010 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். அதன் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இல.100, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
21.10.2010
(சி/572084)
யாழ்.மாவட்ட க.தொ.கூ.ச.
சமாசங்களின் சம்மேளனம்,

## விற்பனைக்கு



நல்ல நிலையிலுள்ள இசிசு டபிள்கப் 50xxx (டீசல்) உடனடி விற்பனைக்குண்டு
தொடர்பு: 0775260305

## ජයවිරු
ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 533
சீட்டிழுப்பு திகதி: 20.10.2010

வெற்றி எழுத்து: **D** வெற்றி இலக்கங்கள்: **07 27 59 64**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 10,990,616.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 11 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 234 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 475 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 11597 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6716 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 168174 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 26824 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,821,300.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 11,196,426.40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் அரசின் செலவின வெட்டுக்களால் 5 இலட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம்

லண்டன், ஒக். 22

பிரிட்டிஷ் அரசு நிதிப்பற்றாக்குறையை ஈடுகட்ட மேற்கொள்ளவிருக்கும் வெட்டுக்களால், பொதுத்துறையில் 5 இலட்சம் பேர் வேலையிழக்கக்கூடும்என அச்சம் தெரிவிக் கப்படுகிறது.

பிரிட்டனில் இந்த ஆண்டின் மே மாதம் நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற கன்சர்வேடிவ், லிபரல் டெமோக்ரடிக் கட்சிக் கூட்டணி ஆகியவை அரசு பெருமளவில் எதிர்பார்க்கப்பட்டு வந்த பொதுச் செலவின வெட்டுக்களை அறிவித்துள் ளது.

பல மாதங்களாக நடைபெற்ற ஒட்டுமொத்த செலவின மீளாய்வு நடவடிக்கைக்குப் பின்னர் எதிர்வரும் ஆண்டுகளில் பிரிட்டன் எத்தகையளவில் செலவினங்களை குறைக்கும் என்பதை நாட்டின் நிதி அமைச்சர் ஜோர்ஜ் ஆஸ்போர்ன் அறிவித்துள்ளார்.

அடுத்த நான்கு ஆண்டுகளில் 130 பில்லியன் டொலர்களைச் சேமிக்க அரசு எண்ணுகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பிரிட்டன் எடுத்துள்ள மிகப் பெறும் சிக்கன நடவடிக்கை இது என்றும் தான் எடுக்கும் நடவடிக்கைகள் கடினமானவை என்றும் நிதி அமைச்சர் ஆஸ்போர்ன் நாடா ளுமன்றத்தில் தனது உரையை ஆரம்பிக் கும்போதே தெளிவு படுத்தினார்.

அரசின் நிதிப் பற்றாக்குறையைக் குறைக் கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இந்தச் செலவின வெட்டுக்களால் பொதுத் துறையில் 5 இலட்சம் பேர் வேலையிழப்பார்கள் என்ற அச்சம் நிலவுகிறது.

நலவாழ்வுச் செலவுகளில் 7 பில்லியன் டொலர்கள் குறைக்கப்படுகின்றன. வேலை யில்லாதோர், உடல் ஊனமுற்றோர், நோயாளர் ஆகியோரின் பெரும் அரச உதவிகளுக்கு உச்சவரம்பு நிர்ணயிக் கப்படவுள்ளது.

அரசின் பல துறைகளின் செலவுகளும் குறைக்கப்படுகின்றன. சராசரியாக ஒவ்வொரு துறையின் செலவுகளும் 20 சதவீதம் குறைக்கப்படும் என்று நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

பொலிஸ், உள்ளூராட்சி அமைப்புகள் ஆகிய வற்றின் செலவுகளும், அதே நேரத்தில் வைத்தியசாலைகள், பாடசாலைகள், சர்வ தேச உதவிகள் ஆகியவற்றுக்கான செலவுகளும் வெட்டப்படமாட்டாது என்றும் ஜோர்ஜ் ஆஸ்போர்ன் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆனால், பல்கலைக்கழகங்களுக்குக் கொடுக்கப்படும் மானியத்தொகை பெருமளவு குறைக்கப்படுவதால் ஏற்படும் பாதிப்புகள் பெரிதாக இருக்கும் என்று அஞ்சப்படுகிறது.

சர்வதேச உதவி குறித்து ஐ.நாவின் கடப்பாடுகளை நிறைவேற்றும் முதல் பிரிட் டிஷ் அரசாக இந்தக் கூட்டணி அரசு இருக் கும். இதை நிறைவேற்றும் முதல் முக்கிய உலக நாடாகவும் பிரிட்டன் இருக்கும் என்று நிதியமைச்சர் கூறினார்.

பாதுகாப்புச் செலவினங்கள் 8 சதவீதம் குறைக்கப்படும் என்று செவ்வாய்கிழமையன்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதே வேளை, அரசின் இந்தச் செலவின வெட்டுக்களை எதிர்க்கட்சியான லேபர் கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது.

## முன்னாள் பிரி. பிரதமர் தட்சர் வைத்தியசாலையில் சேர்ப்பு

லண்டன், ஒக். 22

ஃப்ளு காய்ச்சல் காரணமாக பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் மார்கரெட் தட்சர் வைத்தியசாலையில், சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் அவரது 85ஆவது பிறந்த நாளையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்து நிகழ்ச்சிக்கும் காய்ச்சல் காரணமாக அவரால் வரமுடியாமல் போயிற்று.

விருந்துக்கு வந்திருந்த சுமார் 150 பேர் ஏமாற்றமடைந்தனர். இந்த விருந்தை பிரதமர் டேவிட் கெமரூன் ஏற்பாடு செய்திருந்தார்.

பிறந்த தின விருந்தில் பங்கேற்க முடியாமல் போனமைக்காக வருத்தம் தெரிவித்து தனது நண்பர்கள், சகாக்களுக்கு தட்சர் கடிதம் எழுதியிருந்தார். 1979 முதல் 1990ஆம் ஆண்டு வரை பிரிட்டிஷ் பிரதமராக இருந்த வர் தட்சர். சில ஆண்டுகளாக தட்சருக்கு அடிக் கடி உடல்நலக்குறைவு ஏற்பட்டு வருகிறது.

கவலைப்படும் அளவுக்கு அவரது நிலைமை மோசமாகி விடவில்லை. இன்னும் சில தினங்களில் தட்சர் வீடு திரும்புவார் என அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன என பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

லண்டனிலுள்ள தனியார் வைத்திய சாலையில் தட்சர் சிகிச்சை பெற்று வருகிறார்.

## உதவியாளரைக் கொன்ற சவூதி இளவரசருக்கு இருபது ஆண்டு சிறைத்தண்டனை விதிப்பு

லண்டன், ஒக். 22

உதவியாளரை அடித்துக் கொன்ற வழக்கில் சவூதி இளவரசருக்கு லண்டன் நீதிமன்றம் 20 ஆண்டுகால சிறைத்தண்டனை அளித்துள்ளது.

சவுதி அரேபிய இளவரசர் சையது அப்துல்லா பின் நசீர் அல் சையது (வயது 34). இவர் சவூதி அரேபிய மன்னரின் புதல்வி வழி பேரனாவார்.

கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி லண்டனில் ஒரு நட்சத்திர ஹோட்டலில் அப்துல்லா தங்கியிருந்தார். அப்போது தன்னுடைய உதவியாளரை அவர் அடித்து சித்ரவதை செய்து கொலை செய்தார்.

இளவரசர் அப்துல்லா ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர் என்றும், தனது உதவியாளர் அதற்கு உடன்படாததால் அவரை கொலை செய்தார் என்றும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்தது.

அவரை பொலிஸார் கைதுசெய்து வழக்குத் தொடர்ந்தனர். இதற்கிடையே, சவூதி அரேபிய அரச குடும்பத்தின் செல்வாக்கைப் பயன்படுத்தி அப்துல்லாவை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனால், பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை விதிப்படி அப்துல்லா மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இதுபோன்று அப்துல்லா நடந்து கொள்வது முதல் தடவை இல்லை என்றும், ஏற்கனவே ஒருதடவை அதிகமான மது போதையில் ஒருவரைத் தாக்கியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது இந்தக் கொலை தொடர்பாக சவூதி இளவரசர் அப்துல்லாவுக்கு 20 ஆண்டுகால சிறைத்தண்டனை விதித்து, லண்டன் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதுபற்றி நீதிபதி டேவட் பீன் குறிப்பிடுகையில், ''கொலை வழக்கில் இளவரசர் ஒருவர் குற்றவாளியாக இருப்பது வழக்கத்திற்கு மாறாக உள்ளது. யார் குற்றம் செய்து இருந்தாலும் சட்டத்தின் முன் அனைவரும் சமம்'' என்று தெரிவித்துள்ளார்.

சவூதிஅரேபியாவில், ஓரினச் சேர்க்கை என்பது மரணதண்டனைக்கான குற்றமாகும். இளவரசர் சையது அப்துல்லா சவூதி அரேபியா சென்றால் அவருக்கு மரண தண்டனை விதிக்க வாய்ப்புள்ளது.

எனவே, தண்டனை காலம் முடிந்து சிறையிலிருந்து அவர் விடுதலையாகும் போது, பிரிட்டனிலேயே தங்க அடைக்கலம் கேட்பார் என்றும் தெரிகிறது.



பிரிட்டிஷ் நாடாளுமன்ற பொதுமக்கள் சபையில் நிதிநிலை அறிக்கை, அரசு செலவினங்கள் குறைப்பு ஆகியவை தொடர்பான கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதமர் டேவிட் கெமரூன் (இடது ) கலந்துகொண்டார்.

## பாக். முன்னாள் ஜனாதிபதி பாரூக் லெகாரி மறைவு

இஸ்லாமாபாத், ஒக். 22

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பாரூக் அகமது கான் லெகாரி (வயது - 70) செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

ராவல்பிண்டியிலுள்ள இராணுவ வைத்தியசாலையில் உடல்நலக்குறைவால் பாரூக் அகமது கடந்த சில தினங்களுக்கு முன் னர் சேர்க்கப்பட்டார். அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர்.

எனினும் அவரது உடல்நிலையில் சிறிதும் முன்னேற்றம் ஏற்படவில்லை. செவ்வாய்க் கிழமை இரவு உடல்நிலை மேலும் மோசம டைந்து காலமானார்.

பாரூக் அகமது கான் லெகாரி, பாகிஸ்தான் அரசியல் களத்தில் தனக்கென தனிப்பட்ட முத்திரையை பதித்தவர். பாரூக் அகமது பஞ்சாப் மாகாணத்தின் காஸி கான் மாவட்டத்திலுள்ள சோட்டி ஜைரீன் கிராமத்தில் பிறந்தவர்.

பாடசாலைப் படிப்பை பாகிஸ்தானில் முடித்த அவர், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். பின்னர் பாகிஸ்தான் திரும்பிய அவர், மத்திய தேர்வாணையத் தேர்வெழுதி வெற்றிபெற்று உயர் அதிகாரியாகப் பணியாற்றினார்.

தனது தந்தை இறக்கவே, அரசுப் பணியை துறந்து அரசியலில் தடம்பதித்தார் பாரூக் அகமது. பாகிஸ்தான் மக்கள் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு செயல்பட்டார். ஒரு கட்டத்தில் அக்கட்சியின் நிறுவுநர் சுல்பிகர் அலி பூட்டோவுக்கும், அவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இதனால் அக்கட்சியிலிருந்து விலகினார். 1993, நவம்பரில் பாகிஸ்தான் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். 1997இல் பெனாஸீர் பூட்டோ தலைமையிலான அரசை பதவிநீக்கம் செய்தார்.

அவரது இந்தச் செயலுக்கு பெனாஸீர் பூட்டோ கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தார். அவருடன் மோதல் ஏற்பட்டது. இதனால் ஜனாதிபதிப் பதவியைத் துறந்தார்.

இதைத்தொடர்ந்து மில்லத் கட்சி என்ற புதிய கட்சியைத் தொடங்கி செயல்பட்டார். ஒரு கட்டத்தில் பாகிஸ்தான் அரசியல் களத்தில் தனித்து தாக்குப்பிடிக்க முடியாததால் அவர் தனது கட்சியை பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (க்யூ) கட்சியுடன் இணைத்துக்கொண்டார்.

# மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு: கராச்சி சந்தையில் 12 பேர் பலி!

கராச்சி, ஒக். 22

பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள முக்கிய மான சந்தையில் மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் பொதுமக்களை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர். இதில் 12 பேர் உயிரிழந்தனர்.

செவ்வாய்க்கிழமை இரவு மக்கள் பொருள்களை வாங்கிக்கொண்டிருந்தனர். அப்போது சந்தைக்குள் புகுந்த மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பியோடிவிட்ட னர்.

அவர்கள் யார் என்பது தெரியவில்லை. அவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இதையடுத்து கராச்சியில் கடந்த 5 நாள்களில் நடந்த வன்முறைச் சம்பவங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை 55 ஆக அதிகரித்துள்ளது. கராச்சியில் தொடர்ந்து நடைபெறும் வன்முறையால் அங்கு பதற் றம் நிலவுகிறது. சட்டம், ஒழுங்கு சீர்குலை யும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்நகரில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட இராணுவத்தை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த தலைவர் நபில் கபோல் வலியுறுத்தியுள்ளார்.

முன்னர் கராச்சியிலுள்ள ஒராங்கி சட்டப் பேரவைத் தொகுதிக்கு ஞாயிற்றுக்கிழமை இடைத் தேர்தல் நடைபெற்றது. இதில் பெரும் வன்முறை வெடித்தது.

இந்திய முஸ்லிம்களின் கட்சியான முத்தைதா-இ-குவாமி இயக்கத்தினருக்கும் (எம்.க்யூ.எம்), பஷ்டூன் மொழி பேசும் பழங்குடியினருக்குமிடையே தேர்தலின் போது கடும் மோதல் ஏற்பட்டது.

மற்ற பாகிஸ்தானியர்களும் இந்திய முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறையில் இறங்கினர். இதில் 43 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்திய முஸ்லிம்கள். மேலும் 60 பேர் படுகாய மடைந்தனர்.

பொலிஸார் வந்து துப்பாக்கிச் சூடு நடத்திய பின்னரே நிலைமை கட்டுக்குள் வந்தது. கொலைகள், மோதல்கள் ஆகியவை தொடர்பாக 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



சோமாலியாவின் முதல் நாடாளுமன்றக் கூட்டம் தலைநகரான மொகடிஸ்ஹூவில் நடைபெற்றது. ஜனாதிபதி ஷெரீப் ஷேக் அகமத் (நடுவில்) புதிய பிரதமர் முகமது அப்துல்லா, சபாநாயகர் ஷெரீப் ஹசன் ஆகியோரை சக உறுப்பினர்களுக்கு அறிமுகம் செய்துவைத்துவிட்டு பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளிக்கிறார். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உதயன்' வெள்ளிவிழா கூடைப்பந்தாட்டம்; ஜொலிஸ்ரார், சென்றலைட்ஸ் நாளை பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 22

'உதயன்' நாளிதழ் வெள்ளி விழாவை ஒட்டி அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை இடம்பெறும் இறுதியாட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சையில் ஈடுபடப்போகின்றன.

பலம்வாய்ந்த இந்த இரு அணிகளும் மோதுகின்றதால், ரசிகர்களுக்கு பெருவிருந்தாக ஆட்டம் அமையப் போகின்றது.

இந்த ஆட்டம் வேம்படி மகளிர் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெறவுள்ளது.

பெண்களுக்கான இறுதியாட்டத்திலும் பலம்வாய்ந்த பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் அணியும் மோதுகின்றன.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகியவற்றின் கூடைப்பந்தாட்டத்திடல்களில் கடந்த 12 ஆம் திகதி முதல் இந்த ஆட்டங்கள் நடைபெற்றுவந்தன.

சென்றலைட்ஸ் (சொக்ஸ்) வி.க., பற்றீஸியன்ஸ் வி.க., கே.ஸி.ஸி.ஸி. (வெள்ளை) வி.க., சென்றலைட்ஸ் (புளூஸ்) வி.க., ஜொலிஸ்ரார் வி.க., ஓல்ட் கோல்ட்ஸ் வி.க., ஜொனியன்ஸ் வி.க., கே.ஸி.ஸி.ஸி. (சிவப்பு) வி.க. ஆகியன ஆண்கள் பிரிவில் பங்கு கொண்டன.

பட்டர்பிளை வி.க., இராமநாதன் கல்லூரி, உடுவில் வி.க., கே.ஸி.ஸி.ஸி. வி.க., கன்னியர் மடம், பண்டத்தரிப்பு மகளிர் (மஞ்சல்) வி.க., பமிலியன்ஸ் வி.க., பண்டத்தரிப்பு மகளிர் (பச்சை) வி.க. ஆகியன பெண்கள் பிரிவில் பங்கு கொண்டன. (ஐ)

## மட்டக்களப்பில் கூடைப்பந்தாட்டப் பயிற்சி

மட்டக்களப்பு, ஒக். 22

கிழக்கு மாகாண வரலாற்றில் முதன்முறையாக முப்பதாண்டு கால யுத்தத்தின் பின்னர் மட்டக்களப்பு 234ஆவது இராணுவ தலைமையகம் மிகப் பிரமாண்டமான முறையில்ஏற்பாடு செய்துள்ளகூடைப்பந்தாட்ட முகாமும், சுற்றுப் போட்டியும் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசிய பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி முகாமிற்கென மட்டக்களப்பு மாவட்ட ரீதியாக 150 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக 234 ஆவது படைப் பிரிவு கட்டளைத் தளபதி பிரிகேடியர் மகிந்த முதலிகே தெரிவித்தார்.

முதல்நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை இராணுவத்தின் கூடைப்பந்தாட்ட குழுவின் தலைவர் பிரிகேடியர் ஜனக ரத்னாயக்க இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எம்.எச்.எஸ். பி.பெரேராவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முதல் நாளான நாளை பயிற்சி முகாம் ஆரம்ப வைபவம் சுற்றுப் போட்டிக்கான பிரகடனமும் இடம் பெறும்.

இரண்டாம் நாளான நாளை மறுதினம் கூடைப்பந்தாட்ட கண் காட்சியும் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் இடம்பெறுமென நிகழ்ச்சி ஏற்பாட்டாளரான கப்டன் கே.ராஜ பக்ஷ தெரிவித்தார்.

## சங்கானைக் கல்விக் கோட்டத்தில் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

வலி.வடக்கு, ஒக்.22

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற்று வருகின்றது.

அந்தப் போட்டியின் சில முடிவுகள் வருமாறு:-

✱ 13 வயதுப் பிரிவில் அராலி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையும் சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயமும் மோதிக் கொண்டதில் அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

✱ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்துக்கும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

✱ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்துக்கும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் சரஸ்வதி மகா வித்தியாலயம் 3:2 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியை வெற்றி பெற்றது.

✱ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் வட்டுக் கோட்டை மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டி




யில் யாழ்ப்பாணக் கல்லூரி 2:1 என்ற கோல்கள் கணக்கில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியை வென்றது.

✱ 16 வயதுப் பிரிவில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

✱ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கும் தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் விக்ரோறியாக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ-86)

## நூற்றாண்டு விழா கரப்பந்தாட்டம்; மகாஜனக் கல்லூரி சம்பியன்




தெல்லிப்பழை,ஒக்.22

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கு இடையே இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வெற்றி பெற்றது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும் மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன. மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை மகாஜனக் கல்லூரி 25:03, 25:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

மூன்றாம் இடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரி பெற்றது. முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகளுக்கு முறையே பத்தாயிரம் ரூபா, ஏழாயிரம் ரூபா, ஐயாயிரம் ரூபா பணப்பரிசில்களும் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## சண்டிலிப்பாய் கோட்ட உதைபந்தாட்டம்; அராலி சரஸ்வதி ம.வி.சம்பியனானது

வலி.வடக்கு, ஒக்.22

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளின் 13வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியனானது அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மோதியது.

இரு அணிகளும் அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்தபோதும் முதல்பாதி ஆட்டத்தில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் ஒரு கோலைப் போட்டது. பதிலுக்குக் கோல்போட சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியினர் முயன்ற போதும் அம்முயற்சிகள் கைகூடாத நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியினரின் கையே ஓங்கியது. தமது இரண்டாவது கோலையும் பெற்ற அணி சரஸ்வதி மகா வித்தியாலயம் தனது வெற்றியை உறுதிப்படுத்தியது.

ஆட்டமுடிவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை 2:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

இதேவேளை -

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 3ஆம் இடத்தைக் கைப்பற்றியது. (6-86)



இலங்கை பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. அதில் ஆண்கள் பிரிவினர்களுக்கான தடகளப் போட்டியில் 71 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத் தைப் பெற்றுக்கொண்ட யாழ்.பல்கலைக்கழக அணி வீரர்களையும் பயிற்றுநர்களையும் படத்தில் காணலாம். (படம்: தமிழினியன்)

## காவலூரில் கரப்பந்து, மென்பந்தாட்டம்; சென்.பிலிப்ஸ், றேஞ்சர்ஸ் சம்பியன்

ஊர்காவற்றுறை, ஒக்.22

ஊர்காவற்றுறை அன்னை முன்னேற்ற கழகம் நடத்திய கரப்பந்து மற்றும் மென்பந்து சுற்றுப் போட்டிகளில் சென்.பிலிப்ஸ், றேஞ்சர்ஸ் அணிகள் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டன.

மென்பந்து சுற்றுப் போட்டியில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக்கழகமும் வேலணை ஐயனார் விளையாட்டுக் கழகமும் இறுதிப் போட்டியில் மோதிக் கொண்டன.

அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் வி.க. 3 விக்கெட் வித்தியாசத்தில் வேலணை ஐயனார் வி.கவை தோற்கடித்து கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

கரப்பந்து சுற்றுப் போட்டியில் இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் வி.கவும், ஊர்காவற்றுறை அண்ணா முன்னேற்ற வி.கவும் மோதிக்கொண்டன.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் வி.கழகம் 2:1என்ற அடிப்படையில் வெற்றி கொண்டு கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டியில் பரிசளிப்பு வழங்கும் இறுதி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலும் சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை யா/புனித அந்தோனியார் கல்லூரியின் உதவி அதிபர் அருட்தந்தை றொபின்சன் ஜோசேமும் கலந்து கொண்டன. (ஐ-325)

## தொட்டிலடி இளங்கதிரை வென்றது வண்ணை காமாட்சி விளையாட்டுக்கழகம்

வலி.வடக்கு, ஒக்.22

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.மாவட்ட மென்பந்து கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 16 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் வண்ணை காமாட்சி விளையாட்டுக்கழகம் 5 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை பூமா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் தொட்டிலடி இளம் கதிர் விளையாட்டுக் கழகமும் காமாட்சி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய இளங்கதிர் விளையாட்டுக்கழகம் 16 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் தனுசன் 11, குமார்ராஜ் 9 ஓட்டங்களைப் பெற்றனர்.

காமாட்சி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த தர்மன் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கிருபவன், நிஷாந்தன், ரதிசன், திலீபன் முறையே 2,3,11,12 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய காமாட்சி விளையாட்டுக் கழகம் 11.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. இதில் செல்ரன் 26, போஜன் 10 ஓட்டங்களைப் பெற்றனர்.

இளம் கதிர் விளையாட்டுக் கழக்தைச் சேர்ந்த கஜி, விதுசன் முறையே 8,10 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (6-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பிபா' அதிரடி; லஞ்சம் கோரிய உறுப்பினர்களுக்கு கல்தா!



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை நடத்த வாய்ப்புக் கேட்கும் நாடுகளிடம், ஆதரவாக வாக்களிக்க லஞ்சம் கேட்டனர் என்ற குற்றஞ்சாட்டப்பட்ட 'பிபா'வின் செயற்குழு உறுப்பினர்கள் இருவரதும் பதவிகள் பறிக்கப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை நடத்த இங்கிலாந்து மற்றும் ரஷ்ய நாடுகளுக்கிடையே கடும் போட்டி நிலவுகிறது. இந்தப் போட்டி நிலையைப் பயன்படுத்தி 'பிபா'வில் வாக்களிக்கும் உரிமையுள்ள இரு செயற்குழு உறுப்பினர்கள் லஞ்சம் கோரியிருந்தனர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இதையடுத்து நேற்றுமுன்தினம் 'பிபா' நடத்திய விசாரணைகளின் பின்னர், லஞ்சம் கோரியவர்களான, நைஜீரிய உதைபந்தாட்டச் சங்க நிர்வாகி அமாஸ் அடாமு, ஓசானியா உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவரான ரெனால்ட் டொமாரி ஆகியோரின் பதவிகள் தற்காலிகமாகப் பறிக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே 2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை நடத்தும் வாய்ப்புத் தமக்குக் கிடைக்காது எனக் கருதிய அமெரிக்கா, போட்டியிலிருந்து விலகியுள்ளது.

அதேவேளை, 2022ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரைக் குறிவைக்கப் போவதாகவும் அது கூறியுள்ளது.

2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை நடத்த இங்கிலாந்து, ரஷ்யா, பெல்ஜியம்-நெதர்லாந்து, போர்த்துக்கல்-ஸ்பெயின் போன்ற நாடுகளும், 2022ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை நடத்த அமெரிக்கா, கட்டார், அஸ்திரேலியா, ஜப்பான்-தென்கொரியா ஆகிய நாடுகளும் போட்டி போடுகின்றன.

2018 மற்றும் 2022ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை நடத்த வுள்ள நாட்டை, வரும் டிசெம்பர் 2ஆம் திகதி 'பிபா'வின் 24 செயற்குழு உறுப்பினர்கள் வாக்களிப்பு மூலம் தெரிவு செய்வார்கள்.

# ஆஸிக்கெதிரான ஆட்டத்தில் இந்திய அணி அபார வெற்றி




விசாகப்பட்டிணத்தில் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் இந்தியாவில் நடைபெற்றுவருகிதறு.

முன்னர், கொச்சியில் நடக்கவிருந்த முதலாவது ஒரு நாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது. இந்நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது ஒரு நாள் போட்டி, பகல் - இரவு மோதலாக விசாகப்பட்டிணத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணிக்கு, ஷான் மார்ஸ் (0) - டிம் பெய்ன் (9) ஜோடியின் ஆரம்பம் அதிர்ச்சியளித்தது.

இவர்கள் இருவரும் நெஹ்ரா வின் பந்துவீச்சில் வீழ்ந்தனர்.

எனினும், பின்னர் இணைந்த கிளார்க்கும், மைக் ஹஸியும் அணியைச் சரிவிலிருந்து மீட்டனர். நிதானமாக ஆடிய இந்த ஜோடியைத் தமிழக வீரரான அஷ்வின் பிரித்தார். மைக் ஹஸி 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதைத் தொடர்ந்து துணை அணித்தலைவர் கமரூன் ஒயிட், கிளார்க்குடன் இணைந்து சிறப்பாக ஆடினார். மைக்கல் கிளார்க் தனது 5ஆவது சதத்தை ஒரு நாள் போட்டியில் பூர்த்தி செய்தார். இது இந்தியாவுக்கு எதிராக அவர் பெற்ற 2ஆவது சதமாகும்.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஆஸ்திரேலிய அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 289 ஓட்டங்களைக் குவித்தது. கிளார்க் 111 ஓட்டங்களுடனும், தனது 11ஆவது அரைச் சதத்தைக் கடந்த கமரூன் ஒயிட் 89 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

பின்னர், 290 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு, தவான் (0) அதிர்ச்சியளித்தார்.

அவரைத் தொடர்ந்து விஜயும் (15) வெளியேறினார். எனினும், பின்னர் இணைந்த விராத் கோஹ்லியும், யுவராஜ்சிங்கும் கைகோத்து அணியை நல்ல நிலைக்கு உயர்த்தினர். சிறப்பாக ஆடிய யுவராஜ்சிங் 58 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் வெளியேறினார்.

விராத் கோஹ்லி தனது 3ஆவது சதத்தைப் (118) பூர்த்தி செய்த சிறிது நேரத்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த அணித்தலைவர் டோனி (0) வந்த வேகத்தில் நடையைக் கட்டினார்.

இறுதியில், இந்திய அணி 48.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 292 ஓட்டங்களைக் குவித்து, 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ரெய்னா (71), சௌரப் திவாரி (12) ஆகியோர் கடைசி வரை களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில், இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. 3ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி கோவாவில் நாளைமறுதினம் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## மிரட்டிய பந்துகள்!

இந்தியாவிற்கு எதிரான இரண்டாவது போட்டியின்போது, கமரூன் ஒயிட் எல்லைக்கோட்டுக்கு வெளியே அடித்த ஒரு பந்து, போட்டியைப் பார்த்துக்கொண்டிருந்த முதியவர் ஒருவரைப் பதம் பார்த்துவிட்டது. பந்து தாக்கியதால் அவரது மூக்கு உடைந்து ரத்தம் கொட்டியது. உடனடியாக அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதேபோல், கிளார்க் 46ஆவது ஓவரில் நேராக ஒரு பவுண்டரி விளாசியபோது, நடுவர் பில்லி பௌவ்டன் குனிந்து தப்பிவிட்டார்.

ஆனால், அந்த அதிர்ச்சியிலிருந்து அவர் மீள்வதற்கு சிறிது நேரம் பிடித்தது. அந்த அளவுக்கு அந்தப் பந்து அசுர வேகத்தில் பறந்து சென்றது.

## ஹட்ரிக் வெற்றி!

விசாகப்பட்டிணம் மைதானத்தில் இந்தியா தொடர்ந்து பெற்ற 3ஆவது வெற்றி [ஹட்ரிக்] இதுவாகும். இதற்கு முன்பாக இங்கு நடந்துள்ள இரு ஆட்டங்களிலும் [2005ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக, 2007ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக] இந்திய அணி வெற்றி பெற்றிருக்கிறது.

# சிறிது கால அவகாசம் கோருகிறது கொச்சி!

கல்கத்தா, ஒக். 22

கொச்சி அணியின் பங்குகள் தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் சபைக்கு, கொச்சி அணி நிர்வாகத்தினர் முறைப்படி பதில் அனுப்பியுள்ளனர். அதில், இன்னும் தமக்கு சிறிது காலம் தரும்படியும் கோரியுள்ளனர்.

பல்வேறு முறைகேடுகள் தொடர்பாக ராஜஸ்தான் ரோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் நீக்கப்பட்டன. இதுதவிர, பல்வேறு உரிமையாளர்களைக் கொண்ட கொச்சி அணியை யார் நிர்வகிப்பது என்பதில் பிரச்சினை ஏற்பட்டது.

இந்த அணியின் 75 சதவீத பங்குகளை ஆங்கர் எர்த், பிரினி டெவலப்பர்ஸ், ரோசி புளு மற்றும் பிலிம் வேவ் நிறுவனங்கள் வைத்துள்ளன. மீதமுள்ள 25 சதவீத பங்குகளை கெய்க்வாட் குடும்பம், சைலேந்திரா உள்ளிட்ட பலர் வைத்துள்ளனர். இதனால் இவர்களுக்குள் ஏற்பட்ட சிக்கலைச் சரிசெய்ய இந்தியக் கிரிக்கெட் சபை சார்பாக 10 நாட்கள் கெடு விதிக்கப்பட்டது.

இந்தக் கெடு நேற்றுமுன்தினத்துடன் முடிந்த நிலையில், கொச்சி அணி சார்பாக அவசரஅவசரமாகப் பதில் அனுப்பப்பட்டுள்ளது.

இதுகுறித்து கிரிக்கெட் சபைத் தலைமை அதிகாரி ரத்னாகர் ஷெட்டி கூறுகையில், கொச்சி அணியினர் கிரிக்கெட் சபைத் தலைவர் மனோகருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர். இதன் விவரம் முழுமையாகத் தெரியாது.

எனினும், அவர்கள் தமக்கு சிறிய கால அவகாசம் கேட்டுள்ளனர். இதுகுறித்து சட்ட நிபுணர்கள் ஆய்வுசெய்த பிறகே, முடிவு எடுக்க முடியும்,'' - என்றார்.

கொச்சி அணியின் பதில் திருப்தியளிக்கவில்லை எனில் பஞ்சாப், ராஜஸ்தான் அணிகளின் வரிசையில் இந்த அணியும் அடுத்த ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க முடியாது. அதா வது, அணியின் ஏலம் ரத்துச் செய்யப்படும் எனத் தெரிகிறது.




# அறிமுகமான நால்வர்!



ஷிகர் தவான் சௌரப் திவாரி ஜோன் ஹேஸ்டிங்ஸ் மிட்செல் ஸ்டார்க்

இந்தியா, ஆஸ்திரேலியா இரு அணிகளிலும் தலா 2 வீரர்கள் அறிமுக வீரர்களாகக் களமிறக்கப்பட்டனர். இந்திய அணியில் ஷிகர் தவான், சௌரப் திவாரி ஆகியோர் தமது முதலாவது சர்வதேசப் போட்டியில் ஆடும் வாய்ப்பைப் பெற்றனர்.

இதேபோல், ஆஸ்திரேலிய அணியில், வேகப்பந்து வீச்சாளர்களான மிட்செல் ஸ்டார்க், ஜோன் ஹேஸ்டிங்ஸ் ஆகியோர் முதல்முறையாக சர்வதேசப் போட்டியில் இடம்பிடித்தனர்.

## முதல் போட்டியில் 'டக்—அவுட்'!

இந்திய அணி சார்பாக சர்வ தேசப் போட்டியில் அறிமுகமான தவான், 'டக்-அவுட்' முறையில் ஆட்டமிழந்திருந்தார்.

இதன்மூலம், அறிமுகப் போட்டியில் 'டக்-அவுட்' ஆன 17ஆவது இந்திய வீரரானார்.

இதற்குமுன்னர், டெண்டுல்கர், டோனி, ரெய்னா உள்ளிட் டோரும் தமது அறிமுகப் போட்டியில் 'டக்-அவுட்' ஆனவர் கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## யுவராஜ் 50 அடித்தால் இந்தியாவுக்கு வெற்றி!

யுவராஜ் 50 ஓட்டங்களைக் கடந்தால் அதில் இந்தியா வெற்றி என்ற நிலையே இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் காணப்பட்டது. நேற்றுமுன் தினம் நடந்த போட்டியிலும் அது நிரூபணமாகியுள்ளது.

# மான்செஸ்டர் மரியாதை தரவில்லை அதனால்தான் வெளியேறுகிறேன்!



''மான்செஸ்டரில் எனக்கு மரியாதை கிடைக்கவில்லை. அதனால்தான், அந்த அணியைவிட்டு நான் வெளியேறுகிறேன்.''

- இவ்வாறு இங்கிலாந்து அணியின் முன்கள வீரரான வேயர்ன் ரூனி கூறியுள்ளார். மான்செஸ்டர் யுனைடெட் அணியின் பயிற்சியாளரான பெர்குசனுக்கும், வேயர்ன் ரூனிக்கும் இடையிலான மோதல் முற்றியுள்ள நிலையில், இந்த மோதல் குறித்து ரூனி நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், தாம் வெளியேறுவதற்கான காரணங்கள் குறித்து மான்செஸ்டர் ரசிகர்களுக்கு விளக்கம் கொடுக்கும் வகையிலேயே ரூனி கருத்துத் தெரிவித்துள்ளார். அதில் அவர் கூறியுள்ளவை வருமாறு:-

''கடந்த வாரம் மான்செஸ்டர் யுனைடெட்டின் தலைமை நிர்வாக அதிகாரி டேவிட் கில்லைச் சந்தித்து, அணியில் எனது எதிர்காலம் குறித்து விவாதித்தேன். அவரிடமிருந்து எனக்கு நல்ல பதில் கிடைக்கவில்லை. அப்படியென்றால், எனது ஒப்பந்தத்தை மான்செஸ்டருடன் புதுப்பிக்கமாட்டேன் என்றேன்.

இதற்கிடையே, நேற்றுமுன்தினம் பெர்குசன் அளித்த பேட்டி ஒன்றில், ''ரூனிக்கு என்று, தனி ரசிகர் பட்டாளம் உள்ளது'' என்று கூறியுள்ளமை எனக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. என்றார். ''நானும் எனது முகவரும் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் எனது ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பது குறித்துப் பேசிவருகிறோம். ஆனால், அதற்கு பெர்குசனிடமிருந்தோ அல்லது மான்செஸ்டர் யுனைடெட் நிர்வாகத்திடமிருந்தோ சரியான பதில் கிடைக்கவில்லை. எனக்கு மரியாதை கிடைக்காத இடத்தில் நான் எப்படி இருக்க முடியும்? அதனால்தான் அணியைவிட்டு வெளியேற முடிவுசெய்தேன்'' - என்றார் ரூனி.

## லலித் மோடியுடன் சமரசப் பேச்சுக்கு இடம் கிடையாது

லலித் மோடி மீதான ஊழல் விசாரணைக் குழு மாற்றியமைக்கப்படாது என இந்தியக் கிரிக்கெட் சபை கூறியுள்ளது. அதேவேளை, லலித் மோடியுடன் சமரசப் பேச்சுக்கும் இடமில்லை என்றும் கூறியுள்ளது. நேற்றுமுன் தினம் இரவு விசாரணைக் குழுவில் உள்ள அருண் ஜெட்லி, லலித் மோடியின் சட்டத் தரணிகளான மொகமட் ஆப்தி மற்றும் ராம் ஜெத் மிலானி ஆகியோருடன் சமரசத் தீர்வுக்கு பேச்சு நடத்தினர் என செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்தச் சந்திப்பு நிகழ்ந்ததை ஒப்புக்கொண்ட கிரிக்கெட் சபை, அங்கு சமரசத்திற்கான சமன்பாடுகள் எதுவும் நிகழவில்லை என்று கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் தேவாலய எதிர் ஒழுங்கை, முதலி கோயிலடி அருகில் 2 பரப்பு, 3½ பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு :- ஏ.தேவஅருள்ராஜா. தொ.பே :- 0213210917, 0778893655


# மரண அறிவித்தல்கள்

## நடராசா சிதம்பரம் (பாக்கியம்)



காரைநகர், களபூமி, பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிதம்பரம் (பாக்கியம்) நேற்று (21.10.2010) வியாழக்கிழமையன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் நடராசாவின் அன்பு மனைவியும், தவமணி, தனராசசிங்கம், லோகேஸ்வரி, சுந்தரராஜா, தவநாயகி ஆகியோரின் அன்புத்தாயும் மாணிக்கவாசகர், வசந்தகோகிலம் காலஞ்சென்ற தியாகலிங்கம் மற்றும் வளர்மதி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னாவளை,*
*களபூமி, காரைநகர்.*

தகவல் :
**பிள்ளைகள், மருமக்கள்**

(104973)

## திருமதி அ.அமிர்தநாதன் பிரான்சிஸ்கா



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மன்னார், பெரிய கமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அ.அமிர்தநாதன் பிரான்சிஸ்கா 19.10.2010 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அன்ரன் அமிர்தநாதரின் (சிந்தாத்துரை) மனைவியும் நிக்ஷன் தயாநிதி (தயான் - இத்தாலி), சுதர்ஷினி (தயா - சுவிஸ்), ரொனால்ட் சுதர்சன் (தர்சன் - இத்தாலி), தீபதர்சினி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சுவாணி அரியற் - மார்த்தம்மா தம்பதியரின் மகளும் சந்தியோகு மத்தியூஸ் (இராயப்பு) - மேரி யோசப் தம்பதியரின் மருமகளும் அரியமலர், கீதபொன்கலன், திருமதி சிலுவைராசா, விசிறித்தம்மா (லண்டன்) காலஞ்சென்றவர்களான அகஸ்ரின், பிலேந்திரன், திருமதி அல்பிரட் அஞ்சலா, அருளப்பு (தேவதாஸ்) மற்றும் சகோதரி மெற்றில்டா சுவாணி (இலங்கை பெந்தகோஸ்தே சபை ஊழியர்), அமிர்தநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை அவரின் இல்லத்தில் நாளை (23.10.2010) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்று, மன்னார் பொதுச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 2/46, 2ஆம் ஒழுங்கை,*
*பெரியகமம், மன்னார்.*
*தொ.பே : 0772858267,*
*0772310503*

தகவல் :
**பிள்ளைகள்.**

(ஏ/372092)

## சோமசுந்தரம் பத்மநாதன் (பெரியண்ணை)

**(செயலாளர், அறங்காவல் சபை, சீரணிநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், சண்டிலிப்பாய்)**



சீரணி,சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பத்மநாதன் (இளைப்பாறிய விவசாயப் போதனாசிரியர்) நேற்றுமுன்தினம் (20.10.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திராவதி (இளைப்பாறிய விவசாயப் போதனாசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மாணிக்கம் சோமசுந்தரம் மற்றும் நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் கரம்பனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகசபை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மநேசன், பத்மதேவன், பத்மானந்தன், பத்மசுந்தரி, பத்மரஞ்சினி, திலகவதி, பத்மஜோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகுருநாதன், குகதாசன் சேனாபதி, சிவநேசன், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் நாகராஜேஸ்வரி , புஸ்பா காலஞ்சென்றவர்களான பரிமளபாக்கியம், அம்பிகாவதி மற்றும் வித்தியாவதி, இந்திராவதி, திலகவதி, பாலேந்திரா, மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான நித்தியானந்தன் பத்மநாதன் மற்றும் காங்கேயன், செல்லத்துரை, கருணாகரன் ஆகியோரின் சகலனும் சுரோஜினிதேவி, சரஸ்வதிதேவி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.10.2010) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பிற்பகல் 1.30 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சீரணிச்சந்தி,*
*சண்டிலிப்பாய்.*
*0213216975*

(104978)

தகவல் :-
**குடும்பத்தினர்**

## வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஒக். 22

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 840ஆம் இலக்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் "B" என்ற ஆங்கில எழுத்தும் 04/08/12/62 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 69 தெரிவாகியது.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

நான்கு இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டினை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக பத்து லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 5 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 304 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15,481 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 2,14,969 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

ஆங்கில இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 31,970 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (16)

## புற்றுநோய் தொடர்பான செயற்றிட்டக் கூட்டம்

தென்மராட்சி, ஒக். 22

சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்டத்தின் வடமாகாண லயன்ஸ் கழகங்களின் புற்றுநோய் நிதி செயற்றிட்டம் தொடர்பான கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதியிலுள்ள ஐஜஸ் சிற்றி கம்பஸ் மண்டபத்தில் நடைபெறும்.

கூட்டத்துக்கு முதன்மை விருந்திரக மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.ஜெயவக்ஸலனும் சிறப்பு விருந்தினர்களாக உதவி மாவட்ட ஆளுநர்களான லயன் பிரியந்த பெர்னாண்டோ, லயன் எஸ்.எஸ்.தங்கராசா ஆகியோரும் கலந்து கொள்வர்.

வடமாகாண லயன்ஸ் கழகங்களின் தலைவர்களையும், ஆளுநர் சபை அனைத்து உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட இணைப்பாளர் (புற்று நோய்) லயன் ரி.சற்குணராசா அறிவித்துள்ளார். (த-207)


**PERSONAL CLASS**
364, Stanley Road, Jaffna.
(Near DMI)

GAQ / BA Part-I
மீட்டல்-வினாவிடை
தமிழ்-K.தர்மராஜா
Hin.Cul-சிறீ
Pol.Sci-புவனதாஸ்
English-MAHESWARAN

SINHALA-
K.கார்த்திகேசு


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் திருமதி பிரேமவல்லி சற்குணராசா அவர்களின் அன்புத்தாயாரும் எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் காலஞ்சென்ற சி.கனகரத்தினம் அவர்களின் துணைவியாருமான

**திருமதி கலாவல்லி கனகரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(104975)

**பாடசாலைச் சமூகம்,**
யா/நாரந்தனை கணேச வித்தியாலயம்,
ஊர்காவற்றுறை.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் அருணாசலம் சோமசுந்தரம்**

**(கலாபூஷணம், சங்கீதபூஷணம், பண்ணிசைமணி, இசை அரசு, விரிவுரையாளர் - பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, இளைப்பாறிய ஆசிரியர், யாழ்/கனகரத்தினம் மகாவித்தியாலயம்)**

*19.10.2010* அன்று இறைபதமடைந்தமையினால் துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.

**பணிப்பாளர்,**
**உத்தியோகத்தர்கள்.**

(104976)


**TVU மூலம் தஞ்சாவூர் பல்கலைக்கழக தமிழ்ப் பட்டதாரி ஆகலாம்**

★A/L பரீட்சையில் 3 பாட சித்தி
★ஏனையவருக்கு நுழைவுத் தேர்வு
★வீட்டில் இருந்தவாறே தபால் மூலம் கற்கலாம்

**இலவச கருத்தரங்கு**

இன்று (22.10.2010) காலை 9.00 மணிக்கு மீசாலையில்
மாலை 2.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில்.

தொடர்பு: தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
49/5, யாழ்.வீதி, யாழ்ப்பாணம். 0778849647
கிளை: பாரதி, மீசாலை மேற்கு, மீசாலை.
0773174020, 0775835372.


## யுத்தத்தினாலும் வேறு அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட நலிவுற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்!

**GODS OWN CHILDREN FOUNDATION** அறக்கொடை நிதியம், யாழ். குடாநாட்டில் யுத்தத்தினாலும் அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் மற்றும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் யாழ். குடாநாட்டில் 6 விசேட பாடசாலைகளின் மூலமாகவும் விசேட இளைஞர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலமாகவும் உதவிசெய்கின்றது.

தற்போது சனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலின் கீழும் பருத்தித்துறை, புலோலி தெற்கு, புலோலியில் யுத்தத்தினால் உறவுகளை இழந்த சிறுவர்களுக்கான காப்பகத்தை புலோலி சிறுவர் கிராமத்தில் இயக்கிவருகின்றது.

மிக விரைவில் உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் யுத்தத்தினால் நலிவுற்ற சிறார்களை நாம் உள்வாங்கி நவீன வசதிகளுடன் கூடிய காப்பகங்களில், அவர்களுக்கு கல்வி வசதிகளையும் வாழ்வாதாரச் செயற்பாடுகளையும் தொழிற்கல்வியையும் தொழில் சந்தர்ப்பங்களையும் உருவாக்கிக் கொடுக்க உள்ளோம்.

இதன் முதற்கட்டமாக நவம்பர் 16ஆம் திகதி அன்று இவர்களுக்கான விசேட காப்பகம் திறந்துவைக்கப்படவுள்ளது.

பெற்றோர்களே! நலிவுற்ற சிறார்களின் நலன்விரும்பிகளே! சமூகசேவை நிறுவனப் பொறுப்பாளர்களே! வடக்கிலும் கிழக்கிலும் நலிவுற்ற சிறார்கள் எவரையேனும் உங்களுக்குத் தெரிந்தால் உடனடியாக எங்களுக்குத் தெரிவித்து எங்கள் காப்பகங்களில் அவர்கள் இணைய வழிசெய்யுங்கள்.

**தொடர்புகளுக்கு :**
**தொலைபேசி : 0773627055, 0774083656**
**உடன் தொடர்புகொள்ளுங்கள்.**

(ஏ/372091)

**GODS OWN CHILDREN FOUNDATION**
**140, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மண்ணின் கல்வி எழுச்சிக்கு
அரும்பணியாற்றும் பேராசிரியர் கலாநிதி
**தி.வேல்நம்பி** அவர்கள்
[முதுநிலை விரிவுரையாளர், முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் யாழ்.பல்கலைக்கழகம்]
அண்மையில் பேராசிரியராகப் பதவியுர்வு
பெற்றமையையிட்டுப் பாராட்டுவதுடன் அவர் மேலும்
பல பதவியுயர்வுகள் பெற்று கல்வி வளர்ச்சிக்கு மேலும்
பணிகள் பல புரிய காளியம்பாளை வேண்டுகின்றோம்.

காளியம்பாள் தேவஸ்தான பரிபாலன
சபையினரும் சங்கமும்,
இந்து இளைஞர் சங்கமும்.

காளிகோயிலடி,
சங்கானை.



# தேவை

DXN,ஸ்ரீலங்கா சர்வதேச வியாபார ஸ்தாபனக் கம்பனியுடன் இணைந்து தொழில் புரிய ஆர்வமுள்ள முகவர்களும் [STOCKIST] விநியோகஸ்தர்களும் [SELLERS] தேவை.எமது தயாரிப்புக்கள் யாழ். மக்களால் மிகவும் விரும்பி நம்பிக்கையுடன் பாவித்து பயனடைந்துள்ளது யாவரும் அறிந்ததே.

மேலும் இத்தொழிலை பக்கத் தொழிலாகவும் எம்முடன் இணைந்து செயற்படலாம்.4 மாதகாலங்களில் நீங்கள் விரும்பத்தக்க வருமா னத்தை ஈட்டக்கூடிய வாய்ப்பை உங்களுக்கு அமைத்துத்தரக்காத்திருக்கின்றோம்.இது சம்பந்தமான நேரடி சந்திப்பு வருகின்ற ஞாயிற்றுக்கிழமை (24/10/2010) மாலை 4 மணிக்கு இல.770, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள ஆரியாஸ் மெடிக்கா ஸ்ரோர் மேல் மாடியில் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.(0777-562620)

(104970)

**Magnum Investment (Pvt) Ltd**


# மரண அறிவித்தல்

## திருமதி கனகரெத்தினம் கலாவல்லி



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், தாவடிப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரெத்தினம் கலாவல்லி நேற்று (21.10.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம்- நல்லபிள்ளை தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி கனகரெத்தினத்தின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வநாதன் மற்றும், அருள்நாதன், பிறேமவல்லி (யா/நாரந்தனை வித்தியாலயம்), மதிவதனி (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), பிரியதர்சினி (யா/ ஆனைப்பந்தி மெ.மி.வி), சசிகலா (யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), இரவீந்திரநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தலீலா, சற்குணராஜா (சோதி புடைவையகம்) ஆகியோரின் மாமியாரும், மதுரா, விதுஷா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ் சென்றவர்களான மயில்வாகனம், திருமதி கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (22.10.2010) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெ ற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி கிழக்கு,
பிள்ளையார் கோயிலடி,
தாவடி.

தகவல்:
பிள்ளைகள்.

(104977)

# சுட்டெரிக்கும் வெயில் நெற் பயிர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.22

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த சில நாள்களாக சுட்டெரிக்கும் வெயிலினால் நெற்பயிர்கள் வாடும் அதேவேளையில் புற்கள் விரைந்து வளர்ந்து நெற்பயிர்களை மூடுவதாக நெற்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நெல்வயல்கள் நீரின்றி வறண்டு காணப்படுவதால் களைநாசினிகள் விசிறி புற்களை அழிக்க முடியவில்லையெனவும் தெரிவித்தனர்.

அடுத்து வரும் தினங்களில் மழை பெய்யாவிடின் நெற்பயிர்கள் வாடும் அபாயம் உள்ளதாகவும் தெரிவித்தனர்.

(த-207)


# வேலை வாய்ப்பு

பிரபல கணினி நிறுவனத்துக்கு பின்வரும் பாடநெறிகளுக்கு தகுதியானவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்.

வரவேற்பாளர் - பெண்
கணினி விரிவுரையாளர் - ஆண்,பெண்
Msoffice,Graphic Designing, VB, C, C++,Web Designing, Java, Maya, It, Premiere,3D Max, Accounting,Php.

சனிக்கிழமைக்கு முன்பாக தொடர்பு கொள்ளவும்:
077-6684302, 0113050111


# மட்டுவில் கமலாசினி பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

யாழ்ப்பாணம்,ஒக்.22

மட்டுவில் கமலாசினி வித்தியாலய பரிசில் நாளும் நிறுவுநர் தின நிகழ்வுகள் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட் கிழமை பி.ப. 2 மணிக்கு வித்தியாலய சுப்பையா அரங்கில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு யாழ்.மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் பொன்னம்பலம் சிவதாசனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராசமூர்த்தியும் கலந்து கொள்வர்.

நிறுவுநர் பேருரையினை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ. குமரன் நிகழ்த்தவுள்ளார்.

மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி.சிவமங்கை சிவதாஸன் வழங்குவார்.

(த-207)


சகல பிரிவினருக்கும் கணினி கற்கை நெறிகளுக்கான தனி மற்றும் குழுவினருக்கான புதிய பிரிவுகள் 23/10/2010 முதல் ஆரம்பமாகின்றன.

**விசேட கட்டணச் சலுகை.....!**

100% முழுமையான கணினி பயிற்சி நெறிகளுக்காக நீங்கள் நாடவேண்டியது எம்மை மட்டுமே...!



Diploma in.
Ms Office 2007
Web Design
Desktop Publishing
Macromedia Applications
Java Programming
Computer Programming
Video Editing
Digital Pre Press
4 months

Certificate in.
Spoken English -3 Months
Photo Shop CS3 - 2 Months
Pagemaker 7.0 - 2 Months
Internet & E-mail - 1 Month
Visual Basic 6.0 - 2 Months
Premiere with Effects -2 Months
Power Directot - 1 Month

மற்றும் சிறுவர்களுக்கான விசேட கற்கை நெறிகள் Kids Pre School

5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 120 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்களுக்கு விசேட கட்டணக் கழிவு. அரிய வாய்ப்பை பயன்படுத்துங்கள்.

Junior in Computer Science. Junior in Spoken English

மேலதிக விபரங்களுக்கு

**Global Computer Education**

தரமிக்க கற்கை நெறிகளுக்காகவே நாங்கள் உங்களுடன்.

#5, First Floor, New Market Building, Jaffna. Tel : 0113050111, 0776684302



ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

An ISO 9001:2000 Certified Company

**Spoken English** பயிற்சி மையம்

veta®

Experts in English Training



Come, let's speak fluent English

Foundation , First Step க்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி |
| --- | --- |
| Sat,Sun 8.30 a.m. | Tue,Thu 9.00 a.m. |
| Sat, Sun 10.00 a.m. | Sat, Sun 10.00 a.m. |
| Mon,Wed 10.30 a.m. | |

நவீன நுட்பங்களுடன் அடிப்படையில் இருந்து இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலலாம்.

**DMI COMPUTER EDUCATION**

DMI COMPUTER EDUCATION

No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel. : 021-222 4403

M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021 - 226 2470


# துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் அமைய பட்டதாரி உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி ந.இராஜகுமாரி அவர்களின் அன்புத் தாய்

## அமரர் சரஸ்வதி சிறீஸ்கந்தராசா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், உடுவில்.

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் பிரம்மஸ்ரீ பிட்சாடனக்குருக்கள் சோமசுந்தரக்குருக்கள்

[நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோயில் ஆதீன கர்த்தாவும் பிரதம குருவும்]

*துடிக்கும் நெஞ்சும் வழியும்*
*நீண்ட துயரங்களும் வரிகளில்*
*வடித்துவிட முடியுமா*
*மரணமென்னும் வலைக்குள்*
*மனிதன் விழ்வது நியாயம்*
*நீங்கள் விழ்ந்தது எவ்வகை நியாயம்*
*உம்முடல் தீயினில் கருகிடத் தாங்குமோ*
*எம் சமூகமது*
*என்றும் உம் நினைவுகளுடன்*

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

அன்னாரின் ஆத்மா எல்லாம்வல்ல மூத்த விநாயகரின் கழலடியை அடைய பிரார்த்திப்பதுடன் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின் றோம்.

**நீர்வேலி வாய்க்காற்றரவை ஆலய தொண்டர்களும் அடியார்களும்**

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி மகேஸ்வரி தங்கராசா

மண்ணில்: 02.12.1942
விண்ணில்: 21.09.2010

கடந்த (21.09.2010) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (23.10.2010) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னார் நோயுற்றவேளை கொழும்பு ஆஸ்பத்திரியில் இருந்தபோது சகல வழிகளிலும் உதவிசெய்த உறவினர்கள், நண்பர்களுக்கும் அவரின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும், பல்வேறு வழிகளிலும் அனுதாபங்கள் தெரிவித்த சகல உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவு ம்.

"அன்னபதி வாசா",
சிறுப்பிட்டி.

தங்கராசா குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்ப்பாசனத் திட்டங்களை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஸ்தரிக்கப்படும் போது அங்கே பாரம்பரியமாக வழும் சிறுபான்மை இனத்தவர்களும் குடியமர்த்தப்படவேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற மகாவலி அதிகாரசபைத் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மகாவலி துரித அபிவிருத்தித்திட்டம் 1977ஆண்டு கலஞ்சென்ற காமினியால் ஆரம்பிக்கப்பட்டது.

அவரால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மகாவலி குடியேற்றத்திட்டங்களிலும் 95 சதவீதம் பெரும்பான்மை சிங்களக் குடும்பங்களே குடியமர்த்தப்பட்டன. அங்கு சிறுபான்மை மக்கள் புறக்கணிக்கப்பட்டனர் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இப்போது வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கும் மகாவலி நீரைக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுப்பதாகக் கூறப்பட்டது.

அப்பகுதிகளில் குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது குடியியல் நிலைமைகள் பாதிக்கப்படாத வகையில் சிறுபான்மை இனத்தவர்கள் குடியமர்த்தப்படவேண்டும்.

அப்போது தான் இனங்களுக்கு இடையில் சகஜ நிலைமையும் பரஸ்பர நல்லுறவையும் ஏற்படுத்த முடியும் எனவும் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார். (சி)

## நல்லிணக்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுகள் ஆகியவற்றால் யுத்தத்தின் போது தாக்குதல் நடத் தப்பட்டதாக நல்லிணக்க ஆணைக் குழுமுன் சாட்சியமளித்த சிலர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து என்ன கூறுகின்றீர்கள் எனச் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்கு அமைச்சர் பதில் அளிக்கையில், இந்த விடயங்களைக் கண்டறிவதற் காகத்தான் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் முடி வுற்றதும் வெளியிடப்படும் அறிக்கை ஐ.நா.சபை உட்பட சர்வதேச சமூகத்துக் கும் வழங்கப்படும் - என்றார்.

படையினர் மக்களை சித்திரவதை செய்யும் படங்கள் குறித்தும் செய்தியாளர்கள் கேள்வி எழு ப்பினர்.

இந்தப் படங்கள் விடியோக்கள் அனைத்தும் போலியாக ஒரு குழுவால் தயாரிக்கப்பட்டவை. சனல் -4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான விடியோ பொய்யானதென நிரூபித்தோம். அது உண்மையானால் நிரூபிக்கும்படி சவால் விடுத்தோம். இன்றுவரை இதற்குப் பதில் இல்லை - என்றார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல. (சி)

## எழுத்து மூலமான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படாத வகையில் சமர்ப்பிக்க முடியும் என்று பான் கீ- மூனின் ஊடகப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கைப் படையினருக்கும் இடையிலான இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் பான் கீ - மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு சாட்சியங்களைத் திரட்டும் பணிகளை ஆரம்பித்துள்ளது.

சாட்சியங்கள் தொடர்பான விவரங்கள் மிகவும் இரகசியமாக வைக்கப்படும்.

இந்த நிபுணர் குழு எதிர்வரும் டிசம்பர் மாதம் 15ஆம் திகதிவரை மக்களிடம் எழுத்துமூலம் சாட்சியங்களையும், கருத்துகளையும் பதிவுசெய்யும். இவ்வாறு பதிவு செய்யவுள்ள சாட்சியங்கள் மற்றும் கருத்துகளை ஒன்றிணைத்து எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் அறிக்கை ஒன்றை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனிடம் நிபுணர் குழு சமர்ப்பிக்கவுள்ளது. - என்றார்.

இதேவேளை, ஐ.நா.நிபுணர் குழுவின் பணிகளுக்கு இலங்கை அரசு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும், இதனை ஓர் விசாரணைக்குழுவாக நோக்கவேண்டாம் என்றும் தமக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் இந்த நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் பான் கீ - மூன் தெரிவித்துள்ளார். (சி)

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஆகியோரின் சம்பளத்தை அதிகரிப்பதற் கான பிரேரனை கடந்த 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஏகமனதாக அங்கீகரிக் கப்பட்டிருந்தது.

இலங்கையின் அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஜனாதிபதி, பிரதமர்,அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் சம்பளமானது குறித்த நீதியரசர்களின் சம்பளத்தை விட அதிகமானதாக இருக்கவேண்டும் என்பது ஒரு விதியாகும்.

இந்த வகையில் எதிர்வரும் நாள்களில் ஜனாதிபதி, பிரதமர்,அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கான சம்பள அதிகரிப்புத் தொடர்பான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சின் ஊடாக சுற்றிக்கையொன்றை அனுப்புமாறு பணிப்புரை விடுத்துள்ளதாக குறித்த தகவல்களிலிருந்து மேலும் தெரியவருகின்றது.(த)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் ஜனநாயகம், மனித உரிமை கள் மற்றும் ஊடக சுதந்திரம் தொடர்பாக இலங்கை அரசு தெளிவான கடப்பாட் டைக் கொண்டுள்ளது எனத் தாம் நம்பு வதாகவும் அவர் கூறினார். இவை மட்டு மன்றி இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மற்றும் ஏனைய பல விடயங் கள் தொடர்பாகவும், பிரிட்டிஷ் - இலங்கை வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துரையாடி யுள்ளனர் என பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)


உ
சிவமயம்
"வாழ்க வளமுடன்"
புதுப்பொலிவுடன்
புதிய கடை திறப்பு விழா



ஸ்ரீ விகிர்தி வருடம் ஐப்பசி மாதம் 5ஆம் நாள் இன்று(22.10.2010) வெள்ளிக்கிழமை மதியம் 11.15 முதல் 12.15 வரையுள்ள துலா லக்கினமும் ,ரேவதி நட்சத்திரமும், அமிர்த சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

"எஸ்.பி.நாதன் பிறைவேற் லிமிடெட்"
S.P.Nathan (pvt) Limited.

என்னும் பல்பொருள் வணிக நிலையம் இல.207,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஆரம்பிக்க இருப்பதால் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருகை தந்து திறப்பு விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.207,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-2224578, 0113158007. (104904) நிர்வாகம்.


### அறிவித்தல்

ஆ.மு.சு.மணி அடவு நிலையம், இல.111, கண்டி வீதி, கிளிநொச்சி என்னும் பெயர் முகவரியில் இயங்கிய எனது ஸ்தாபனத்தில் அடைவுவைத்து காலம் முடிவுறாதவர்கள் (2009-01-26 இற்கு முன்) தங்களுக்கு என்னால் வழங்கப்பட்ட அடவுச் சிட்டையுடன் இன்று (22.10.2010) வெள்ளிக்கிழமையிலிருந்து முப்பது நாள்களுக்குள் வருகைதந்து நானும் தாங்களும் அடவுவைத்ததும் அடைவு பெற்றதும் சம்பந்தமாகக் கலந்தாலோசிப்பதற்கு அழைக்கின்றேன்.

இல்111, கண்டி வீதி,
கிளிநொச்சி. (சி/572086)

சு.அருள்நாதன்
ஆ.மு.சு.மணி அடவு நிலையம்

### மரண அறிவித்தல்

திருமதி பொன்ராசா வித்தியானந்ததேவி (தேவா)

148, சேர் பொன் இராமநாதன் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேல் சாமியாரின் மகளான பொன்ராசா வித்தியானந்ததேவி நேற்று (21.10.2010) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

148, சேர்.பொன் இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.


கணக்கீடு
A/L - 2011 / Day கற்பனி
ஆரம்பம் : நாளை 4 P.m
A/L - 2012 தொடங்கல் கணக்கு
ஆரம்பம் : நாளை 3 P.m
S. தவா
B.Com [(Hons) (Acc.Spl)] (தவிப்பா அனுபதி உண்டு)
Universal, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ஆங்கிலம் தெரிந்தும் பேசமுடியாமல் இருக்கிறதா?
இலக்கண வசனங்களை உருவாக்கியோ, வசனங்களை மொழி மாற்றியோ ஆங்கிலம் பேச முடியாது
பேசுதலின்போது சிந்தையிலிருந்து ஆங்கில வசனங்கள் வர வேண்டும்
இலக்கணக்கற்றலோ, எழுத்துப்பயிற்சியோ, மனப்பாடமோ எதுவுமின்றி
தமிழ் தொடர்பில்லாத Channel ஒன்றினை உருவாக்குவதன் மூலமாக
இலகுவாக முழுமையாக சரளமாக ஆங்கிலத்தினை பேச முடியும்
சனி, ஞாயிறு 3 மாத பயிற்சி - புதிய பிரிவுகள் ஆரம்பம்
அரச, தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள், உயர்கல்வி மாணவர்கள் பயிற்சியில் சேரலாம்
MyWay English 182, Stanley Road Jafna 077 33 63 456

Visiting Classes
Spoken English With Grammar
மிகவும் குறுகிய காலத்துக்குள் இலகு வாக ஆங்கிலம் எழுத, வாசிக்க, கதைக்க வயது வேறுபாடின்றி யாவருக்கும் ஏற்ற முறையில் வீடுகளுக்கு வந்து கற்பித்து தரப்படும் மற்றும் இசை வகுப்புக்களான ஓகன், கிற்றார் ஆகியவையும் கற்பித்துத் தரப்படும். தொ.பே. 0777110523

கணக்கீடு A/L 2012
A.P. பகீரதன் B.B.A. (Fm Spl)
பிரிவு - I (வார இறுதி வகுப்பு) Sat, Sun 10-11am நேரங்கள் ச/ஞ ஆரம்பம்: 23.10.2010
பிரிவு - II (வார நாள் வகுப்பு) Tue, Thur-4-5am ... ஆரம்பம்: 20.10.2010
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

உடனடியாக வீடு வாடகைக்கு வழங்கப்படும்
இல.113, செம்மணி வீதி, நல்லூரில் சகல வசதிகளுடன் கூடிய நவீனமுறையிலான 5 அறைகள் கொண்ட விசாலமான வாகன தரிப்பிட வசதியும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
*அலுவலகப்பாவனைக்கும் குடும்பப்பாவனைக்கும் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-0773322886, 0775581490

வெளிவந்துவிட்டது
தரம்: 11 தேசிய பரீட்சைக்கானதும்
தரம்: 09 மாகாணப் பரீட்சைக்கானதுமான
முழு மாதிரி வினாப்பத்திரங்களும் ஏனைய வகுப்புக்களுக்கான மூன்றாம் இடைத்தவணை வினாப்பத்திரங்களும் வெளியாகியுள்ளன.
தரம் 4 முதல் O/L வரையான அக்கடமி வெளியீடு பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலைகளில் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்

இதோ உங்களுக்கு ஒரு நற்சந்தர்ப்பம்!
மரத்தளபாடச் சந்தையும், பொருட்காட்சியும்



2010 ஒக்டோபர் 20ஆம் திகதி முதல் நடைபெறுகிறது
மு.ப. 9.00 மணியிலிருந்து இரவு 10.00 மணிவரை
யாழ்ப்பாணம், வேம்படிச்சந்தியில்.
யாழ்.மக்களின் வேண்டு கோளுக்கு அமைய நவீன வடிவமைப்புக்களில் உயர்ந்த வேலைப்பாடுகளுடன் கூடிய உங்களுக்குத் தேவையான வீட்டுத் தளபாடங்கள் யாவற்றையும் இரண்டு வருட உத்தரவாதத்தின் கீழ் நியாய விலையில் நேரடியாக உற்பத்தியாளர்களிடமிருந்தே இங்கு கொள்வனவு செய்யலாம்.
(104969) அனுமதி இலவசம்

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel:021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
25-10-2010
Batch-3 09.00am-10.30am & 11.00am - 12.30pm
Batch-4 02.00pm-03.30pm & 04.00pm-05.30pm


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org